R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM
FEBRUARY 2017
மலர் 20
இதழ் 12

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS

V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acdes
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN
Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HA0 4YA
Tel : 02089030909

THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

இனியும் நம்பலாமா?

அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும். காணாமல் போகடிக்கப்பட்டோர் பிரச்சினைக்கு முடிவு காணப்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

இந்த முக்கியமான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து பெரும் அறவழிப்போராட்டம் ஈழ மண்ணில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

'என் மகன் எங்கே? என் மகள் எங்கே? என் கணவர் எங்கே?' என்கிற துயரக்குரல்கள் பல ஆண்டுகளாக வீதிகளிலும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க குழுவின் முன்பாகவும் ஒலித்தன.

ஆனாலும் மக்களின் பிரதிநிதிகள் என்போர், சட்டத்தின் சரத்துகளை சாட்சியாக வைத்து, புதிய ஆட்சியாளர்கள் மீது கறைபடியாமல் பார்த்துக் கொண்டார்கள்.

'படிப்படியாகச் செய்வோம், மென்வலு மூலம் செய்வோம்' என்று 7 ஆண்டுகளைக் கடத்தி விட்டார்கள் நம் தமிழ் தலைவர்கள்.

இதிலுள்ள சோகம் என்னவென்றால், போராட வேண்டிய தமிழர் தலைமைகள், இனவாத ஆட்சியாளர்களை காப்பாற்றும் விதமாக பேசுவதும், ஒடுக்குமுறையாளர்களை இதயக்கனிகளாக சித்தரிப்பதும் கொடுமையிலும் கொடுமை.

இணக்க அரசியல் பேசும் தமிழ் அரசியல்வாதிகளும், உண்ணாவிரதம் இருக்கும் இடத்திற்குச் செல்வதும், 'மைத்திரியோடு பேசுகிறோம். மகிந்தவோடு பேசுகிறோம்' என்று போராடும் மக்களுக்கு பொய் வாக்குறுதி கொடுப்பதே வரலாறாகிவிட்டது.

கொஞ்சம் அசந்தால், 'நீங்கள் போராடினால் சிங்கள இனவாதச் சக்திகளான மகிந்த கோஷ்டிக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கொடுத்தது போலாகிவிடும்' என்று எச்சரித்து, ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

அதுமட்டுமா...அமெரிக்கா பெற்றுத்தரும், ஐ.நா. தட்டில் வைத்துத் தருமென்று இன்னொரு கூட்டம் கோட்டுச் சூட்டோடு கிளம்பிவிடும்.

இதைவிட 'புலித்தேசிய அரசியல், தமிழ் தேசிய அரசியல் எல்லாம் சரிவராது, முற்போக்கு அரசியலே முக்கியம்' என்றவாறு சிவப்பு முகமூடிகளை போட்டுக்கொண்டு, மேற்குலக சித்தாந்திகள் புலம்ப ஆரம்பித்து விடுவார்கள்.

இந்தியா இல்லாமல் இந்து சமுத்திரப்பிராந்தியம் சுழலாது, இது வட இந்தியருக்கும் பௌத்த சிங்களவருக்குமிடையிலான பனிப்போர், காவிப்போரென, வெள்ளையடிக்கத் தொடங்கிவிடுவார்கள் சிலர்.

ஆனால், இந்தச் சொற்பொழிவுகளும், மென்வருடல்களும், சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளால் காணாமல் போகடிக்கப்பட்ட எம்உறவுகளின் உறவுகளுக்கு, என்ன தீர்வினைப் பெற்றுக்கொடுக்கப்போகிறது?.

இந்த அரசியல்வாதிகளை இனியும் நம்பாமல், தமது உரிமைக்காக போராட்டங்களை தாங்களாகவே முன்னெடுப்பதுதான் சரியானதும் பொருத்தமானதுமாகும்.

KULENDRAN IMMIGRATION
LAW CHAMBERS
90 High street, Colliers Wood, London, SW19 2BT
Tel: 020 85428222
020 86824494
020 8286 7537 (Appointments)
020 8767 5156 (Evenings only)
We are teamed with Barristers & Solicitors to advice & assist our clients
- Immigration & Asylum
- Entry Clearance- EEA Applications
- Appeals (Appearance & Assistance)
- Bail hearings & European Court
- Police Station Attendance
- Criminal Law
- Benefits Appeals
(All other aspects of Legal matters)
merton member
Recommened By
The Merton Chambers Of Commerce
Mr.Pires on 079 8533 9948
for Criminal matters
Police Station &
Traffic offences (24Hrs)
Translation &
Interpreting Services

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
FREE LYCAMOBILE TOP-UP

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்

INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான
Tamil Super hit
திரைப்படங்கள்

INCLUDED
EROS NOW
6000க்கும் அதிகமான
Hindi &Tamil
திரைப்படங்கள்

விசேட சலுகை ஒருவருட
இணைப்புச் சந்தா
LYCATV SET TOP BOX உடன்

£99
மட்டுமே

Roku tv AirPlay chromecast amazon fireTV Samsung SMART TV Panasonic LG Smart TV SONY kindle fire

SUBSCRIBE NOW!

UNITED KINGDOM
0207 132 2727

Go Online
www.lycatv.tv

எதிரொலிக்கும் மக்களின் உரிமைக்குரல்

இந்த வாரம் இலங்கை தொலைக்காட்சி விவாதமொன்றினை பார்க்க நேர்ந்தது.

பூகோள அரசியல், தீர்வு அரசியல், இராஜதந்திர அரசியல், நல்லிணக்க அரசியல் என்று பல விடயங்கள் ஒரு மணி நேரத்துள் விவாதிக்கப்பட்டது.

அத்தோடு வடமாகாண சபையிலிருந்து வடகொரியா வரை பேசப்பட்டது.

நல்லவேளையாக வன்வலு, மென்வலு பற்றி யாரும் பேசவில்லை.

ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் பேரம்பேசும் வலு என்பது 'மக்கள் சக்தி' மட்டுமே.

பேரம்பேசும் தளத்தில் ஆயுதபலமும், அரசியல் பலமும், சர்வதேச ஆதரவுப் பலமும் பின்னிப்பிணைந்திருக்கும். 2009 இற்கு முன்னரான ஈழப்போராட்ட காலத்தில் இதனை உணர்ந்துள்ளோம்.

'எழுக தமிழ்' போராட்டக்களமானது அதை பிரயோகிக்கும் முதல்படி என்கிற தனது நிலைப்பாட்டினை முன்வைத்தார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

'வெறுமனே தத்துவக் கட்டுக்குள் இருந்தால் யதார்த்தநிலையை புரிந்து கொள்ள முடியாது' என்கிற வாதம், தமிழ் தேசியவாதிகளை மட்டுமல்ல பொதுவுடைமைச் சிந்தனையாளர்களை நோக்கியும் முன்வைக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

குறிப்பாக கஜேந்திரகுமார் அவர்களை நோக்கியே இவ்வாறான கேள்வி முன்வைக்கப்படுவதை நாம் அறிவோம். இது குறித்த விவாதம் மக்கள் மத்தியில் எழாமல் தவிர்ப்பதற்கே, இந்த எதிர்வினையாற்றல் நிகழ்கின்றதோவென எண்ணத் தோன்றுகிறது.

ஒரு அரசியலமைப்பிற்குள், மதங்களுக்குள், பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் எத்தனைவிதமான தத்துவக்கட்டுக்களும், அதன் விளக்கவுரைகளும் கலந்திருக்கின்றன.

காரல்மார்க்ஸ், அடம் ஸ்மித் தொடக்கம் கெவியன், தோமஸ் பிக்கெட்டி வரை, பலவிதமான பொருளாதாரத் தத்துவங்களையும் அதன் வடிவங்களையும் எமக்கு விட்டுச் சென்றுள்ளார்கள்.

சாத்தியமான தீர்வினை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின், யதார்த்த நிலையோடு ஒட்டிச் செல்ல வேண்டும் என்கிற கருத்து, ஒரு பலவீனமான பக்கத்தின் எதிரொலியாகும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் யதார்த்தநிலையை மாற்றியமைக்கப்போராடுவது சமூக இயங்கியலின் முக்கிய குணாம்சமாகும்.

சிங்கள தேசமானது ஒரு உரிமையையும் தராது என்பது யதார்த்த நிலை.

அதனை ஏற்றுக்கொண்டு, சாத்தியமான தீர்வினை எவ்வாறு பெறுவது?.

பேசினாலும், ஆட்சிமாற்றத்திற்கு ஆதரவளித்தாலும், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாது என்பது வரலாற்றுபூர்வமான யதார்த்தநிலை.

இன்றுவரை, 2009 இற்குப் பின்னர் மக்கள் மிகமோசமாக ஒடுக்கப்படுவதும் சமகால யதார்த்தநிலைதான்.

'மக்களே....நீங்கள் சிங்கள பெருந்தேசிய இனவாதத்தினால் ஒடுக்கப்படுகின்றீர்கள்' என்று விழிப்புணர்வு ஊட்டுவதும் தவிர்க்கமுடியாத எதிர்வினையாற்றும் யதார்த்தநிலைதான்.

ஈழத்தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது, ஏனைய கட்சிகளால் -அமைப்புக்களால் முன்வைக்கப்படும் அரசியல் விமர்சனங்கள், தத்துவக் கட்டுக்கள் நிரம்பிய சொல்லாடல்களால் ஆனது என்பது ஒரு சிலரால் சுட்டிக்காட்டப்படும் விடயம்.

மக்களை அரசியல்மயப்படுத்தாமல், வெறுமனே வாக்குவங்கி அரசியலுக்கு மட்டும் பயன்படுத்தினால் இவ்வாறான கேள்விகள் எழும் என்பது யதார்த்தமான உண்மை. கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கைகளில் இச் சொல்லாடல்கள் துருத்திக் கொண்டு நிற்பதைக் காணலாம்.

'சிங்களத்திற்கு ஒற்றையாட்சி பிடிக்கும் சமஸ்டி பிடிக்காது. இந்தச் சொற்களை பயன்படுத்தாமல் அதே அர்த்தம் தரும் வேறுசொற்களை தீர்வு பொதிக்குள் வைத்தால் சிங்களம் ஏற்றுக்கொள்ளும்' என்று வர்ணிப்போர் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

அரசியல் தத்துவங்களுக்கு, அதன் கோட்பாடுகளுக்கு என்னதான் பெயர் மாற்றங்களை செய்தாலும் அதற்குப் பொழிப்புரை வழங்க மகா சங்கங்கள் தயாராகவிருக்கின்றன.

தத்துவம்- நடைமுறை பற்றியதான தெளிந்த அறிவு, ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது.

ஒற்றையாட்சிக்குள் சமஸ்டிகூடக் கிடையாது. ஆனால், சொற்கள் இடம்மாறிய மாகாணசபைகள் இருக்கும்.

வாக்குகளாக மாறிவிட்ட மக்களின் இறைமை, இப்போது சட்டமியற்றும் நாடாளுமன்ற வளாகத்தினுள் சங்கமமாகிவிட்டது. அது பெரும்பான்மையின மக்களின் இறைமையாகிவிட்டது.

முழுநாட்டிற்குமான சிங்கள தேசத்தின் (Nation) இறைமை குவிக்கப்பட்டுள்ள அதிகார மையத்தை கட்டுடைத்து, புதிதாக தமிழ் தேசத்தின் இறைமையைப் பங்கு போடும் ஒரு இணைப்பாட்சி அல்லது கூட்டாட்சி அதிகார மையத்திற்கு, பெருந்தேசியவாத பிதாமகர்கள் உடன்படுவார்களா?.

புரிந்து கொள்ளக் கடினமாகவிருக்கிறதா..!

இது அவர்களுக்கு நன்றாக விளங்கும். ஆதலால்தான், ஒற்றையாட்சிக்குள் இந்தத் தீர்வு அமைய வேண்டுமென சிங்களம் அடம்பிடிக்கிறது.

இதன் அடிப்படையை தமிழ் மக்களுக்குப் புரிய வைப்பவர்களை நோக்கி, 'தத்துவம்' பேசுகிறார்கள் என்று சொல்வது அபத்தமாகவிருக்கிறது.

இந்த காணொலி விவாதத்தில் இன்னுமொரு முக்கிய கேள்வியொன்றும் எழுப்பப்பட்டது.

எனது கட்டுரைகளில் பெரும்பான்மையான இடத்தினைப் பிடிக்கும் பூகோள அரசியல் குறித்தே அக்கேள்வி அமைந்தது.

'ஈழப்பிரச்சினையில் பூகோள அரசியல் நகர்வுகளின் பங்கு குறித்து, சாதாரண மக்களுக்கு எவ்வாறு விளங்கப்படுத்துவீர்கள்?' என்கிற கேள்வி கஜேந்திரகுமாரிடம் முன் வைக்கப்பட்டது.

சூடான், யுகோஸ்லாவாக்கியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், வல்லரசுகளின் தலையீடுகளையும் அவர் விபரித்தார்.

ஆனால், நம்ம நாட்டிற்குள்ளேயே அதனை புரிய வைப்பதற்குரிய பல விடயங்கள் இருக்கின்றன என்பது என் கருத்து.

புத்தளத்தில் வொய்ஸ் ஒப் அமெரிக்கா வந்திறங்கியபோதே பூகோள அரசியலின் ஆட்டம் இலங்கையில் ஆரம்பமாகிவிட்டது.

இலங்கையின் அரசியல் பள்ளியில், அமெரிக்க சார்பு - சோவியத் சார்பு அணிகளாக ஆளும்-எதிர்க்கட்சிகள் பிளவுண்டு இருந்தன. தற்போது சோவியத் அணியானது சீனா-இந்தியா சார்பு அணியாக மூன்றாம் பரிமாணத்தை எட்டியுள்ளது. அமெரிக்க அணியானது, நியாயமான தீர்வுப் பொதி இல்லாமல் நல்லாட்சி-நல்லிணக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி – 30ம் பக்கம்...

புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

"ஈழகேசரி" வெளியீட்டு நிறுவனத்துக்காக 20 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்களும் படித்து பட்டம் பெறலாம்

தமிழ் மொழியில் படித்து,
B.A. (Tamil), B.A (Applied Tamil)
M.A. (Tamil), B.Lit. (Tamil pulavar)
MBA (General– பொது முகாமைத்துவம்)
பட்டம் பெற வேண்டுமானால் இன்றே இப்போதே தொடர்பு கொள்ளுங்கள்.

WESTERN TAMIL SCHOOLS FEDERATION
07958408280/07946937000/02085400705
WWW.Wtsf.org.uk.
Web: WWW.b-u.ac.in WWW.Wtsf.org.uk.
email: joseph.vilvaraj@gmail.com/
kanmanohar@gmail.com

அச்சகத் தொழில் செய்வோர்,
பத்திரிகை நடாத்துபவர்கள்,
புத்தகங்கள் வெளியிடுவோர்,
மாதாந்திர சஞ்சிகை
நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி.,
திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள்
என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

Looking for an
ACCOUNTANT ?
We are next to you!
We provide solutions for your Accountancy needs

உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார
ACCOUNTANCY
தேவைகளுக்கு
LONDON இல்
இயங்கும் தனித்துவமான ஸ்தாபனம்



Initial consultation is free
No fee for first three months

P & K ASSOCIATES
CIMA
PRACTISING CERTIFICATE HOLDER

193, Burnt Oak Broadway,
Edgware. Middlesex.
HA8 5EH

020 8958 8883
079 1613 4976
(Mr.P. Navendran)
www.pandkgroup.co.uk
pandkassociates@aol.com

"VISION OF LOVE"
Changing our Vision To Experience Love & Peace

Proudly Presents
Musical Evening by
Sangeetha Kalanidhi
Sri Sanjay Subramanian

Sri S Varatharajan (Violin) & Sri Neiveli B Venkatesh (Miruthangam)

Sunday, 19-02- 2017, 6.00pm
Richard Challoner School Hall, Manor Drive North
New Malden, Surrey KT3 5PE

***£15** (Front Stall) & **£10** (Rear Stall)*

For further details and tickets, please contact
07719806356 - 07885515698
07721647500 - 07817419034 - 07702 404 531

Supported by
Vani Fine Arts

www.facebook.com/Visionoflove.uk

Vision of Love is a Registered charity in England, No. 1170595

Register for free!

Email: info@uraavu.com
Tel: 02038070355

உறவு
uraavu.com

தமிழினத்தின் விழுதுகளாய் உலகெங்கும் வாழும்
தமிழ் நெஞ்சங்கள் தங்களுக்கான துணையை
தேர்ந்தெடுத்திட பதிவு செய்ய வேண்டிய
நம்பிக்கையான ஒரே இணையத் தளம்
Uraavu.com!

You can find your life partner who shares similar interests & values as you at Uraavu.com. Uraavu is powered by Ancient Vedic astrology and thrives on an advanced system for you to find your better half!



விமலின் பக்கம்

அறுபதுகளின் பிற்பகுதி அது. கொழும்பில் - இலங்கை சட்டக் கல்லூரி மாணவனாக நான் படித்துக் கொண்டிருந்த அந்த நாட்களில் ஊடகங்கள் அனைத்திலும் உரத்து ஒலித்துக் கொண்டிருந்த பெயர் 'வியட்னாம்'. கல்லூரி வகுப்புகள் முடிந்து மாலை நேரங்களில் இலங்கை வானொலியில் செய்தி வாசிப்பாளராக நான் கடமைக்குச் சென்றால் அங்கும் வியட்னாம், வியட்கொங், சைகோன் என்ற பெயர்கள் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கும்.

இப்போது 2017-ல் சிரியா, சிரியா என்ற புலம்பல்கள், சிரியாவில் இருந்து வெளியேறும் அகதிகள் பற்றிய இடைவிடாத செய்திகள்! 'சிரிய அதிபர் பஷீர் அல் அசாத் ஆட்சியை விட்டு விரட்டப்பட வேண்டும்' என்று அமெரிக்கா எழுப்பும் கூக்குரல்கள்.

அவர் ஏன் அகற்றப்பட வேண்டும் என்பதற்கு அமெரிக்க காட்டும் காரணங்களில் ஒன்று சிரியாவின் அதிபர் 'ரஷ்யாவுக்கு ஆதரவானவர் என்பதாகும். அமெரிக்காவின் பின்கோடியில் கியூபா என்றொரு நாடு அதன் தலைவராக சுமார் 50 வருட காலம் பதவியில் இருந்து அண்மையில் தனது 90-வது வயதில் உயிர் துறந்தார் பிடல் கஸ்ட்ரோ.

அவர் புரட்சித் தலைவர். சோவியத் யூனியன் அவரை ஆதரித்தது என்ற ஒரே காரணத்துக்காக அமெரிக்காவில் 1960 முதல் பதவி வகித்த கென்னடி முதல் அத்தனை அதிபர்களுமே கஸ்ட்ரோவை பகைவனாகக் கருதினார்கள். கியூபாவில் இருந்து தப்பி அமெரிக்காவில் சொகுசான வாழ்வு தேடி வந்த அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்கள் மூலம் கஸ்ட்ரோவை பதவியில் இருந்து கவிழ்க்க அமெரிக்கா முற்பட்டது. அமெரிக்காவின் சி.ஐ.ஏ. என்ற ஒற்றாடல் திணைக்களம் கஸ்ட்ரோ மீது 600-க்கு மேற்பட்ட கொலை முயற்சிகளை மேற்கொண்டு தோல்வி கண்டது. சுருட்டுப் பிரியரான கஸ்ட்ரோவுக்கு விஷ சுருட்டுக் கொடுத்தல், அவருடைய இரகசிய காதலியிடம் துப்பாக்கி கொடுத்தல் இப்படியான 'வடிவேலு பாணி' காமெடிகளை சி.ஐ.ஏ. மேற்கொண்டமை பதிவாகியிருக்கிறது.

சிரிய அதிபரைப் பதவி விலக்க வேண்டும் என்று அமெரிக்கா இன்று கூறும் 2-வது காரணம் - சிரிய அதிபர் தனது சொந்த நாட்டு மக்களையே கொன்று குவிக்கும் ஒரு சர்வாதிகாரியாம்!

ஓஹோ! அப்படியா?

அப்படியானால் - இலங்கை என்ற தீவில் தன் சொந்த நாட்டு மக்கள் மீது, குழந்தைகள் மீது, நோயாளிகள் மீது ராஜபக்ச சகோதரர்களும் இராணுவத் தளபதியும் நச்சுக் குண்டு வீசி பல்லாயிரம் இலங்கைத் தமிழர்களைக் கொன்றார்களே! அவர்களை ஏன் உடனடியாக அமெரிக்கா பதவியில் இருந்து விரட்டவில்லை? இந்த மூவரில் இருவருக்கு அமெரிக்காவில் குடி உரிமை(கிரீன் கார்ட்) இருக்கிறது என்பது ஒரு காரணமா?

இப்படியாக பிற நாடுகளில் அமெரிக்கா தலையிடுவதற்கு காரண காரியங்கள் இருக்கின்றனவோ - இல்லையோ கடந்த ஏழு தசாப்தங்களாக 2-ம் உலகப் போர் முடிந்த நேரம் தொடக்கம் அமெரிக்கத் தலையீடுகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

இன்று சிரியா, நேற்று ஈராக், நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தான் இப்படி ஒரு தீண்ட பட்டியலே இருக்கிறது. இப்படி ஒரு வருடம் இரண்டு வருடங்கள் அல்ல, 21 வருடங்கள் அமெரிக்கா போர் நடத்திய நாடு வியட்னாம்!

உலகப் போரின் பின் பிரெஞ்சு ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட்ட வியட்னாமின் வடக்கு-தெற்கு பகுதிகளை ஒன்றாக இணைக்க விரும்பினார்கள் சோவியத் ஆதரவு

நட்சத்திரக் குறியிட்ட பீர்கி

வியட்னாமிய வழிகாட்டி

ஹோ சி மின் நகர சதுக்கத்தின் மையப்பகுதியில் கையை உயர்த்தியபடி தலைவர் ஹோ சி மின் சிலை.

ஹோ ஷி மின் உருவச்சிலை மலர்மாலைகளுடன்

வியட்னாமிய ஆலயம்

கிளர்ச்சிப் படைகள். இதனை அமெரிக்கா விரும்பவில்லை. இராணுவ ஆலோசகர்களையும் அமெரிக்கப் படையினரையும் தெற்கு வியட்னாமில் குவித்து தெற்கு வியட்னாமில் எட்டப்பன் ஒருவரைத் தலைவனாக்கி வட வியட்னாம் கொம்யூனிச ஆட்சி மீது போர் நடத்தியது.

போர் என ஒன்று மூண்டுவிட்டால், எதிரி நாட்டில் பீரங்கிகளை, குண்டுகளை இறக்குவது ஒரு ஃபோர்முலா! புட்டிகளையும் குட்டிகளையும் இறக்கி எதிரிகளில் ஒரு சிலரை எட்டப்பர்கள் ஆக்குவது இன்னொரு விதமான போர் வியூகம்!

தமிழ் இனத்தின் ஒரு வீரத் தளபதிக்கு குட்டிகளையும் புட்டிகளையும் கொடுத்த சிங்கள அரசினர், அமைச்சர் பதவியையும் வழங்கியதன் விளைவைக் கண்டு இன்றும் நாம் கண்ணீர் வடிக்கின்றோம்.

வியட்னாமின் தேச பிதாவாக இன்றும் மதிக்கப்படுபவர் அமரர் ஹோ ஷீ மின்(ஒளியேற்றியவர் என்று கருத்து).

பிரிந்து சென்ற தென் வியட்னாமை வட வியட்னாமுடன் இணைப்பது அவரது கனவாக இருந்தது. 21 வருட போராட்டத்தின் பின் - 20 லட்சம் உயிர்கள் பறிக்கப்பட்ட பின் - அமெரிக்கப் படையினர் 58 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட பின் தென் வியட்னாம் சரணடைந்தது. அமெரிக்கப் படைகள் தலைநகர் சைகோனில் இருந்து வெளியேறின.

கொம்யூனிச அரசு சைகோனுக்கு 1976-ல் வழங்கிய புதிய பெயர் ஹோ ஷீ மின் நகர்! 1960/70-களில் ஊடகங்களிலும் படங்களிலும் நான் கண்ட வியட்னாமை நேரில் காணும் வாய்ப்பு கடந்த மாதம் எனக்குக் கிடைத்தது.

தெற்கு வியட்னாமில் அமெரிக்கப் படைகள் வந்திறங்கிய 'டனாங்' என்ற இடத்தில் இருந்து பேருந்து ஒன்றில் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். எமக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டவர் ஒரு வியட்னாமிய ஆசிரியர். ஆங்கிலம் சரியாகப் பேச முடியாவிட்டாலும் வியட்னாமின் வீர வரலாற்றை மனிதர் அள்ளி வழங்கினார்.

போர் முடிந்து பல வருடங்களாகிவிட்டாலும் வியட்னாமின் பொருளாதாரம் மிகவும் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. போரில் அமெரிக்கா வெற்றி காண்கிறதோ, இல்லையோ வியட்னாமியர்கள் என்றைக்குமே அமெரிக்கப் பண முதலைகளுக்கு அடிமைகள்தான் என்று முரசு கொட்டுவது போல, வறிய வியட்னாமிலும் மக்டொனால்ட், ஸ்டார் பக்ஸ், 7-11, மசாஜ் உடல் ஒத்தட நிறுவனங்கள் ஏராளமாகக் காணப்பட்டன. இத்தனைக்கும் வியட்னாமின் நாணயத்தின் பெறுமதியோ அதிர்ச்சி ஊட்டுகிறது.

ஒரு அமெரிக்க டொலர் = 22,568 வியட்னாமிய டொங். எதற்குமே பெறுமதியற்ற நாணயம் வியட்னாமிய டொங்.

வியட்னாமில் அமெரிக்கத் துருப்புக்களைக் குவித்து அமெரிக்காவில் பொதுமக்கள் அதிருப்தியைச் சம்பாதித்தவர் அப்போதைய அதிபர் நிச்சர்ட் நிக்சன். அவரும் அவரது ராஜாங்க அமைச்சர் கீசிங்கரும் வியட்னாமிய குளறுபடியின்

நிக்சனும் கிசிஞ்சரும்

நாயகர்கள்.

டனாங்கில் இருந்து ஹோ ஷீ மின் (முன்னாள் சைகோன்) நகருக்குச் சென்றபோது தேச பிதாவாக ஹோ ஷீ மின் வணங்கப்படுவதைக் கண்டேன்.

வியட்னாமின் கரன்சி நோட்டுகளிலும் அரசாங்க கட்டடங்களிலும் நகர சதுக்கங்களிலும் ஹோ ஷீ மின் அவர்களின் சிலைகளைக் காண முடிந்தது.

பள்ளிக்கூடங்களிலும் பாடப் புத்தகங்களிலும் அவரைப் பற்றி குழந்தைகள் படிக்கிறார்கள். அவரைப் பற்றி தவறான கருத்துக்களைப் பேசுவோர், எழுதுவோர், ஒலிபரப்புவோர் புரட்சியின் எதிரிகளாகத் தண்டிக்கப்படுகிறார்கள். ஹோ ஷீ மின் நகரில் நான் பார்த்த 'இன்னோர் இடம் அமெரிக்காவின் எட்டப்பன் அதிபர் தியூ, ஆட்சி நடத்திய அதிபர் மாளிகை. தற்போதைய கொம்யூனிச ஆட்சியில் இந்த மாளிகையின் பெயர் - 'சமரச மாளிகை'!

வட வியட்னாம் போரில் வெற்றி கண்டதும் எட்டப்பர் தியூ 1975 ஏப்ரல் 21-ம் திகதி தமது மூட்டை முடிச்சுகளுடன் தாய்வானுக்குத் தப்பி ஓடினார்.

'அதிபராக' அவர் வாழ்ந்த மாளிகை பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வாசலில் வியட்னாமிய கொம்யூனிச நட்சத்திரம் பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்று. 'சைகோன்'(ஹோ ஷீ மின்) கடை வீதிகளில் கொம்யூனிச நட்சத்திர அடையாளத்தையும் மக்டொனால்ட், ஸ்டார் பக்ஸ் போன்ற அமெரிக்க கடைகளையும் பார்க்கும்போது போரில் அமெரிக்கா தோற்றதா? வியட்னாம் வென்றதா? என்ற சந்தேகம்தான் வலுத்தது!

வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்தில் சிவாஜி கணேசன் சொல்வது போல 'இன்று எங்கள் நிலை தாழ்வாக இருந்தாலும் எதிர்காலத்தில் எங்களுக்கும் ஒரு காலம் வரும் - எங்களுக்கும் ஒரு வாழ்வு வரும்! என்று எங்கள் வியட்னாம் வழிகாட்டி சொன்னது என் செவிகளில் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது!

ஜெயராணி

மர்மமான ஜெயலலிதா!

மரணப்படுக்கையில் வீழ்ந்த தமிழகம்

மரணம் ஒருவரின் எல்லா தவறுகளையும் தடயம் இல்லாமல் அழித்து, எல்லா குற்றங்களில் இருந்தும் விடுவித்து, புனிதப்படுத்திவிட முடியுமா? முடியும். ஜெயலலிதாவுக்கு அவ்வாறே முடிந்திருக்கிறது. நேற்று வரை எது சர்வாதிகாரம் எனக் கண்டிக்கப்பட்டதோ, அது இன்று தலைமைப்பண்பு; எது ஆணவமாக அறியப்பட்டதோ, அது கம்பீரம்; திமிர் என விமர்சிக்கப்பட்டது எல்லாமே இன்று திறமையாகப் போற்றப்படுகிறது; செயலின்மை எனக் கருதப்பட்டவை, செயற்கரியச் சாதனைகளாக மாற்றப்பட்டுவிட்டன. தர்மபுரியில் மூன்று மாணவிகள் எரிக்கப்பட்ட போதும், தெருவுக்குத் தெரு மதுக்கடைகளைத் திறந்து மக்கள் உயிரைப் பறித்தபோதும், சிறையில் இருந்த நாட்களில் ரத்தத்தின் ரத்தங்கள் தமிழகத்தை வன்முறை பூமியாக்கிய போதும், செம்பரம்பாக்கம் ஏரிநீரைத் திறந்துவிட்டு, 'யார் செத்தால் எனக்கென்ன' என்று அமைதி காத்த போதும், 'இவரெல்லாம் ஒரு பெண்ணா?' எனத் தூற்றியவர்கள், இன்று அனைத்தையும் மன்னித்து, 'இரும்புப் பெண்மணி' என்ற பட்டத்தோடு ஜெயலலிதாவை வழியனுப்பி வைத்திருக்கின்றனர். சுமார் 40 ஆண்டுகால அரசியல் வாழ்வில், குடும்ப உறுப்பினரின் இழப்பைப் போன்ற நெருக்கத்தை மக்கள் உணர்ந்திருக்கலாம். அது மட்டுமல்ல, எப்போதும் தன்னை மிடுக்காகக் காட்டிக் கொள்ளும் ஒருவர், நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் கிடப்பது ஒருவிதக் கழிவிரக்கத்தைக் கோரியிருக்கலாம். அதெல்லாம் மனித இயல்புதான். அதனாலேயே ஜெயலலிதாவின் அத்தனை தவறுகளையும் எல்லோருமே மன்னித்து விட்டனர். மன்னிப்பு மாபெரும் நற்பண்புதான், மறுப்பதற்கு இல்லை. அதுவும் மரணித்துவிட்ட ஒரு (சர்வாதிகாரத்) தலைவருக்கு மன்னிப்பைத் தவிர வழங்குவதற்கு (பாதிக்கப்பட்ட) மக்களுக்கு வேறு வழி இல்லை. இப்படியான மன்னிப்பு அனைவருக்கும் கிடைக்கப் பெறுவது இல்லை. ஜெயலலிதாவுக்கு அளப்பரியதாக அது வழங்கப்பட்டுள்ளது. நல்லது, ஆனால், எது அச்சுறுத்துகிறது என்றால், இந்தச் சமூகத்தின் மறதி. எட்டுத்திக்கிலும் இருந்து ஓங்கி ஒலித்த புகழஞ்சலிகள், ஜெயலலிதாவை மன்னிக்க மட்டுமில்லை, அவரின் அனைத்து எதிர்மறைச் செயல்பாடுகளையும் மறந்துவிட்டதைச் சுட்டிக் காட்டியது. ரத்தத்தின் ரத்தங்களை விட்டுத்தள்ளுங்கள்... பொதுச் சமூகம், அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள், ஊடகத் துறை, திரைத்துறை, எழுத்தாளர்கள், சமூகப் போராளிகள் என எல்லோருமே ஜெயலலிதாவிடம் ஏதோவொரு நல்லதைத் தேடியதைக் கண்கூடாகப் பார்க்க முடிந்தது; அவரது ஏதோவொரு குணத்தோடு தம்மை இணைத்துப் பார்க்க எல்லோருமே முயன்றனர். அரசியல் தலைவர்கள், 'அவர் போராடும் குணம் கொண்டவர்' என்றனர்; பெண்கள், அவரை 'ஆணாதிக்கத்தைத் தகர்த்தவர்' என்றனர், ஊடகங்கள் பலவாறு அவரைப் போற்றிப் பாடின; கொள்கை ரீதியாக வேறுபட்டவர்கள் கூட அவரது புகைப்படத்தை முகநூலில், 'ப்ரொஃபைல் பிக்சர்' வைத்தனர். நல்லது கெட்டதை சீர்தூக்கிப் பார்க்கவியலாத உணர்ச்சிவசப்பட்ட சமூகமே, கும்பல் மனப்பான்மைக்கு ஆட்படுகிறது. ஒட்டுமொத்தத் தமிழகமே ஜெயலலிதாவிடம் இல்லாத மனிதப் பண்புகள் பலவற்றைக் கூறி அவரைப் புனிதப்படுத்துவதைப் பார்க்கும் போது, பேராபத்துமிக்க மறதி இங்கே கட்டமைக்கப்படுவதை உணர முடிந்தது. மக்களின் மறதி ஒரு சமூக நோய். தமிழகம் அந்த நோயால் வீழ்த்தப்பட்டுக் கிடக்கிறது என்பதை ஜெயலலிதாவுக்கு கிடைத்த புகழஞ்சலிகள் நிரூபிக்கின்றன.

ஜெயலலிதா இறந்த பிறகான இந்த ஒரு மாத காலத்தில், அவரைப் பற்றி ஆகச் சிறப்பானதொரு பிம்பம் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சியினரும் போற்றிப் புகழ்பாடும் இப்படியொரு திருப்பத்தை ஜெயலலிதாவே கற்பனை செய்திருப்பாரா தெரியவில்லை!

கோடிக்கணக்கான தமிழர்களின் ஒற்றைத் தலைவியாக முப்பதாண்டு காலம் அரியணையில் வீற்றிருந்தவர்தான். அந்த அரியணையில் ஏறி அமர ஒரு பெண்ணாக நெருப்பாற்றில் நீந்தி வந்தவர்தான். மும்முறை அவரது பதவி முடக்கப்பட்டதில் ஆறு முறை முதல்வரானார். தமிழக மக்கள் அவருக்கு மீண்டும் மீண்டும் வாய்ப்பளித்தனர் அல்லது அதற்கான 'சூழலை' அவர் உருவாக்கிக் கொண்டார். இறுதி வரையில், இறுதி ஊர்வலம் வரையில் ஜெயலலிதாவை அந்த அரியணையில் இருந்து இறக்காமலேயே வழியனுப்பிவைத்தது தமிழகம். ஆனால், அந்த நல்லுணர்வுக்குத் தகுதியான தலைவராக ஜெயலலிதா இருந்தாரா என்ற விஷயத்தை நாம் நேர்மையாக அணுக வேண்டும்.

நல்லவை எல்லாமே பேசப்பட்டுவிட்டன. ஜெயலலிதாவின் பிறப்பு, அவரது படிப்புத்திறன், அவரது வாசிப்பு ஆர்வம், சுறுசுறுப்பு, கலை ஆர்வம், துணிச்சல், சாதனைகள் என அவரது ஆளுமையைக் கட்டமைக்கும் விஷயங்களை வாய் வலிக்கிற அளவு பேசியாயிற்று; ரேகை தேய்கிற அளவுக்கு எழுதியாயிற்று; ஒரு நடிகையாக ரசிகர்களை மகிழ்வித்ததைவிடவும் மேலதிகமான ஆண்டுகள் அரசியல்வாதியாகச் செயலாற்றிய ஜெயலலிதா, ஒரு பேரியக்கத்தின் தலைவராகவும், தமிழகத்தின் முதல்வராகவும் அரியணையில் அமர்ந்து, அசைக்க முடியாத ஓர் ஆளுமையாக உருவெடுத்த பின்னர் நடந்தவைதான், நம் மறதிநோயில் அடித்துச் செல்லப்படும் ஆபத்தில் தத்தளிக்கின்றன.

இந்தச் சமூகம் உண்மையில் எதை மறந்திருக்கிறது எனில், ஜெயலலிதா என்ற தனிநபர் ராஜ்ஜியத்தின் இருண்ட காலத்தை... அதனால்தான் அடைந்த பெருந்துயரங்கள், இழப்புகளை, 1991-ல் தொடங்கி 2016 வரையிலும் மூன்று பொதுத் தேர்தல்களில்

வெற்றி பெற்ற போது, அவர் நடத்திய கொடுங்கோல் ஆட்சி இந்தச் சமூகத்தைப் பின்னோக்கி நகர்த்தியதே தவிர, முன்னோக்கி அல்ல. அ.தி.மு.க.வின் ஒன்றரைக் கோடி தொண்டர்களில் பெரும்பாலானோர் அடித்தட்டுச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அடிப்படையில் அது ஏழை மக்களின் கட்சி. ஒரு தேர்ந்த நடிகையாக ஏற்கெனவே மக்களிடம் பரவியிருந்த ஈர்ப்பு, எம்.ஜி.ஆர் மீது அடித்தட்டு மக்கள் கொண்டிருந்த பாசத்தின் தொடர்ச்சி, கூடவே எதிர்த்து நிற்கும் பிடிவாதக்குணம் என, அ.தி.மு.க.வினர் ஜெயலலிதாவை அங்கீகரித்ததன் பின்னணியில் இந்த மூன்று காரணங்களும் இருந்தன. எம்.ஜி.ஆருக்குப் பின்னர் கட்சி, ஜெயலலிதாவால் காக்கப்படும் எனத் தொண்டர்கள் நம்பினர். அவ்வாறே நடந்தது. கட்சி காப்பாற்றப்பட்டு தமிழகம் மரணப்படுக்கையில் வீழ்ந்தது.

இந்த 40 ஆண்டுகால அரசியல் வாழ்க்கையில், தொண்டர்கள் ஆதரவு ஒன்றே ஜெயலலிதாவைக் காப்பாற்றிவிடவில்லை. பார்ப்பனரான ஜெயலலிதாவுக்கு சமூகரீதியான அனைத்துப் பாதுகாப்பும் எல்லா மட்டத்திலும் அளிக்கப்பட்டது. கருணாநிதியின் ஊழல் வெறுக்கப்பட்ட அளவுக்கு ஜெயலலிதாவின் ஊழல் வெறுக்கப்படவில்லை; கருணாநிதியின் வன்முறைகள் விமர்சிக்கப்பட்ட அளவுக்கு ஜெயலலிதாவின் வன்முறைகள் விமர்சிக்கப்படவில்லை. கருணாநிதியின் நலத்திட்டங்கள் கண்டுகொள்ளப்படாத போது, ஜெயலலிதாவினுடையவை கொண்டாட்டப்பட்டன. அவர் செய்த எல்லா குற்றங்கள் மற்றும் தவறுகளில் இருந்து, அவரது சமூகத் தகுதி அவரைப் பாதுகாத்துக் கொண்டே இருந்தது. மக்கள் ஆதரவையும் சமூகத் தகுதியின் பலத்தையும் நெருப்பாற்று அனுபவங்களையும் வைத்து, அவர் ஒரு நல்லாட்சியை வழங்கியிருக்க முடியும். மாறாக, ஒவ்வொருமுறை ஆட்சிக்கு வந்த பின்னரும் அவர் தமிழக மக்களை நெருப்பாற்றில் நீந்தவிட்டார். 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற ஜெயலலிதாவின் முழக்கம், அவர் இருந்தபோது பகடி செய்யப்பட்டது. அவரது மறைவுக்குப் பின்னர் அதுவே அவரது கொள்கை முழக்கமாகப் போற்றப்படுகிறது. உண்மையில் 'அதிகாரத்தால் நான்; அதிகாரத்துக்காகவே நான்' என்பதே இந்த 'இரும்புப் பெண்மணி'யின் அகக்குரல் என்பதை அகச்சான்றுள்ள சமூகம் மறுக்காது.

தமிழ்ச்சமூகம் எதையெல்லாம் மறக்க விழைந்திருக்கிறது என்ற பட்டியல் பயங்கரமானது. ஊழல், அத்துமீறல், ஆதிக்கம், அராஜகம், சீர்கேடுகள், செயலின்மை, சாதி அரசியல், மதப் பிரிவினைவாதம், வன்மம், பழிதீர்த்தல்...! அ.தி.மு.க.கொடியின் கரையிடப்பட்ட வெண்புடவையில் வலம் வந்த ஜெயலலிதாவை முதல்வரான பின்னர் வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணத்தில் உடல் முழுவதும் நகைகளோடும் பட்டுப்புடவையிலும் பார்த்த போது, இந்தச் சமூகமே வெறுப்பு உணர்வில் மருண்டது. வண்ணத் தொலைக்காட்சி ஊழல் வழக்குக்காக செய்யப்பட்ட ரெய்டில், அலியாபா குகையில் கண்டதைப் போல தங்கமும் வெள்ளியும் காலணிகளும் புடவைகளும் கைக்கடிகாரங்களும் பிடிபட்டன. பேராசை மிகுந்த ஒரு பெண்ணாக, தமிழகம் அவரை நிராகரித்தது. 1991-96 ஆண்டுகள் வரையிலான காலத்தில் அவர் குவித்த சொத்துகள் மீதான வழக்குதான் மரணம் வரையிலும் அவரைத் துரத்தி வந்தது.

2014-ம் ஆண்டு ஜெயலலிதா குற்றவாளி எனத் தீர்ப்புக் கூறப்பட்டு பரப்பன அக்ரஹாரச் சிறையில் அடைக்கப்பட்டபோது, தமிழகமே இழவு வீடாகவும், வன்முறைக் காடாகவும் மாற்றப்பட்டது. ஓ.பி.எஸ். முதல்வராக இருந்தும் அரசு நிர்வாகம் செயலிழக்க வைக்கப்பட்டது. அ.தி.மு.க அமைச்சர்கள் குழுறிக்குழறி வாய்விட்டு அழுதபடி பொறுப்பேற்றனர். ஒட்டுமொத்த தமிழகமும் தன் மூச்சை நிறுத்திக் கொள்ள

ஆதிக்கம் என்ற உணர்வுக்குப்
பால் பேதம் இல்லை.
அது ஆணுக்கும் வரும்,
வாய்ப்புகள் கிடைக்கும் போது
பெண்ணுக்கும் வரும். ஆணுக்கு
வந்தால் சர்வாதிகாரமாக,
பெண்ணுக்கு வந்தால்
கம்பீரம் அல்லது தலைமைப்
பண்பாகக் கருதமுடியாது.

நிர்பந்தப்படுத்தப்பட்டது. மக்களுக்காகவே நான் என்று சொன்ன ஜெயலலிதா, மக்களுக்காகவா இவ்வளவு சொத்துகளையும் குவித்தார்; மக்கள் நலனுக்காகவா சிறைக்குச் சென்றார்? ஆனால், ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டதும் அ.தி.மு.க-வினர் அவருக்கு 'மக்கள் முதல்வர்' என்ற பட்டத்தை வழங்கினார்கள். பதவி பறிக்கப்பட்ட நிலையில்தான் அவர் மக்கள் முதல்வரெனில், பதவியில் இருக்கும் போது அவர் யாருக்கு முதல்வராக இருந்தார்...?

தேர்தல் பிரசாரங்கள் தவிர்த்து ஜெயலலிதா மக்களைச் சந்திப்பது அரிதிலும் அரிதான விஷயமாக, அவர் முதல்வரான பிறகு மாறிப்போனது. எம்.ஜி.ஆர் ஆட்சியில், சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்து குற்றச்சாட்டு எழுந்த போது, கட்சியின் அனுமதியின்றித் தாமாகவே சத்துணவுக்கூடத்துக்குச் சென்று சோதனை செய்த 'அந்த ஜெயலலிதா'வின் ஊக்கத்தைத்தான் மக்கள் அவரிடம் எதிர்பார்த்து, ஒவ்வொரு முறையும் வாக்களித்தனர். ஆனால், அவர் மக்களைச் சந்திக்க விரும்பாத தலைவராக தன்னை உருவாக்கிக் கொண்டார்.

2015-ல் சென்னையில் உருவாக்கப்பட்ட செயற்கை வெள்ளத்திற்குப் பின்னணியாக இந்த அலட்சியம் இருந்தது. தொடர் மழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் அளவு உயர்ந்துகொண்டே போக, அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முதல்வரைத் தொடர்புகொள்ள முடியாமல் அதிகாரிகள் தவித்த செய்தி ஊரறிந்த ரகசியம். நிலைமை கைமீறிப் போகவே, ஏரி நீர் எந்த முன்னறிவிப்பும் இன்றி, முன்னெச்சரிக்கை நடவடிக்கை இன்றித் திறந்துவிடப்பட்டது. வெள்ளத்தில் மாநகர் மூழ்கிய பின்னரும் அரசு நிர்வாகம் மிகத் தாமதமாகவே செயல்படத் தொடங்கியது. பல இடங்களில் மக்கள் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை விரட்டி அடித்தனர். தனது தொகுதியான ஆர்.கே.நகருக்கு வெள்ளத்தில் பாதிப்பைப் பார்வையிட வந்த ஜெயலலிதா, பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து, 'வாக்காளப் பெருமக்களே...' என்று விளித்தார். இதுதான் ஜெயலலிதா. அவர் மக்களை எப்போதும் வாக்காளர்களாக மட்டுமே பார்த்தார் என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஒரு சம்பவம் போதுமானது. ஆனால், அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.தானே ஜெயித்தது என விசுவாசிகள் வாதிடுவார்கள். உண்மைதான்.

இண்டு இடுக்கெல்லாம் ஊழல் மலிந்த இந்தியா போன்றதொரு நாட்டில், பலமுறை தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதை ஒரு சாதனை எனக் கருத முடியாது. பெரும்பணமும், பலவகையான அதிகாரமும் யாரை வேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆட்சியில் அமர்த்தலாம். பிரிவினை வாதங்களையும் ஊழலையும் விரும்பி அனுமதிக்கும் அறியாமை மிகுந்த சமூகத்தில், தலைமைப் பொறுப்புக்கு வருதலென்பது நேர்மையான வழிகளால் சாத்தியப்படக் கூடியது அல்ல. தேர்தல் வருகிறது குறைந்தபட்சம் ஒரு சில ஆயிரங்களையாவது பார்த்துவிட மாட்டோமா என்ற அவலச்சூழலை உருவாக்கியதில் ஜெயலலிதாவுக்குப் பெரும்பங்கு உண்டு. அ.தி.மு.க பெருவெற்றி பெற்ற தேர்தல்களில் பணப்பட்டுவாடா செய்து பெற்ற வாக்குகள், நினைவில் இருந்து அழிக்கப்படுகின்றன. கடந்த தேர்தலின் போது இரண்டு கன்டெய்னர் லாரிகளில் பிடிபட்ட 500 கோடி ரூபாய் யாருடையது என்ற கேள்விக்கான பதில், ஜெயலலிதாவுக்கு முன்னரே புதைக்கப்பட்டுவிட்டது அல்லவா?

ஜெயலலிதாவின் மரணத்துக்கு திராவிட முன்னேற்றக்கழகம் பக்குவமான அஞ்சலியைச் செலுத்தியது. அ.தி.மு.க.வினர் மற்றும் தமிழக மக்களின் வேதனையை தி.மு.கவினரும் பகிர்ந்து கொண்டனர். ஆனால், வாழ்வின் கடைசி நிமிடங்கள் வரை தி.மு.க-வையும் கருணாநிதியையும் வெறுத்தார் ஜெயலலிதா. அது போட்டியாளர் என்ற அடிப்படையிலான வெறுப்பு மட்டுமல்ல; ஒரு நடிகையாக, ஒரு பெண்ணாக தி.மு.க.வினரால் அவர் எதிர்கொண்ட அவமானங்கள் மூட்டிய நெருப்பும் ஒரு காரணம். அந்த நெருப்பு, கடைசி வரையிலும் கூடத் தணியவில்லை. கருணாநிதி எந்தத் திட்டங்கள் கொண்டு வந்தாலும் அதை ஒழிப்பதையும் முடக்குவதையும் ஜெயலலிதா தனது அரசியல் கொள்கையாகக் கொண்டிருந்தார். சமச்சீர் கல்வி, ஓமந்தூரார் வளாகத்தில் கட்டப்பட்ட சட்டமன்றக் கட்டடம், அண்ணா நூலகம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம் போன்றவை பட்டபாட்டை தமிழகம் நன்றாகவே அறியும். மக்கள் வரிப்பணமான பல நூறுகோடி செலவழித்துச் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டங்களை நாசம் செய்தார். அதிலும் ஆசியாவின் மிகப் பெரியதான அண்ணா நூலகத்துக்கு நேர்ந்த கதி, அறிவுச் சமூகத்தின் பெரும் வயிற்றெரிச்சல் வேதனை.

சொத்துக்குவிப்பு, சமூக அரசியல் தளத்தில் பிடிக்காதவர்களைப் பதம் பார்த்த பொடா, அரசு ஊழியர்களின் போராட்டத்தை ஒடுக்கிய எஸ்மா, டெஸ்மா, தர்மபுரி பேருந்து எரிப்பு எனத் தொடங்கி கருணாநிதியின் நள்ளிரவுக் கைது, ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல், மாற்றுத்திறனாளிகள் மீது தாக்குதல், வீரப்பன் தேடுதல் வேட்டை, ஈழ இனப்படுகொலை குறித்த அலட்சியம் என வளர்ந்து மின்வெட்டு, மக்கள் போராட்டம் வலுத்த போதும் டாஸ்மாக் கடைகளை மூடாதது, சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து எந்தக் கவலையுமின்றி, காவல்துறையை மக்களுக்கு அல்லாமல் தன் சேவைக்கு மட்டுமே பயன்படுத்தியது. இயற்கை வளங்களைச் சூறையாட மணல் குவாரிகளை அனுமதித்தது; ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட அவதூறு வழக்குகள்; செம்பரம்பாக்கம் ஏரித்திறப்பு; செயலற்ற நிர்வாகம் என இத்தனைக்கும் மத்தியில் வளர்ந்ததுதான் ஜெயலலிதா என்பவரின் அடையாளம்.

உரிமைகளுக்கும் சலுகைகளுக்குமான வேறுபாட்டை அறியாத சமூகமே தாலிக்குத் தங்கம், லேப்டாப், சைக்கிள், மிக்ஸி, கிரைண்டர், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர் போன்ற சலுகைகளில் மயங்கி நின்றது. அந்த மயக்கத்தை ஜெயலலிதா சரியாக அறுவடை செய்தார்; செய்து கொண்டே இருந்தார். 'ஏன் அரசுப் பள்ளிகள் மூடப்படுகின்றன? ஏன் எங்களின் கல்வி உரிமை பறிக்கப்படுகிறது? ஏன் அரசு மருத்துவ மனைகளில் தரமான சுகாதாரம் வழங்கப்படவில்லை? ஏன் வேலைவாய்ப்புகள் பெருகவில்லை? ஏன் என் ஊருக்கு சாலை வசதியே இல்லை?' என்றெல்லாம் மக்கள் கேட்கவில்லை. ஒவ்வொரு தேர்தலிலும் என்ன பொருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பையும் ஏக்கத்தையும் உருவாக்கி, அதன் மூலமாக தனக்கான ஒரு நற்பெயரை அவர் தக்க வைத்துக் கொண்டார். தேர்தலில் வெற்றி பெறவே கட்சிகள் கண்கவர் இலவசப் பொருட்களை வழங்குகின்றன. நியாயப்படி கட்சி நிதியிலிருந்தே இலவசங்கள் வழங்கப்பட வேண்டும்; மக்கள் வரிப்பணத்தில் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளும் வசதிகளும் செய்துதரப்பட வேண்டும்.

தொடர்ச்சி – 30ம் பக்கம்...

இணுவை ச.சிறீரங்கன்

அதிகாலைவேளை. நிறைவாகப் பரந்திருந்த வானத்தில், சூரிய ஒளிக்கதிர்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மேற்கத்தைய நாடுகளில், தெளிவாகப் பார்க்க இயலாத சூரியனைப் பார்த்து, மகிழ்ந்து கொண்டிருக்க, வண்டி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. முல்லைத்தீவை நோக்கிய பயணத்தில், வண்டியின் வேகத்தை முந்திக்கொண்டு, எனது மனோவேகம் மிக விரைவாகச் சென்றது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட இடமல்லவா? பூனகரியை அண்மித்தபோது லண்டனுக்குத் திரும்பி வந்து விட்டதுபோல், அந்தப் பிரமாண்டமான, உயரே எழும்பிக் கீழே சென்ற பாதையின் நவீனவமைப்பு, மிகப்பிரமாண்டமாகக் காட்சியளித்தது. முன்னர் எல்லாம், பூனகரியைக் கடந்து செல்லும்போது, வண்டிகளையும், மக்களையும் காவிக் கடந்த, மோட்டார் பொருத்தப்பட்ட "பாதை" எனப்படும் இழுவைப்படகு, மனதில் தோன்றி மறைந்தது.

விடுதலைப்புலிகள், அரசபடையினர், யுத்தம் முடிவுற்றதும், அவசர அவசரமாக, நவீன வடிவில் அமைக்கப்பட்ட வீதிபோல், பாழடைந்த மக்கள் வாழ்வில் உள்ள கரடுமுரடான தடைகளையகற்றி, அவர்தம் வாழ்வை, அரசு சீர்படுத்தத் தவறிவிட்டது என்பதை நாம் ஒப்புக்கொண்டே தீர வேண்டும். பூனகரியைக் கடந்து, பரந்தன் சந்தியூடாக முல்லைத்தீவை நோக்கி, வண்டி சென்றது.

எனது கையில் இருந்த நந்திக்கடலுக்குரிய பாதை, *"ROAD TO NANTHY KADAL"* என்ற நூலை வாசிக்கத் தொடங்கினேன். வன்னிப்போரின் இறுதிக்கட்டத்தில், படை அதிகாரியான, மேஜர் கமால் குணரட்னா என்பவர் இந்நூலை எழுதியுள்ளார். கூடவே இந்த நூல் வெளியிடப்படுவதற்கு முன்பாக, *"Daily Financial Times"* என்ற ஊடகத்துக்கு, மேஜர் கமால்குணரட்னா வழங்கிய செய்தியையும் வாசித்தேன். அதில் தலைவர் பிரபாகரனைப் பற்றிய தகவல்களை உண்மையாகவும் புலிகள் பற்றிய சில கருத்துக்களை உண்மைக்குப் புறம்பாகவும் அவர் தெரிவித்திருந்தார். பிரபாகரன் என்ற மனிதர் ஒழுக்கத்திற்கு முதலிடம் கொடுத்திருந்தார். புலிகளின் பல்லாயிரக்கணக்கான புகைப்படங்களை, படையினர் கண்டுபிடித்தனர். எந்த ஒரு படத்திலும் அவர் மதுப்போத்தலுடனோ, சிகரட் புகைப்பதுபோலவோ காணப்படவில்லை. அந்த அளவுக்கு, அவர் ஒழுக்கமாக இருந்திருக்கிறார். பிரபாகரனின் சட்டமானது, இஸ்லாமிய 'ஷரியா' சட்டத்தைவிட மிகக் கடுமையாக இருந்தது. 'ஷரியா' சட்டத்தில், திருடன் ஒருவன் தன் குற்றத்திற்காக தனது கையை மட்டுமே இழக்கநேரிடும். ஆனால் பிரபாகரன் வகுத்த சட்டத்தில், ஒருவர் தவறு செய்யின், அவர் அக்குற்றத்திற்காக, தன்னுயிரையே இழக்கநேரிடும். பெண் போராளிகள் எவரையும், அவர் கெட்டவழியில் நடாத்தவில்லை. கட்டுப்பாடு, ஒழுக்கம், அர்ப்பணிப்பு என்பவற்றோடு அவர் வன்முறைகளுடன் இயக்கத்திற்குத் தலைமை தாங்கியிருக்கின்றார். பிரபாகரன் இல்லாமல், புலிகள் இயக்கத்திற்குப் பழைய சக்தியைக் கொடுக்க, எவராலுமே இயலாது' என்று மேஜர் கமால் குணரட்னா குறிப்பிட்டிருக்கின்றார்.

"பிரபாகரனின் கடைசி மகன் பாலச்சந்திரனைப் படையினர் கொலை செய்யவில்லை" என்று அவர் கூறியிருக்கின்ற கருத்தை ஏற்றுக்கொள்ள எனது மனம் மறுத்தது. படையினர் பிடியில் 'சொக்கலேற்றை, அச்சிறுவன் சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும், பின்னர் அவனின் உயிரற்ற சடலத்தையும், தொலைக்காட்சியூடாகப் பார்வையிட்ட என் போன்ற பலருக்கு இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. முடியவே முடியாது.

முல்லைத்தீவுக்குச் செல்லும் பாதையில் விசுவமடு, புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய இடங்களைக் கடந்து சென்றோம். மக்கள் நடமாட்டம் ஆங்காங்கு செறிவாகக் காணப்படவில்லை. மாறாக நிலங்களை ஊடறுத்து, நிலைகொண்டிருக்கும் இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் கடந்து, வண்டி நகர்ந்து சென்றது. புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையை அடைந்ததும் மனம் 'திக்',திக் என்று படபடத்தது. முன்னர் தொலைக்காட்சியில் பார்த்த காட்சிகள் ஒவ்வொன்றாக மனத்திரையில் ஓடின. அந்த வைத்தியசாலையா இது? இரத்த வெள்ளமும், கண்ணீர் வெள்ளமும் கலந்த இடமல்லவா இந்தப் புதுக்குடியிருப்பு. எவ்வித யுத்த சுவடுமின்றி ஆதார வைத்தியசாலை இப்போது காட்சி தருகின்றது.

புதிய இராணுவ முகாம்கள் பாரிய நிலப்பரப்பை ஊடறுத்துக் காட்சிதந்தன. ஒவ்வோர் முகாம் முன்பதாக இராணுவக் காவலரண்கள். 'இன்று உன்னுடையதானது, நாளை இன்னொருவருடையதாக மாறுகிறது' என்ற கீதா உபதேசவார்த்தைகள் காதில் ஒலித்தன. மக்கள் யாவரும் பயப்பிரமை நீங்கி, சொந்த மண்ணில் வாழ்வதற்கு, புதிய அரசு வழிகாட்ட வேண்டும். யாழ்ப்பாணப் பகுதியில் மக்களின் காணிகள் சிலவற்றைக்கையளித்த அரசு, இந்த இராணுவ முகாம்களை நீக்காவிட்டால், மக்களாட்சி அங்கே நடைபெறுகின்றதென்று எப்படிக் கூறமுடியும்? புதுக்குடியிருப்பையும் மல்லாவியையும் இணைக்கும் பாதையைக் கடந்து, ஓர் காட்டுப்புறமாகச் சென்றோம். அங்கே அடர்ந்த காட்டுப்புறம் மத்தியில் விடுதலைப்புலிகள் கையாண்ட ஏவுகணைகளும் சின்னாபின்னமாக்கப்பட்ட புலிகளின் நீர்மூழ்கிக்கப்பல்களும் காட்சியளித்தன. 'பார்த்திபன்' என்று பெயர் எழுதப்பட்ட எழுத்து, ஓர் நீர்மூழ்கிக்கப்பலில் காணப்பட்டது. மற்றைய கப்பல்களில் காணப்பட்ட எழுத்துக்கள் துலாம்பரமாகத் தெரியவில்லை. இக்கப்பல்களை வட்டுவாய்க்கால் என்னும் இடத்திலுள்ள ஓடை வழியாக இறக்கி, நந்திக்கடல் மார்க்கமாக பெருங்கடலுடன் இணைந்து, நீர்மூழ்கிக் கப்பல்கள் சென்று விடும்.

வட்டுவாய்க்காலுக்கப்பால், நந்திக்கடலைப் பார்த்தபோது, மனதில் இனம்புரியாத சோகமே ஏற்பட்டது. நந்திக்கடற்பகுதியை ஒட்டிய இடத்திலேதான் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் மாண்டனவென்ற தகவலை ஊடகங்கள் மூலமாக அறிந்திருந்த எனக்கு, கவலை ஏற்படாமலா இருந்திருக்கும்? போர்க்காலச்சூழலில், பிள்ளைகளையும், கையில் அகப்பட்ட உடமைகளையும் எடுத்துக்கொண்டு, முழங்கால் தண்ணீரில், மக்கள் நடந்துவந்த, 'தொலைக்காட்சி'கள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பிய காட்சிகளைப் பார்த்து, வேதனைப்பட்ட உணர்வு, அதே இடத்தில் நின்று பார்த்தபோது எப்படியிருந்திருக்கும்? எனது மனம் அழுதது. நந்திக்கடற்பகுதிக்கு மிக அண்மையாகச் செல்ல முடியவில்லை. அங்கு நின்றவாறே பிரிந்த உறவுகள் அனைவருக்கும் நத்திக்கடலை நோக்கியபடி ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தேன். இறுதியாக, விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் பயிற்சி பெற்றதான, நீச்சல் தடாகத்தைப் பார்த்தேன். இதனருகே, *"TERRORIST'S SWIMING POOL"* என்று ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் எழுதிப் பொறிக்கப்பட்ட, பெரிய அறிவிப்புப்பலகை நிலைநாட்டப்பட்டுள்ளது. சுமார் 83 அடி நீளமும், 23 அடி அகலமுமான ஆழமான நீச்சல் தடாகம் என்ற குறிப்பும் அங்கே காணப்பட்டது. அதன் ஆழத்தைக் கண்டு, தலை சுற்றவில்லை. *'TERRORIST'* என்ற வார்த்தைப் பிரயோகத்தைக்கண்டு தலை சுற்றியது.

அப்படியாயின் மேஜர் கமால் குணரட்னா, தலைவர் பிரபாகரனைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது, வெறும் வெற்று வார்த்தைகளா....?

அன்றையதினம் இரவே யாழ்ப்பாணம் திரும்பினோம். மறுநாள் திரு. ஆறுதிருமுருகன் அவர்களது 'சிவபூமி' தொண்டர் நிறுவனத்தின் பணி கண்டு வியந்தேன். மலைத்தேன். இதுபற்றி இன்னோர் தடவை மிக விரிவாக எழுதவுள்ளேன்.

நந்திக் கடல்

Money in Minutes to Sri Lanka Since 1999

Your money sent from the UK and not credited locally in Sri Lanka

The Official Way!

FAST CASH
SEND TODAY - COLLECT TODAY

Looking to Sponsor Your Family and Friends from Sri Lanka?

Open 7 Days

WARNING!!

BE SAFE, NOT SORRY!!!
DON'T BE A VICTIM OF AN UNKNOWN AGENT!
KNOW YOUR UK TRANSFER COMPANY BEFORE PARTING WITH YOUR HARD EARNED MONEY.
A HIGHER EXCHANGE RATE DOES NOT MEAN A SAFE & SECURE TRANSFER TO SRI LANKA.

Send Fastcash from the UK and receive an official receipt for each transaction!

Wherever you are in the UK,
you don't have to come to us!
Credit our account online & call us.

BARCLAYS
A/C Name : C.E.C. LTD | A/C No : 70713945
Sort Code : 20-36-47

OUR PROMISE
YOUR MONEY HAS SENT FROM THE UK AND NOT CREDITED LOCALLY BY UNKNOWN SOURCES.
OFFICIAL TRANSFERS

020 8886 4488
48 Mitcham Road, Tooting SW17 9NA
2 minutes from Tooting Broadway close to McDonald and next to Gala Bingo
www.efastcash.co.uk

WISHING ALL OUR LOYAL CUSTOMERS A HAPPY CHRISTMAS AND PROSPEROUS 2017!

MCG

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

HNB BOC PEOPLE'S BANK NSB Sampath Bank SEYLAN NDB bank Nations TrustBank HSBC PAN ASIA Standard Chartered DFCC Vardhana Bank Amana Bank

CEC
SEN MONEY FROM 36 BRANCHES

OAKWOOD	- 0208 886 4488	CENTRAL LONDON	- 0207 355 3800	EDMONTON	- 0208 884 4646	WOOD GREEN	- 0208 889 6464	BARNET	- 0208 449 4033	ST ALBANS	- 01727 861 111
GOLDERS GREEN	- 0208 455 0099	FINCHLEY	- 0208 343 3737	CAMDEN	- 0207 284 1415	SWISS COTTAGE	- 0207 722 6767	ILFORD	- 0208 553 5300	CHISWICK	- 0208 995 9585
ROMFORD	- 0170 873 3633	LONDON BRIDGE	- 0207 407 5717	FLEET STREET	- 0207 936 4646	WELWYN G.CITY	- 0170 733 3883	ROYAL DOCKS	- 0207 474 4700	WALTHAMSTOW	- 0208 521 5252
HENDON	- 0208 202 4300	BRICK LANE	- 0207 033 4600	GREEN STREET	- 0208 552 5100	HOLLOWAY RD	- 0207 700 7575	CAMDEN NW1	- 0203 437 1200	TOTTENHAM COURT RD	- 0203 437 1212
TOOTING	- 0203 437 1220	HARROW	- 0203 437 1221	DALSTON	- 0203 437 1222	FULHAM	- 0203 437 1223	BAKER STREET	- 0203 437 1225	WEMBLEY LDO	- 0203 437 1226
HATFIELD	- 0203 437 1227	STRATFORD	- 0203 437 1228	ERITH	- 0203 437 1229	EASTHAM	- 0203 437 1230	FOREST HILL	- 0203 437 1231	KENTISH TOWN	- 0203 437 1232

Clean, Modern Family Accommodation in SRI LANKA

Quality 1,2,3 Bed Apartments in Mt. Lavinia

Close to St. Thomas Collage and Mt.Lavinia Hotel
3min to Galle Rd, 5min to Beach

Sea Side
Fully Furnished
AC & Lift
with Parking

Rent from
£25
per day*

For Bookings Contact Mike
07733 261 999
Visit our website
www.stayatmount.com

BEST DEALS TO SRI LANKA

HolidayAir
A Travel Experience to Remember

DO NOT BOOK YOUR AIR TICKET WITH ANY OTHER TRAVEL AGENT UNTIL YOU SPEAK TO US!

KUWAIT AIRWAYS	QATAR AIRWAYS	OMAN AIR	Emirates	ETIHAD AIRWAYS
FROM £415 INCL. TAXES	FROM £429 INCL. TAXES	FROM £405 INCL. TAXES	FROM £405 INCL. TAXES	FROM £449 INCL. TAXES
46+7kg	30+7kg	30+7kg	40+7kg	23+7kg

WE SPECIALISE IN TAILOR MADE HOLIDAY PACKAGES TO SRI LANKA TO SUIT TO ALL BUDGETS. BOOK ANY HOTEL / ANY ROOM TYPE IN SRI LANKA, BEST PRICE GUARANTEED!

WORLDWIDE SPECIALS

TORONTO	NEW YORK	MELBOURNE/ SYDNEY
FROM £400	FROM £350	FROM £610

FOR MORE OFFERS AND OPTIONS VISIT
www.holidayair.com
130 HIGH STREET, BARNET, EN5 5XQ
IATA
0208 440 0770
OPENING DAYS: MON - FRI : 9.00 AM - 6.00 PM, SATURDAY 9.30 AM - 5.30 PM

All advertised fares are of real time inventory during the time of publication. Fares include taxes and are subjects to availability and change without any prior notice. Terms and conditions apply.

சிவ தியாகராஜா

பூதத்தம்பி கோட்டை

அத்தியாயம் 7

திமிலனின் திமிரும் தொலைத்த பார்வையும்

தான் முறை தவறி நடந்தால் திமிலத்தேவன் போலத் தனது கண்பார்வையை இழக்க வேண்டி வரலாம். என ஜோதிநாதன் கூற, அந்த நிகழ்வை ஏன் இப்போது ஞாபகப் படுத்துகிறீர்கள் எனச் சந்திரவல்லி பதிலளித்த போது அவர்களது நினைவுகள் பத்து ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றன.

ஜோதிநாதனுக்கு அப்போது பதின்மூன்று வயது. அவனது தாய் தந்தையர் இந்திய தலங்களுக்குச் சுற்றுலா சென்ற அச்சமயம் அவனை ஆறு மாத காலத்திற்கு பனங்காமத்தில் அவனுடைய தாயாரின் சகோதரனான குமாரவன்னியனின் மாளிகையில், மாமனுடைய பாதுகாப்பில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அம்மாளிகையில் வாழ்ந்த நாட்களில் பள்ளிக்கூம் இல்லை; படிப்பேதும் இல்லை; மாமன் குமாரவன்னியனின் பன்னிரண்டு வயதான மகன் சந்திரகாந்தனுடனும், பத்து வயதான மகள் சந்திரவல்லியுடனும் அரட்டை அடிப்பதுதான் வேலை, தாத்தா கைலாய வன்னியன் அவர்களுக்கு அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்துச் சீராட்டினார். உணவு கொள்ளும் நேரம் தவிர அப்பிள்ளைகள் கட்டுப்பாடு ஏதுமின்றி வன்னிக்காட்டிலேயே தமது நாட்களைக் கழித்தார்கள்.

அவர்களோடு சேர்ந்து மாளிகையில் வேலைபார்க்கும் ஊழியர்களின் பிள்ளைகள் எல்லோருமாகச் சேர்ந்து பத்துப் பேர்வரை காட்டுக்குள் போவார்கள். அவர்களின் பெரியவனான ஜோதிநாதன் கோடரியால் மரம் தறிப்பதில் வல்லவனாக இருந்தான். தறித்த மரங்களைக் கொண்டு பனங்காமத்தின் எல்லையில் பாலமோட்டைக்கருகே காட்டுக்கு நடுவே ஒரு மரக்கொட்டிலை கட்டினார்கள். நான்கு மூலைக்கும் பெரிய மரங்கள் நட்டு, பக்கங்களுக்கு மரக்குத்திகளால் சுவர் அமைத்து, மேலே மெல்லிய மரக்கொப்புகளைக் கொண்டு கூரை அமைத்து, அதற்கு மேல் வைக்கோல் போர்கள் போட்டு மூடி, மூன்று மாத காலத்தில் ஒரு பெரிய கொட்டிலைக் கட்டி முடித்தார்கள். அதன் வரயிலின் மேல் பித்தளையால் செய்த ஒரு தாமரைப்பூவை அடித்து வைத்தாள் சந்திரவல்லி. அதற்குத் "தாமரைத் தளம்" எனப் பெயரிட்டார்கள்.

அக்காலத்தில் பாலமோட்டையில் நாகதேவன் என்றொரு தலைவன் இருந்தான். அவனைப் புராதன நாகர் குலத்தில் வந்தவன் எனக் கிராம மக்கள் கூறிக்கொள்வார்கள். அவனுக்கு திமிலத்தேவன் என்ற பெயரில் ஒரு மகன் இருந்தான். அவனை அனைவரும் திமிலன் என்றே அழைத்தார்கள். திமிலனுக்குப் பதிநான்கு வயதிருக்கும்; வயதுக்கு அதிகமான வளர்ச்சி, அவன் தனது சகாக்களோடு வந்து ஜோதி குழுவினரைப் போர் விளையாட்டுக்கு அழைப்பான். அவ்விளையாட்டுக்கள் மரத்தினால் செய்யப்பட்ட வாட்களால் சண்டை போடுவதாகவும், கம்புச் சண்டைகளாகவும் இருக்கும். இச்சண்டைகளில் பெரும்பாலும் திமிலன்தான் வெற்றி பெறுவான்.

ஒரு நாள் அவர்கள் அங்கே இல்லாதிருந்த சமயம் அந்தத் தாமரைத்தள வாசலில் பொருந்தியிருந்த பித்தளைப்பூ திருட்டுப் போயிருந்தது. சந்திரவல்லி அவர்கள் கேட்கும்படியாக அந்தத் 'தாமரைப் பூ மந்திரசக்தி வாய்ந்தது என்றும், அதை எடுத்து வைத்திருப்பவன் இரத்த வாந்தி எடுத்து இறந்து விடுவான்' என்றும் உரக்கக் கூறினாள். இது நடந்த மறுநாள் அவர்கள் காட்டுக்குள் விளையாடச் சென்றபோது அவர்கள் மூன்றுமாத காலப் பிரயாசையில் கட்டிய கொட்டில் எரிந்து போய் சாம்பலாகக் கிடந்தது. அதைக் கண்ட சந்திரவல்லி விம்மி விம்மி அழுதாள். அதைச் செய்த திமிலனை வாய்க்கு வந்தபடி திட்டினாள். சந்திரகாந்தனோ பாலமோட்டை சென்று திமிலனின் வீட்டுக்கு நெருப்பு வைக்க வேண்டும் எனக் கூறினான்.

அவர்களில் ஜோதிநாதன் மட்டும் மனம் தளரவில்லை. 'ஒரு முறை கொட்டில் போட்ட எங்களால் இன்னொரு தடவை கொட்டில் கட்ட இயலாதா என்ன?' என இன்னொரு கொட்டிலை தங்கள் பனங்காம எல்லைக்குள்ளிருந்த காட்டில் இருமாத காலத்தில் கட்டி முடித்தான். அதற்கு 'மல்லிகை இல்லம்' எனப் பெயரிட்டு அங்கே விளையாடி வந்தார்கள்.

ஒரு நாள் காட்டிற்குள் ஜோதிநாதனும், சந்திரகாந்தனும் கள்ளித்தடிகள் பொறுக்கிக் கொண்டிருந்த சமயம் சந்திரவல்லி தனியாக அக்கொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்தாள். அச்சமயம் திமிலத்தேவனும் அவனது இரு நண்பர்களும் ஜோதிநாதனையும், சந்திரகாந்தனையும் தாக்க வந்தார்கள். திமிலனின் கைகளில் அவனது தந்தையின் நீண்ட இரும்புவாள் காணப்பட்டது. அவன் உண்மையிலேயே அவர்களை அவ்வாளால் வெட்டி விடுவான் போலப்பட்டது.

நண்பர்கள் இருவரும் ஓட ஆரம்பித்தார்கள். திமிலன் ஏதோ பைத்தியக்காரனைப்போல சத்தமிட்டுக் கொண்டு அவர்களைத் துரத்தினான். ஆனால் அவனால் அவர்களை அணுக முடியவில்லை; அவர்கள் பஞ்சாகப் பறந்தார்கள்.

திமிலன் அவர்களைத் துரத்துவதை நிறுத்திவிட்டு திரும்பிப் போனபின் சிறிது நேரம் கழித்து ஜோதிநாதனும், சந்திரகாந்தனும் தங்கள் 'மல்லிகை இல்லத்திற்கு' திரும்பியபோது சந்திரவல்லி கதறும் குரல் கேட்டது. கொட்டிலினுள் சென்று பார்த்தபோது அங்கே அவளைக் காணவில்லை. அவள் தனது மேல் சட்டைக்குமேல் போர்த்தியிருந்த சால்வை நிலத்தில் கிடந்தது.

திமிலன் ஒரு முரடன்; புத்திசாலி என்று கூற முடியாது. மடிந்து கிடந்த புற்களையும் செடிகளையும் கொண்டு அவர்கள் போன பாதையைக் கண்டு ஜோதிநாதனும், சந்திரகாந்தனும் அவர்களைப் பின் தொடர்ந்தார்கள். சிறிது தூரம் சென்றதும் அவர்களின் பேச்சுக் குரல்கள் கேட்டன.

அக்குரல்களைத் தொடர்ந்து சென்றபோது காட்டின் நடுவே ஒரு சிறிய வெளிகாணப்பட்டது. அதன் ஓரமாக நேராக நடப்பட்ட மூன்று கற்களின்மேல் ஒரு தொப்பிக்கல் காணப்பட்டது. முற்காலத்தில் இறந்தவர்களைப் புதைத்தபின் அப்புதைகுழிமேல் இவ்வாறு பெருங்கற்களை சுமைதாங்கி வடிவில் அமைப்பார்களாம். அத்தொப்பிக்கல்லின் மேல் திமிலனின் பெரிய வாள் வைக்கப்பட்டிருந்தது.

ஜோதிநாதனும் சந்திரகாந்தனும் ஒரு பற்றையின் பின்னே மறைந்திருந்து அங்கே நடப்பவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பத்து வயதான சந்திரவல்லி இன்னும் வயசுக்கு வரவில்லையான போதிலும் மிக அழகான பெண். அவளை இழுத்துக்கொண்டு போன திமிலன் ஒரு மரத்தின் பின்னால் அவளது இருகைகளையும் கட்டி விட்டு அவன் மேலே அணிந்திருந்த சட்டையைக் கிழித்து கீழே எறிந்தான்.

திமிலனின் இரு நண்பர்களுக்கும் அவன் செய்யும் காரியம் பிடிக்கவில்லை எனத் தெரிந்தது. என்ன செய்தாலும் அவள் பனங்காமத் தலைவன் கைலாய வன்னியனின்



நாகதேவன் கைலாய வன்னியரைக் காட்டிலும் பெரிய உடலமைப்பும் வலிவும் கொண்டவன். அவரை விட வயதில் மிகவும் குறைவானவன். கீழே கிடந்த தனது வாளை எடுத்து கைலாய வன்னியரோடு மோதப் போகிறான் என அனைவரும் எதிர்பார்த்தார்கள்.



பேத்தி. இதனால் என்ன விபரீதம் ஏற்படுமோ எனப் பயந்தார்கள். "திமிலா!" என்று அவர்கள் குரல் கொடுத்தபோது அவர்களை இந்த விஷயத்தில் தலையிட வேண்டாம் என அதட்டி, அவர்களை அப்புதை கற்களடியில் போய் உட்காருமாறு பணித்தான் திமிலன்.

திமிலன் எதற்கும் அஞ்சாதவன் போலக் காணப்பட்டான். சந்திரவல்லிக்கு முன்னே சென்ற திமிலன் தனது இடுப்பிலிருந்த துணியைக் கழற்றிக் கொண்டு "இங்கே தொட்டுப் பார்க்க விரும்புகிறாயா?" எனக் கேட்டான்.

சடுதியாக ஜோதிநாதன் செயல்பட்டான்.

தனது மறைவிடத்தினின்றும் வெளிப்பட்டு வெளியே ஓடிவந்த ஜோதிநாதன் தொப்பிக்கல்லின் மேல் கிடந்த நீண்ட வாளை எடுத்துக் கொண்டு இருகைகளாலும் அதைத் தலைக்கு மேலே உயர்த்திய வண்ணம் ஓடிச்சென்று திமிலனின் ஆண் குறியை நோக்கி வீசினான்.

அது மிகப் பாரமானவாள். ஒரு ஆஜானுபாகுவான வீரன் தூக்கிச் சுழற்ற வேண்டிய அந்த வாளை சிறுவனான ஜோதிநாதனால் சரியாகக் குறிபார்த்து வீச முடியவில்லை. வாள் திமிலனின் வலது தொடையில் பாய்ந்து இரத்தம் பெருக ஆரம்பித்தது. திமிலனின் நண்பர்கள் இருவரும் இருபக்கமும் அவனைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு போனார்கள். சந்திரகாந்தன் ஓடிச்சென்று தங்கையின் கைக் கட்டுகளை அவிழ்த்து விட்டான்.

.....

சந்திரவல்லியின் விம்மலைக் கேட்டு வெளியே வந்த தாத்தா கைலாய வன்னியர் அவளைப் பார்த்தார். அருகில் நின்ற ஜோதிநாதனைப் பார்த்தார். அவன் கையிலிருந்த இரத்தம் தோய்ந்த நீண்ட வாளையும் பார்த்தார்.

"என்னது? என்ன நடந்தது? எல்லாத்தையும் விலாவாரியாகச் சொல்லு" என ஜோதிநாதனைப் பார்த்துக் கர்ஜித்தார்.

ஜோதிநாதன் நடந்தது அனைத்தையும் விபரமாகக் கூறினான்.

"அவன் என் பேத்தி மேல் கைவி கொண்டானா?"

"இல்லை தாத்தா, அப்படி ஏதும் நடக்கயில்லை"

"சட்டையைக் கிழிச்சான்; இல்லையா?"

"மேல் சட்டையைத் தான் கிழிச்சான்"

"அவளை அம்மணமாக்கினான்; இல்லையா?"

"இடுப்புக்கு மேல்தான் அவள் வெறும் உடம்போடு நின்றாள்"

தனது வேலையாட்களை நான்கு குதிரைகளைச் சேணமிட்டுக் கொண்டு வரும்படி பணித்தார் கைலாய வன்னியர். குதிரைகள் வந்ததும் முதல் குதிரையில் அவர் ஏறிக்கொண்டார். இடுப்பில் அவரது நீண்டவாள் தொங்கியது. கையில் ஜோதி கொண்டு வந்த இரத்தக்கறை படிந்த வாளை எடுத்துக்கொண்டார்.

இரு குதிரைகளில் அவரது மெய்க்காப்பாளர்கள் இருவர் ஏறிக்கொண்டனர். அவர்களது இடுப்புப்பட்டியில் நீண்ட வாட்களும் கோடரிகளும் செருகப்பட்டிருந்தன. கைகளில் நீண்ட வேல்களை வைத்திருந்தார்கள். குதிரைகளின் பக்கவாட்டில் கேடயங்கள் பொருத்தப்பட்டிருந்தன. நான்காவது குதிரையில் ஜோதிநாதனை ஏறச் சொன்னார். நடந்தது அனைத்தையும் நேரில் பார்த்த சாட்சி அவன்; திமிலனைக் காயப்படுத்தியதும் அவன்தான்.

குதிரைகள் நேரே பாலமோட்டையில் நாகதேவன் இல்லத்தை நோக்கி விரைந்தன. ஓர் அருவிக்கரையில் காட்டுமரங்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்த வீடு. அருகே புற்தரையில் ஆடுகளும், மாடுகளும் மேய்ந்து கொண்டு நின்றன. குதிரைகளின் குளம்போலிச் சத்தத்தைக் கேட்டதும் நாகதேவன் தனது வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தான்.

ஐந்து முழ உயரத்தில் மிகப்பெரிய ஆகிருதியைக் கொண்டிருந்தான் நாகதேவன். அவனிடத்தில் ஆயுதம் ஏதும் இருக்கவில்லை. அவனைப் பின் தொடர்ந்து ஆயுதபாணிகளாக அவனது நான்கு கையாட்கள் வந்தார்கள்.

"வணக்கம் அரசே!" என்றான் நாகதேவன்.

கைலாய வன்னியர் பதில் வணக்கம் கூறவில்லை. கையில் பிடித்திருந்த வாளை நாகதேவன் காலடியில் வீசி ஏறிந்தார்.

"எனது மண்ணில் உமது மகன் இந்த வாளை விட்டு விட்டு வந்து விட்டான். இது யாருடைய வாள்?"

"எனது வாள்தான், எனது மகன் நல்ல பிள்ளை; வருங்காலத்தில் உங்களுக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறான்" என்றால் நாகதேவன்.

"அவன் எனது பேத்தியின் வெற்றுடம்பைப் பார்த்ததுமல்லாமல் தனது வெற்றுடம்பையும் அவளுக்குக் காட்டியிருக்கிறான். இப்படியான சேவை எனக்கு வேண்டியதில்லை."

"அதற்காக அவனுக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது; இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது."

கைலாய வன்னியர் எதுவும் பேசாமல் தனது மேல் துண்டை எடுத்து நிலத்தில் வீசினார்.

அதன் பொருள் நாகதேவன் தனது மகனைக் காப்பாற்ற வேண்டுமானால் கைலாய வன்னியரோடு தனித்துப் போரிட வேண்டும்.

நாகதேவன் கைலாய வன்னியரைக் காட்டிலும் பெரிய உடலமைப்பும் வலியும் கொண்டவன். அவரை விட வயதில் மிகவும் குறைவானவன். கீழே கிடந்த தனது வாளை எடுத்து கைலாய வன்னியரோடு மோதப் போகிறான் என அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

கீழே கிடந்த தனது வாளை நாகதேவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. தனது இல்லத்திற்குள் சென்ற நாகதேவன் தனது மகனை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான்.

திமிலனின் வலது தொடையில் பெரிய தொரு துணிக்கட்டு போடப்பட்டிருந்தது. அதோடு நொண்டிக் கொண்டு திமிலன் வெளியே வந்தான்.

"நீ சொல்ல வேண்டியதைச் சொல்லு" என தனது மகனுக்குக் கட்டளையிட்டான் நாகதேவன்.

கைலாய வன்னியன் முன் முழங்காலில் மண்டியிட்ட திமிலன் "நான் பெரும் பிழை செய்து விட்டேன்; என்னை மன்னித்து விடுங்கள் ஐயா" என்றான்.

'எனக்குக் கேட்கவில்லை'

"நான் பெரிய பிழை செய்துவிட்டேன். என்னை மன்னிக்கும்படி தங்கள் காலைத்தொட்டு மன்றாடுகிறேன்"

"என்னத்துக்கு மன்னிப்பது?"

"நான் செய்த காரியத்திற்கு"

"என்ன காரியம் செய்தாய்?"

அதற்கான பதிலை திமிலனால் கூற முடியவில்லை. நிலத்தைப் பார்த்த வண்ணம் கூனிக்குறுகி நின்றான்.

"எனது பேத்தியின் மேல் கை வைத்தாய். அவளை மரத்தில் கட்டி வைத்து அம்மணமாக்கினாய்!"

"அரை அம்மணமாக" என முணுமுணுத்தாள் திமிலன்.

"அது சிறுபிள்ளைகள் விளையாட்டு; அவளை அவன் மானபங்கப்படுத்த எண்ணவில்லை ஐயா!" என்றான் நாகதேவன்.

"எனது பேத்தியை அம்மணமாக்கிப் பார்ப்பது உமக்குச் சிறுபிள்ளை விளையாட்டாகத் தெரிகிறதா?"

"அவளை இந்த ஒரு தடவை மன்னித்து விடுங்கள் ஆசே; அவன் உங்களுக்கு உயிருள்ள வரையும் சேவை செய்வான்" என வேண்டினான் நாகதேவன்.

"அவன் பார்க்கக்கூடாததையெல்லாம் பார்த்துவிட்டான்" என்ற கைலாய வன்னியர் தனது வாளை இருப்பிலிருந்து உருவி மேலே எறிந்தார்.

மேலே சென்று உச்சிச் சூரிய ஒளியில் வெள்ளித்தகடாகப் பளிச்சிட்ட அந்த வாள், தலைகீழாகத் திரும்பி கீழே வந்த போது அதன் பிடியை லாவகமாகப் பற்றிய கைலாய வன்னியர், அதே சுழற்றில் வாளின் பிடியை முன்னால் கொண்டு வந்து கத்திப் பகுதியை கையில் பிடித்துக் கொண்டு நின்றார். ஜோதிநாதனைப் பார்த்து "ஜோதி, அவளை அரை அம்மணமாக மட்டும்தான் பார்த்தேன் என்று அவன் சொல்கிறானே, அது உண்மையா?"

"உண்மைதான் தாத்தா"

"அப்படியானால் அரைத்தண்டனை மட்டுந்தான்" என்று கூறிய கைலாய வன்னியர் தனக்கு முன்னால் முழங்காலில் நின்று கொண்டிருந்த திமிலனின் இடக்கண்ணில் பலமாக இடித்தார்.

மிகவும் கனதியான உருக்கிரும்பினால் செய்யப்பட்ட அப்பிடி இடித்ததும் அவனது கண் முட்டை உடைவது போலப் பிதுங்கி வெடித்தது.

"அவ்வளவுதான்" என்ற கைலாய வன்னியர் நாகதேவனைப் பார்த்து "உனது சேவை எனக்கு இனிமேல் வேண்டியதில்லை" என்றார்.

அப்போது திமிலன் போட்ட கதறல் அந்தக் கிராமம் முழுவதும் எதிரொலித்தது.

'இது முரட்டுத்தனமான பூமி; இவர்களெல்லாம் முரட்டுத்தனமான மனிதர்கள்; இவர்கள் மத்தியில் மாட்டிக் கொண்டேனே!' என எண்ணிக்கொண்டான் ஜோதிநாதன்.

அச்சம்பவத்தின் பின்னர் சந்திரவல்லி பல ஆண்டுகளாக மாளிகை விட்டு தனிமையில் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அச்சம்பவம் நடந்து சில மாதங்கள் ஓடித்து, அவளது அண்ணன் சந்திரகாந்தன் மருத்துவர்களால் மாற்றமுடியாத ஜன்னி கண்டு மரணமடைந்தான்.

'கைலாய வன்னியன் ஒரு சிறுவனுக்குக் கொடுத்த கொடூரமான தண்டனைக்காக கடவுள் அவனுக்கு ஆண் வாரிசே இல்லாமல் செய்துவிட்டார்' என ஜனங்கள் பேசிக் கொண்டார்கள்.

-தொடரும்.

'சோ' எப்படி வந்தது?

சத்திய கங்கை ஆசிரியர் பகீரதன் எழுதிய தேன்மொழியாள் என்ற நாடகத்தில் 'சோ' என்ற கதாபாத்திரத்தில் ராமசாமி நடித்தார். அப்போது முதல் அவர் பெயர் 'சோ'வாக மாறியது.

சோ கதை வசனம் எழுதி இயக்கிய முதல் படம் 'முகமது பின் துக்ளக்' இப்படத்தில் டைட்டிலில் 'கதை-வசனம் சோ' என்று தனியாக ஒரு கார்டு வரும். இறுதி கார்டில் டைரக்ஷன் "கற்றுக் கொள்ள முயற்சி" சோ என்று தன்னடக்கத்தோடு வித்தியாசமாக போட்டிருக்கிறார்.

சோ கதை வசனம் எழுதிய படங்கள்: நீலகிரி எக்ஸ்பிரஸ், ஆயிரம் பொய், பொம்மலாட்டம், நினைவில் நின்றவள், தேன்மழை, நிறைகுடம். சோ முதன்முதலாக நடித்த திரைப்படம் சிவாஜி நடிப்பில் ஏ.பீம்சிங் இயக்கிய 'பார் மகளே பார்' (1963). இப்படத்தில் சோ ராமசாமியின் கதாபாத்திரத்தின் பெயர் மாடசாமி. சோ இயக்கிய படங்கள் 4. அவை: முகமது பின் துக்ளக் (1971), மிஸ்டர் சம்பத் (1972), யாருக்கும் வெட்கமில்லை (1975), உண்மையே உன் விலை என்ன? (1976).

முதன் முதலாக இவர்கள் பாடிய பாடல்கள்!

முதன் முதலில் டி.எம். சௌந்திரராஜன் பாடிய பாடல் 'கிருஷ்ண விஜயம்' (1946) படத்தில் இடம்பெற்ற, 'ராதை நீ என்னை விட்டு ஓடாதேடி' என்கிற பாடலாகும். கே.ஜே.யேசுதாஸ் பாடிய முதல் தமிழ்ப் பாடல் 'பொம்மை' (1964) படத்தில் இடம்பெற்ற 'நீயும் பொம்மை நானும் பொம்மை' என்ற பாடல். எஸ்.பி.பாலசுப்ரமணியம் தமிழில் பாடிய முதல் பாடல் 'சாந்தி நிலையம்' (1969) படத்தில் இடம் பெற்ற 'இயற்கையென்னும் இளைய கன்னி' என்ற பாட்டுதான். ஆனால், அவர் 'அடிமைப் பெண்' படத்தில் எம்.ஜி.ஆருக்குப் பாடிய 'ஆயிரம் நிலவே வா' என்ற பாடல்தான் முதலில் வெளியானது.

பிருந்தா சீனிவாசன்

மோகன்லாலுடன் நடிப்பது பெருமையாக இருக்கிறது!

தர்மதுரை, அச்சமின்றி படங்களுக்குப் பிறகு சிருஷ்டி டாங்கே மீண்டும் பிஸியாகி விட்டார்!

சமீபத்தில் அவரைச் சந்தித்தபோது, "நான் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றிருக்கிறேன். நான்கு படங்கள் வெற்றி பெற்று, நானும் இந்த ரேசில் சேர்ந்திருக்கிறேன். ரொம்ப சந்தோஷமாக இருக்கு. இந்த வருடம் குறைந்தது பத்துப் படங்களாவது எனக்கு ரிலீஸ் ஆயிடும். இப்போது நான் இன்னும் சந்தோஷமாக இருக்கிறேன். மோகன்லால் நடிக்கிற படம், மேஜர் ரவி, டைரக்ஷன்னு சொன்னாலே உடம்பெல்லாம் சிலிர்க்குது. மோகன்லால் படத்துல நடிக்கிறோம்னு ஒப்பந்தமான உடனேயே எப்ப அவருடன் நடிப்போம் என்று துடிச்சிட்டு இருந்தேன். நடிக்க ஆரம்பிச்ச உடனேயே ஜாம்பவானுடன் நடித்த பெருமை எனக்கு.

1971- Beyond The Border என்ற இந்தப் படம் எனக்கு முதல் படம். அல்லு சிரிஷுடன் ஜோடியாக நடிக்கிறேன். ராணுவம் சம்பந்தப்பட்ட கதை இது. நான் தமிழ் பேசும் தமிழ் பெண்ணாக நடிக்கிறேன்.

1971- Beyond The Border படம் தமிழ், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் என ஐந்து மொழிகளில் உருவாகுது. 2017 எனக்கு நம்பிக்கை கொடுக்கும் ஆண்டாக அமையும்" என்கிறார் சந்தோஷமாக.

டி.வி நிருபர் மீது பிரகாஷ்ராஜ் தாக்குதல்!

பிரபல நடிகர் பிரகாஷ்ராஜ் சாமி தரிசனம் செய்வதற்காக திருப்பதிக்கு சென்றார். சாமி கும்பிட்டுவிட்டு தன் குழந்தையைச் சுமந்தபடி கோவிலை விட்டு வெளியே வந்தபோது அவரிடம் டிவி நிருபர்கள் ஜல்லிக்கட்டுக் குறித்துக் கருத்துக் கேட்டனர். "நான் சாமி கும்பிட வந்தேன். ஜல்லிக்கட்டுப் பற்றி கருத்துச் சொல்ல முடியாது. கோவிலுக்கு வந்த என்னை ஏன் தொல்லைப்படுத்துகிறீர்கள்" என்று சொன்னவர் திடீரெனக் கேள்வி கேட்ட வீடியோ நிருபரை பிடித்துத் தாக்கினார். அவர் கமராவைப் பறித்து அதில் உள்ள வீடியோப் பதிவுகளை அழிக்க முயன்றார். உடனடியாக அங்கிருந்தவர்கள் அவரைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றனர். இச்சம்பவம் பத்திரிகையாளர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஐம்பது பாடல்கள் இடம் பெற்ற அந்தக் காலத்தில் ஒரு பாடல் கூட இல்லாமல் வெற்றி பெற்ற 'அந்த நாள்'!

படத்திற்கு 40 பாடல்கள், 50 பாடல்கள் இடம்பெற்ற அந்த காலகட்டத்தில், ஒரு பாடல் கூட இல்லாமல் வந்து வெற்றி பெற்ற படம் 'அந்த நாள்'. நடனம், நகைச்சுவை, ஸ்டன்ட் ஆகிய கமர்ஷியல் 'ஐட்டங்கள்' எதுவுமில்லாமல் ஹாலிவுட் ஸ்டைலில் வெளியானது அந்தப் படம். அப்போதெல்லாம் 16 ரீலுக்கு மேற்பட்ட படங்களே வந்து கொண்டிருந்த நிலையில், ஹாலிவுட் படம் போலவே 12 ரீலில், குறைவான நீளத்தில் எடுக்கப்பட்ட படமாகவும் அது திகழ்ந்தது. அப்படத்தை மிகத் துணிச்சலாகத் தயாரித்திருந்தது ஏவி.எம். நிறுவனம்.

படத்தில் சிவாஜி, பண்டரிபாய், ஜாவர் சீதாராமன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். திரைக்கதை வசனத்தை ஜாவர் சீதாராமன் எழுதியிருந்தார். பாடல் கிடையாது என்பதால், பின்னணி இசையை மட்டும் ஏவி.எம்.மின் வாத்திய கோஷ்டியே கவனித்துக் கொண்டது. மாருதி ராவின் ஒளிப்பதிவு, ஹாலிவுட் பாணியில் இருப்பதாக எல்லோராலும் பாராட்டப்பட்டது.

இந்தப் படத்தின் கதை, இயக்கம், வீணை எஸ். பாலச்சந்தர். 'சீதா கல்யாணம்' என்ற படத்தில் எஸ். பாலச்சந்தரின் குடும்பத்தினர் பலர் நடித்தனர். பாலச்சந்தருக்கு அப்போது ஐந்து வயதுதான். அவரும் கஞ்சிரா வாசிக்கும் ஒரு சிறுவன் கதாபாத்திரத்தில் நடித்தார். அவர்தான் தமிழ் சினிமாவின் முதல் ஆண் குழந்தை நட்சத்திரம் என்றொரு தகவல் சொல்கிறது. 1948-ல் 'இது நிஜமா' என்ற படத்தில் இரட்டை வேடத்தில் நடித்தார். ஒரு தமிழ் சமூகப் படத்தில் இரட்டை வேடம் இடம்பெற்ற பெருமையை அப்படம் பெற்றது.

அதே ஆண்டில் 'என் கணவர்' என்ற படத்தை

முதல் முறையாக இயக்கினார் எஸ்.பாலச்சந்தர். அப்போது அவருக்கு வயது வெறும் 21 மட்டுமே. யாரிடமும் உதவி இயக்குனராகப் பணியாற்றாமலே இயக்குனரான பெருமையும் அவருக்கு உண்டு. கதை, திரைக்கதை, இயக்கம், இசை, எடிட்டிங், நடிப்பு, பாடல், பின்னணி பாடகர் என்று அஷ்டா வதானியாகத் திகழ்ந்தவர்.

'ரோஷமான்' என்ற ஜப்பானிய படத்தின் பாதிப்பில்தான் 'அந்த நாள்' படத்தை இயக்கியிருந்தார் பாலச்சந்தர். இப்படத்தில் உதவி இயக்குனராக முக்தா வி.சீனிவாசன் பணியாற்றினார். டைரக்ஷன் எஸ்.பாலச்சந்தர் என்ற டைட்டில் கார்டிலேயே, உதவி வி.சீனிவாசன் என்று போட்டுக் கௌரவப்படுத்தப்பட்டார்.

இப்படம் குறித்து, பிரபல இயக்குனர் கே.பாக்யராஜிடம் கருத்துக் கேட்டேன். எனக்குத் தெரிந்து 1980-ஆம் வருடத்திற்குப் பிறகு வந்திருக்க வேண்டிய ஒரு படத்தை, 1954-ஆம் வருடமே எடுத்த பெருமை 'அந்த நாள்' படத்தை இயக்கிய வீணை எஸ்.பாலச்சந்தரைச் சாரும். இதிகாசம், புராணம், ராஜா கதைகள் என்று திரைப்படங்கள் வந்து கொண்டிருந்த நேரத்தில், மேற்கத்திய பாணியில் த்ரில்லர், திரைப்படங்களை எடுத்தவர் அவர். இவருக்கு பின்னோடிகளாகத்தான் மற்றவர்களைச் சொல்லலாமே தவிர, அவருக்கு முன்னோடியாக யாரும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை.

"அந்தக் காலக் கட்டத்தில், சினிமா என்றாலே பாட்டு, நடனம், சண்டை என்று இருந்த போது, அந்த வழக்கங்களை எல்லாம் உடைத்து கதைக்குத் தேவையானவற்றை மட்டுமே எடுத்து வெற்றி பெற்ற திரைப்படம் 'அந்த நாள்'. இன்றுவரை தமிழ் சினிமா என்றால் 'அந்த நாள்' திரைப்படத்தை நினைவுகூராமல் இருக்க முடியாது. பாடலே இல்லாத, வித்தியாசமான சஸ்பென்ஸ் படம் அது.

"இந்த ஒரு படம் மட்டுமல்ல. அவர் இயக்கிய 'பொம்மை', 'நடுஇரவில்' 'அவனா இவன்' போன்றவையும் இதே மாதிரி வித்தியாசமான படங்கள்தான். அந்த நாள் திரைப்படத்தில் சிவாஜி ஆன்டி ஹீரோவாக நடித்திருந்தார். சிவாஜி ஹீரோவாக வெற்றி பெற்று வலம் வந்து கொண்டிருந்த நேரம் அது. எனினும், துணிச்சலாக, வில்லன் போன்ற ஒரு கதாபாத்திரத்தில் அதுவும் தேசத்தையே காட்டிக் கொடுக்கும் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அந்தப் படம் சிவாஜி படமாகப் பார்க்கப்பட வில்லை. வீணை எஸ்.பாலச்சந்தர் படம் என்று, இயக்குனரின் பேரைச் சொல்லும் படமாகவே அது

விவாகரத்து வழக்கில் தடுமாறும் ரம்பா!

விவாகரத்து வழக்கில் ஆஜராகாத நடிகை ரம்பாவுக்கு நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

2010ம் ஆண்டு, ரம்பாவுக்கும், ஈழத்தமிழரான இந்திரகுமாருக்கும் திருமணம் நடந்தது. இருவரும் கனடாவில் வாழ்ந்தனர்.

இரு பெண் குழந்தைகள். இந்நிலையில், கணவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ரம்பா சென்னைக்கு வந்துவிட்டார்.

சென்னை குடும்பநல நீதிமன்றத்தில் ரம்பா ஒரு வழக்கு தொடர்ந்தார். தன் கணவரை தன்னுடன் சேர்ந்து வாழ உத்தரவிடவேண்டும் என்று கேட்டார்.

"தற்போது சினிமாவில் நடிக்காததால், தனக்கு வருமானம் எதுவும் இல்லை. அதனால் 1.50 லட்சம் ரூபாய் தனக்கும், தலா 50 ஆயிரம் வீதம் இரு பிள்ளைகளுக்கு ஒரு லட்சம் என மொத்தம் 2.50 லட்சம் ஜீவனாம்சம் வழங்குவதற்கு தனது கணவருக்கு உத்தரவிட வேண்டும் என்று ரம்பா நீதிமன்றத்தில் கேட்டிருந்தார்.

இந்த வழக்கு கடந்த டிசம்பர் 3ம் திகதி விசாரணைக்கு வந்தது. அங்கே புதிய மனுவொன்றைத் தாக்கல் செய்தார். "குழந்தைகள் இருவரையும் சென்னையில் படிப்பிக்கிறேன். இப்போது கணவர் என்னுடன் சேர்ந்து வாழவில்லை. இந்த இரு குழந்தைகளின் சட்டப்படியான பாதுகாவலராகத் தன்னை நியமிக்க வேண்டும்" என்று புதிய மனுவில் கேட்டிருந்தார்.

இந்நிலையில், புதிய மனு வழக்கு விசாரணை நீதிமன்றத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ரம்பா தரப்பு வக்கீல்கள் ஆஜராகி, விசாரணையைத் தள்ளி வைக்கக் கேட்டனர்.

இதற்கு நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்து, 'கணவனுடன் சேர்ந்து வாழக் கேட்டு விட்டு ரம்பா விசாரணைக்கு வராமல் இருந்தால் என்ன அர்த்தம்? கடந்த டிசம்பர் 3 விசாரணைக்கும் வரவில்லை. இப்போதும் ரம்பா வரவில்லை. என்று நீதிபதி கோபத்துடன் கேட்டார். பின்னர் விசாரணையை பிப்ரவரி 4ம் திகதிக்கு தள்ளி வைத்தார் நீதிபதி.

மேக்கப்பில் சொதப்பிய தீபிகா!

லொஸ் ஏஞ்சல்ஸ் பிரிமியர் நிகழ்ச்சிக்கு நடிகை தீபிகா படுகோனே அணிந்து வந்த உடை, கவர்ச்சிகரமாக இருந்தாலும், அந்த உடைக்கு ஏற்ற மேக்கப்பை போடாமல் சொதப்பிவிட்டார்! அதுவும் முகத்தில் எண்ணெய் வழிந்து கொண்டிருந்தது. அழகு சொட்டும் முகம் இப்படி இருக்கிறதே என்று ரசிகர்களுக்கு கவலை!

இந்த மாதத்துடன் 'பாகுபலி - 2' படத்தின் தனது காட்சிகளை நடித்து முடிக்கிறார் தமன்னா. மற்றவர்களுக்கு எப்படியோ, தமன்னாவிற்கு 'பாகுபலியின் அவந்திகா கதாபாத்திரம் ரொம்பவே ஸ்பெஷல். "அந்த கேரக்டர்தான் என் வாழ்க்கையை மாற்றியமைத்தது. அதற்கு முன், சினிமாவில் என்னை மிக சாந்தமான பெண்ணாகப் பார்த்தவர்கள். இப்போது தைரியசாலியாகப் பார்க்கிறார்கள்.

அசாத்தியமான தைரியம் பெற்றுவிட்டு தமன்னா!

உண்மையில், முன்பெல்லாம் தனியாக வெளியே செல்ல பலமுறை யோசிப்பேன். இப்போது, மனதில் ஒரு அசாத்தியமான தைரியமும் பலமும் வந்திருக்கிறது. அதற்கு காரணம், 'பாகுபலி! தேங்க்ஸ் டு அவந்திகா" என்கிறார் தமன்னா.

பார்க்கப்பட்டது. படம் வெளிவந்து வெகுகாலம் கழித்து நான் பார்த்து ரசித்த திரைப்படம் அது. இன்றும் என்னுடைய மனதில் நிற்கிறது" என்றார் கே.பாக்யராஜ்.

பாக்யராஜ் சொன்ன மாதிரி 'பொம்மை', 'நடு இரவில்' ஆகிய படங்களும் அவரது இயக்கத்தில் வெற்றி பெற்ற படங்களே. இதில் 'பொம்மை', ஒரே நாளில் நடக்கக்கூடிய கதையாக எடுக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அது மிகவும் புதுமையாக இருந்தது. 'பொம்மை' படம் முடிந்ததும், படத்தை உருவாக உழைத்தவர்களை, எஸ்.பாலச்சந்தரே அறிமுகம் செய்து பட்டியலிட்டது அப்போது பலரையும் வியக்க வைத்தது.

சினிமாவை விட வீணையைத்தான் அவர் முக்கியமாகக் கருதினார். பாலச்சந்தர் ஒரு படத்தில், சிவாஜி வீணை வாசிக்கும் ஒரு காட்சிக்கு, அவரைப் பின்னணி இசையில் வீணை வாசிக்க அழைத்தார்கள். 'எனது வீணையை சினிமாவுக்குப் பயன்படுத்த விரும்பவில்லை' என்று மறுத்து விட்டார். 'நான் ஏதோ புண்ணியம் செய்திருக்கிறேன். எனவே தான் எனக்கு வீணை கிடைத்திருக்கிறது. நான் ஏதோ பாவம் செய்திருக்கிறேன். அதனால்தான் சினிமாவில் இருக்கிறேன்' என்று அவர் நகைச்சுவையாகச் சொல்வதுண்டு.

– எஸ்.ஜே.இதயா

தந்தை முன் காதல் காட்சியில் நடிக்க தயக்கமாக இருந்தது

அர்ஜுன் தயாரித்து இயக்கும் படம் 'காதலின் பொன் வீதியில்'. இது முழு நீள காதல் கதையாக தயாராகி வருகிறது. இதில் அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா நடிக்கிறார். இந்த அனுபவம் பற்றி கூறிய அவர்...

"இது ஒரு காதல் கதை. எனக்கும் எனது ஜோடியாக நடிக்கும் நாயகன் சாந்தனுக்கும் ஒரே அளவிலான வேடம்தான். இதில் நான் நிருபராக நடிக்கிறேன். காதலினால் ஏற்படும் பிரச்சினையை நாயகன், நாயகி இருவரும் எதிர்கொள்கிறோம். முதலில் இந்த படத்தில் அப்பா முன்பு காதல் காட்சிகளில் நடிக்க தயக்கமாக இருந்தது. பின்னர் சரியாகிவிட்டது.

படப்பிடிப்பு தளத்தில் எனக்கு பைரக்டராகத்தான் அப்பா செயல்பட்டார். அதனால் முதலில் என்னிடம் இருந்த தயக்கம் பிறகு மாறிவிட்டது. காதல் காட்சிகளில் நாயகனுடன் இயல்பாக நடித்தேன். எனது குடும்பத்தில் தாத்தா, அப்பா, அம்மா என்று பலர் நடிகர்களாக இருக்கிறார்கள். எனவே, படப்பிடிப்பு சூழ்நிலை புதிது அல்ல. பழக்கப்பட்ட விஷயமாகத்தான் இருந்தது" என்றார்.

சொல்கிறார் அர்ஜுன் மகள் **ஐஸ்வர்யா**

அமலா பால் உல்லாசம்!

நடிகை அமலா பால் ஒற்றைக் காலில் நின்று தன் காதலர் இயக்குனர் விஜய்யை கைப்பிடித்தார். அதெல்லாம் முடிந்து போன கதையாகிவிட்டது.

விஜய்க்கு 'குட்பை' சொன்ன நாளிலிருந்து, இதுநாள்வரை தன் மகிழ்ச்சியை எப்படி எல்லாம் கொண்டாட முடியுமோ அந்தளவுக்கு கொண்டாடுகிறார். நண்பர்களுடன் ஊர் சுற்றல், பார்ட்டிகள் என்று உல்லாசமாகக் கழிக்கிறார்.

அதுமட்டுமல்ல, பல படங்களில் நடிக்கிறார். மலையாளப் படங்களும் தேடி வருகின்றன. நடிகை ரேவதி இயக்கும் படத்தில் அமலா பால்தான் ஹீரோயின்.

டயபட்டிஸ் சலன்ஜ்

DIABETES CHALLANGE

2017 ஆம் ஆண்டு யாரும் இதுவரை கண்டிராத, அனுபவித்திராத புத்தம் புதிய வருடம் நம் கரங்களில் தவழ்கிறது. ஒவ்வொருநாளும் புதிதாகப் பிறக்கிறது. புதிய புதிய அனுபவங்கள், புதிய புதிய சம்பவங்கள், புதிய புதிய ஆராய்ச்சிகள் எல்லாமே புதுமை....

'புதினம்' நேயர்களுடன் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டு இந்தப் புதிய ஆண்டு, எவருமே இதுவரை அணுகாத ஒரு புதிய கோணத்தில் நம் உடல் கூறுகளையும், அதில் ஏற்படும் நோய்களையும், அதிலிருந்து மீண்டு வரும் புதிய உத்திகளையும் ஆராய்வோம்.

டயபட்டிஸ் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மனித குலத்துக்கு பெரும் சவாலாக எந்த மருந்துகளுக்கும் கட்டுப்படாமல், பெரும் அரக்கனாக வளர்ந்து பவனி வந்து கொண்டிருக்கிறது. இந்த டயபட்டிஸ் அரக்கனைக் கட்டுப்படுத்துவது எப்படி? கொன்று ஒழிப்பது எப்படி? மனித குலத்தை இந்த அரக்கனின் பிடியிலிருந்து மீட்டு எடுப்பது எப்படி? மருத்துவ உலகுக்கும் புரியாத புதிராகவும், மிகப்பெரிய சவாலாகவும் டயபட்டிஸ் அரக்கன் பிரமாண்டமாக வளர்ந்து வருவது அச்சுறுத்தலாக இருக்கிறது. டயபட்டிக்ஸ் பிரச்சினையின் தனிப்பட்ட தாக்குதல் ஒரு புறமிருக்க, இந்த டயபட்டிஸ் பிரச்சினை, உயர் இரத்த அழுத்தம் (HIGH BLOOD) PRESSURE - HYPER TENSION), CHOLESTROL இன்னும் பல விதமான வியாதிகளுடன் கூட்டணி அமைத்தும், நம் உடலில் பல உறுப்புக்களை செயல் இழக்கச் செய்தும் (KIDNEY FAILTURE, HEART FAILTURE, BRAIN FAILTURE) உயிராபத்தை உண்டாக்குகின்றது. அறியாமையே மனித குலத்தின் கஷ்டங்களுக்கு எல்லாம் காரணம் என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார் இளம் ஆன்மீக விஞ்ஞானி சுவாமி விவேகானந்தர். எவ்வளவுதான் நாம் முயற்சி செய்து விவரங்களை அறிந்து கொள்ள தெரிந்து கொள்ள - தெளிவடைய நாம் முயற்சி செய்தாலும், பெரும் குழப்பம் உண்டாக்கும் ஒரு குழுவினர், தவறான வதந்திகளைப் பரவவிட்டு, ஒவ்வொரு மனிதனையும் அறியாமை எனும் இருட்டு அறையிலேயே வாழ்நாள் முழுவதையும் கழிக்கும்படி செய்து விடுகின்றனர்.

"என்னுடைய வாழ்க்கையே மனித குலத்துக்கு நான் சொல்லும் செய்தி. (MY LIFE IS THE MESSAGE TO THE WORLD) என்று தனது சத்திய சோதனை சுயசரிதையில் மகாத்மா என்று போற்றப்படும் காந்தி குறிப்பிட்டுள்ளார். மகாத்மாவின் வாசகங்களை புரட்டிப் போடுங்கள் நண்பர்களே! உங்கள் வாழ்க்கையே உங்களுக்கான செய்தி. உங்கள் வாழ்க்கையைப் புரட்டிப் பாருங்கள் உங்கள் நடைமுறை வாழ்க்கையை அலசி ஆராயுங்கள். டயபட்டிஸ் அரக்கன் நம் உள்ளே புகுந்த தடம் புலப்படும். எப்படி நம் உள்ளே நுழைந்தான் இந்த டயபட்டிஸ் என்பதை நாமே அறிந்து கொண்டால், வந்த வழியே வெளியே விரட்டியடிப்பது மிகவும் எளிது. தாமதிக்காமல், உங்களை நீங்களே ஆராயத் தொடங்குங்கள் வழிகாட்ட நாங்கள் இருக்கின்றோம். நமது ஹோமியோகேர் துணையுடன் டயபட்டிஸ் அரக்கனை வந்த வழி விரட்டியடிப்போம்.

கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை பெரும் செல்வந்தர்களை மட்டும் குறிவைத்துத் தாக்கிய டயபட்டிஸ் தற்போது எல்லாத் தரப்பு மக்களையும் ஆக்கிரமித்தது எப்படி? எல்லாருமே பெரும் செல்வந்தர்கள்போல், பகட்டுக் காட்டி சொகுசாக வாழ முயற்சிப்பதுதான் காரணமாக இருக்குமோ?

டயபட்டிஸ் பிரச்சினை பலவிதமான தாக்கங்களை ஒரு நோயாளியிடம் ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு தாக்குதலும், ஒவ்வொரு முடிச்சுகளாக ஒன்றின்மேல் ஒன்று அமைந்து பெரும் சிக்கலாக மாறி விடுகிறது! ஒவ்வொரு முடிச்சாக அவிழ்த்துக் கொண்டே வந்தால், சிக்கல் நீங்கி, வாழ்க்கை நீரோட்டம் ஆரோக்கியமாக அமையும். முதலில் ஏற்படும் முடிச்சே எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம். முதல் முடிச்சை அறித்து கொண்டால், அடுத்த அடுத்த முடிச்சுகள் விழுவதைத் தவிர்க்கலாம். சிக்கலைப் பிரித்து எடுத்து விடலாம். தெளிவு பெறலாம்.

முதல் முடிச்சு

முன்பெல்லாம் ஐம்பது, அறுபது வயதுக்காரர்களை குறிவைத்துத் தாக்கிய டயபட்டிஸ், கடந்த கால் நூற்றாண்டுகளாகப் படிப்படியாக முன்னேறி இப்போதெல்லாம் இருபது, முப்பது என இளம் தலைமுறையினரையே தாக்கி முடக்கிப் போட்டு விடுகின்றது.

முன்பெல்லாம் அறுபது வயது கடந்தவர்கள் டயபட்டிஸ் நோயாளியாக அடையாளம் காணப்பட்டால், கடுமையான உணவுத் தடை விதிக்கப்பட்டு, வாழ்க்கையே ருசியற்றுப் போனதாக உணரத் தொடங்குவார். தொடர்ந்து மருந்துகள் ஒவ்வொரு நாளும் தவறாமல் உட்கொள்ள வேண்டும். முந்தைய இயல்பான வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். என்று ஆலோசனை கூறப்படும். அவர் தன்னுடைய வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டதாக கற்பனை செய்து கொள்வார். அறுபது வருடங்கள் வாழ்க்கையை அனுபவித்து முடித்த ஒரு டயபட்டிஸ் நோயாளியின் இந்தக் கற்பனை, மனப்பயம், உயிர்ப்பயம் குறித்து நாம் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

இதே போன்ற மனப்பயத்தினை எதிர்கால வாழ்க்கை குறித்த பெரும் கனவுகளோடு இருக்கும் ஒரு முப்பது வயது டயபட்டிஸ்காரர் அனுபவித்தல் எவ்வளவு பெரிய கொடூரம் என்பதை ஒவ்வொரு டயபட்டிஸ் நோயாளியும் உணர வேண்டும்.

டயபட்டிக்ஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தித், தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

முதல் முடிச்சை நீக்க முயற்சி செய்வோம்.

ஹோமியோபதி டாக்டர்

ஆர்.தியாகராஜன்

பேசுகிறார்

டயபட்டிஸ் குறித்த பயம் தேவையில்லை. நம் கண் எதிரிலேயே, நம்மோடு, நம் குடும்பத்தில் கூட எவ்வளவோ டயபட்டிஸ் வருத்தக்காரர்கள் நாற்பது, ஐம்பது வருடங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முன் வாழும் உலகத்தை சற்று உற்று நோக்கினால் எழுபது, என்பது வயது கடந்தவர்களுடன் உரையாடினால், நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக டயபட்டிஸ் நோயுடன் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காணலாம். இவர்கள் உயிரோடு இருப்பதைக் காண்பதன் மூலம் டயபட்டிஸ் குறித்த மரண பயத்தை (NO LIFE THERENT) புறந்தள்ளி விட வேண்டும். டயபட்டிஸ் வந்து விட்டதே என்று பீதியடையக் கூடாது. சுகமாக எதிர்கொள்ளப் பழக வேண்டும்.

எத்தனை வயதில் டயபட்டிக்ஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம் என்ற நம்பிக்கை ஒளியை இந்தப் புத்தாண்டில் நமக்கு நாமே ஏற்றி வைத்து எந்த சூழ்நிலையிலும், அந்த நம்பிக்கை ஒளியை அணையவிடாமல், போற்றிப் பாதுகாக்க வேண்டும்! இந்த நம்பிக்கையுடன் டயபட்டிஸ் பிரச்சினையை எதிர் கொண்டால், எளிதில் கட்டுப்படுத்தி அமைதியாக, ஆரோக்கியமாக வாழலாம்.

'ஹோமியோகேர்' மருத்துவமனை இந்த 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளும் டயபட்டிஸ் சலன்ஜ் டீரோகிராம் மூலமாக 50 வயதுக்குட்பட்ட எந்த ஒரு டயபட்டிஸ் நோயாளியும், வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படாமல், மூன்று வருட கால தொடர் கண்காணிப்பு, ஆலோசனை சிகிச்சை மூலமும், 50 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு டயபட்டிஸ் நோயாளியும், ஐந்து வருட கால தொடர் கண்காணிப்பு ஆலோசனை சிகிச்சை மூலமும் முற்றிலுமாக டயபட்டிக்ஸ் பிரச்சினையை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்து ஆரோக்கியமாக வாழக் கூடிய அனைத்து சாத்தியக் கூறுகளும் உள்ளன. சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 02081441553

ஆஸ்துமா



ஹோமியோபதி மருத்துவம்

+

உங்கள் ஒத்துழைப்பு

100% தீர்வு

ஆஸ்துமா நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.

உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை

சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயாபட்டிஸ் (Diabetes)

இலவச மருத்துவ ஆலோசனைக்கு

0208 144 1553

HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

போன்: 0208 144 1553

வெப்சைட்: www.homoeocare.com

இமெயில்: homoeocare@rediffmail.com

புதிய பொலிவுடன் இனிதே உங்கள் இல்லம் நோக்கி வருகிறது

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி

24 மணி நேரமும் கீழ்கண்ட தளங்களில் அம்மனை தரிசித்து மகிழுங்கள்...

www.ammanealing.org என்ற இணையத்திலும்,
சாலை டிவி மற்றும் Smart Phone, Ipad, Tablet

மேலதிக விபரங்களுக்கு:

5 Chapel Road, London W139AE

email: info@ammanealing.org, Phone: 0044 - 208 810 0835

Charity No: 1014409

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10.08.1991 Charity No:1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE TEL: 020 8810 0835 020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

காக்கும் கரங்கள் SAVE A CHILD

ஒரு குழந்தையை பொறுப்பெடுங்கள் பராமரிப்புக்கு மாதம் £15 மட்டுமே! இலங்கை தமிழ்பகுதியில் பெற்றோர் என்ற பந்தமிழந்து உற்றார் உறவினர்கள் என்ற சொந்தமிழந்து தவிக்கின்ற ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உதவும் நோக்குடன் காக்கும் கரங்கள் என்ற நற்பணியை ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம் நடத்திவருகின்றது. ஆண்டுக்கு £80,000.00 அனுப்படுகின்றது. உங்கள் பேராதரவை நாடுகின்றோம்.

You magnanimity to sponsor an orphan child will enhance the opportunity to brighten his or her future and offer them a sense of security and hope. These children will get the exposure for an education and healthy life which is deprived to them since they are orphans. Your timely help will alleviate their vulnerability and raise their prospect of a new life. We aim to ease the harsh reality of being orphaned and we currently sponsor over 450 children a month at the cost of £80,000.00 per year (no admin charge are deducted). Please support to us and join today...

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10.08.1991 Charity No:1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய பல்கலைக்கழக உயர்கல்வித் திட்டம்

இன்று நீங்கள் உயர்கல்வி
கற்க மாணவர்களுக்கு வழங்கும்
பண உதவி எமது தாயகத்தின்
எதிர்கால சுபிட்சத்திற்கு வழிவகுக்கும்

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
-பாரதியார்-

உங்கள் பேராதரவை வழங்கி உதவுங்கள்

இரண்டெழுத்து சுமைதாங்கி



தாய்,

இரண்டெழுத்து சுமைதாங்கி.

நம் கவலைகளை அந்த மடியில் மட்மே இறுக்கி வைக்க முடியும் தாய் - பத்து மாதங்கள் நம்மை சுக பத்திரமாய் சுமந்து திரிந்த அம்மா பறவை. எந்த விநாடியும் நம்மை பாச முந்தானையில் முணிந்து வைத்திருக்கும் கண் முன் நடமாடும் பெண் கடவுள்.

தாய் நம் உறக்கத்துக்காக தன் தூக்கம் தொலைத்தவள். நம் பசிக்காய் தன் தாகம் மறந்தவள். இதயத்தில் அழித்து வரைய முடியாத ஓவியம்.

உடலும் உயிரும் தந்த தொப்புள் கொடி உறவு.

அம்மா.

நினைக்காமலே பார்க்கிறேன்.

கண்களை மூடிக் கொண்டும்... திறந்து கொண்டும்....

அம்மா என்ற வார்த்தை இதயத்துக்குள் புரண்டதும் கண்களுக்குள் கவிதை வந்து விடுகிறது.

'மலம் துடைத்து
கக்கியது ஏந்தி
சிறுநீரில் நனைந்து
சிணுங்கல்களுக்கு
கண் விழித்து....
உணவாய்
உதிரம் தந்தவளுக்கு
என் செய்வேன்...?
அம்மா.....?

வெள்ளை காகிதத்தை கறுப்பு மையால் நனைத்திருப்பது இதயத்தை கண்ணீரால் நனைத்த எனது வார்த்தைகள்தான்.

என் அம்மா அழகு

எந்த குழந்தைக்கும் தன் அம்மா அழகுதான்.

நான் என் அம்மாவிடம்

நான்கு வயதில் கேட்டது ஞாபகப்பெட்டியில் பத்திரமாய் இருக்கிறது.

'அம்மா.. அம்மா.. எனக்கு அந்த பழம்மா..'

-நான் என் தாயிடம் கேட்டது பலாப் பழமோ, ஆப்பிள் பழமோ அல்ல.

ஒரு ஏழைத் தாய் பறித்துக் கொடுக்கக் கூடிய பழம்தான்.

சப்பாத்தி கள்ளிப்பழம்.

நாக்கை பூச்சிவப்பாய் அடிக்கிற பழம்

தமிழ் மண் எங்கும் -

கிராமங்களில் சப்பாத்தி கள்ளியைப் பார்க்கலாம்.

நீண்டு நீண்டு தட்டையாய் வளர்ந்து. முள்ளை போர்வையாய் போர்த்திக் கொண்டு நிற்கும் தாவரம். அதன் உச்சத் தலையில் -

முந்திரிப் பழத்தை தலை கீழ் வைத்ததைப் போல் காய்ந்திருக்கும் கள்ளி காய்கள்.

இளம் பச்சை நிறத்தில் கொண்டையில் பூ வைத்து நின்றது கள்ளி.

அதன் பழமோ செக்கச் செவேரென்று பார்ப்பதற்கு பரவசம் தந்தது.

பழத்தை சுற்றி புசு புசு வென்று முட்கள் காவல் இருக்கும்.

அதன் சுவையோ நாக்கை சப்புக் கொட்ட வைக்கும்.

பழத்தை கையில் முள் குத்தாமல் கவனமாய் பிளந்து தின்ன வேண்டும்.

என் அம்மாவுக்கு கள்ளிப்பழத்தை உடைப்பது கை வந்த கலை.

கவனம் தொலைத்து, கள்ளிப்பழத்தை விழுங்க ஆசைப்பட்டால் 'நடுமுள்' நம் தொண்டையை கிழித்து விடும்.

நான் என் அம்மாவிடம் கேட்ட கள்ளிப்பழம் பறிக்க முடியாத இடத்தில் இருந்தது. சப்பாத்திகள்ளி உள்ளே நுழைய முடியாதபடி அடுக்கடுக்காய் இருந்தது.

அருகில் பெரிதும் சிறிதுமாய் பாம்பு புற்று இருந்தது.

பழத்தை பறிக்க வேண்டுமென்றால் பாம்பு புற்றைக் கடந்து முள் சுமந்த கள்ளியில்தான் கால் மிதித்து நடக்க வேண்டும். தவறி சறுக்கி விழுந்தால் உடம்பெங்கும் முட்கள் ஊசிகளாய் குத்தும்.

சப்பாத்தி கள்ளியின் பூச்சி முள் புடுங்க நாலு நாள் ஆகும்.

நானோ கள்ளிப் பழம் வேண்டுமென பிடிவாதமாய் இருந்தேன்.

பால்பாண்டி தாத்தா கடையில் 'கோழிக்கூடு' வாழைப்பழம் மூன்று வாங்கி தருவதாக ஆசை காட்டியும் நான் அடங்கவில்லை.

என் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

மகனின் கண்ணீர் துடைக்க முள் கள்ளி நுழைந்து பழம் பறித்து வந்தாள்.

அம்மாவின் கை காலெங்கும் முட்களின் கீறல்கள்.

எட்டிப் பார்த்தது இரத்தத்தின் சிவப்பு.

கள்ளிப் பழம் பார்த்ததும் சிரித்தேன் கண்ணீரை மறந்து.

என் அம்மாவுக்கு வலிக்கவில்லை.

அம்மா....

மூன்று எழுத்து கவிதை.

உயிரும் மெய்யும் உயிர் மெய்யும் கலந்த அம்மா.

மடியில் பாசத்தால் தூளி கட்டி தாலாட்டு பாடிய தாய்.

இணற்றில் பனை ஓலை வாளியால் தண்ணீர் இறைத்து என்னைக் குளிப்பாட்டி மணக்கும் சேலைத் தலைப்பால் தண்ணீர் சொட்டும் என் ஈரத்தலையைத்துவட்டி மினு மினுக்கும் ஈர குழந்தையாய் என்னை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு இன்னொரு கையில் தண்ணீர் குடத்துடன் முருங்கை மரத்து நல்ல கிணற்றிலிருந்து

புதினம் உலகளாவிய 'தாயெனும் கோயில்' கட்டுரை போட்டி

3வது பரிசு

புதினம் 20 வது ஆண்டில் பயணிக்கத் தொடங்கியதைக் குறிக்கும் முகமாக நடத்தப்பட்ட லட்சம்பேர் (இலங்கை) உலகளாவிய 'தாயெனும் கோயில்' கட்டுரைப் போட்டியில் முன்றாம் பரிசு பெற்ற 'இரண்டெழுத்து சுமைதாங்கி' கட்டுரை இங்கு வெளியாகிறது. இந்தக் கட்டுரையை எழுதியவர் முகவரி மதுரா, 316 கோயில் தெரு பரப்பாறு - 624110, திருநெல்வேலி மாவட்டம் தமிழநாடு.

அம்மா நடந்து வந்தது நினைவில் மோதுகிறது மல்லிகை சரமாய்.

குளத்தங்கரையில் காவலுக்கு நிற்பது போல வரிசையாய் நிற்கும் பனை மரங்களை பார்த்திருக்கிறீர்களா...? அந்த பனை மரத்து ஓலைகளில் தொங்கிக் கொண்டிருக்கும் தூக்கிணாங்குருவி கூடுகளின் ஆட்டத்தை ரசித்திருக்கிறீர்களா....? இன்றும் அந்த தூக்கிணாங் குருவி கூடுகளைப் பார்த்ததும் அம்மா என்றோ சொன்ன தூக்கினாங் குருவிகளின் வாழ்க்கைதான் நினைவில் ஆடும்.

மினுக்கட்டான் பூச்சியின் பின்புறத்திலிருக்கும் உயிர் விளக்காய் அம்மாவின் நினைவுகள் மினுங்கிக் கொண்டேயிருக்கும் உயிர் விளக்காய்....

அம்மாவை நினைத்தால்....

இமைகளை நனைக்கிற கண்ணீர் காகிதத்தை நனைத்துவிடும்.

இனி அம்மா மடியில் படுத்து அழமுடியாது.

இந்த சாவுக்கு ஒரு சாவு வந்திருக்க கூடாதா..?

கண்களில் தூசியையும் புழுதியையும் அள்ளி வீசுகிற தூறாவளி காற்றால் மரணம் ஒரு நாள் வந்து அம்மாவை தூக்கிச் சென்றுவிட்டது.

இனி...

அம்மாவை எங்கே பார்ப்பது...?

ம்.....

ஓடுகிற தாமிரபரணி நதியைப் பார்க்கிறேன் அம்மாவாய்.....

நம்மை சுமக்கிற பூமியை கொண்டாடுகிறேன் அம்மாவாய்....

பேசுகிற பேச்சுத் தமிழில்....

எழுதுகிற எழுத்து தமிழில்.....

ஆடுகிற ஆட்டத் தமிழில்.....

மொழியின் தாலாட்டில் பார்க்கிறேன் அம்மாவை

பத்து மாதம் தன் வயிற்றில் சுமந்த அம்மா...

பிறந்த பின் தன் நெஞ்சில் சுமந்த அம்மா....

வளர்ந்தும் கண்ணில் சுமந்த அம்மா...

அம்மா... அம்மா... அம்மா..

டாக்டர் ஸ்ரீதரன்

பணம் படைத்த ஏழைகள்



நாம் வாழும் உலகில்-மனிதனால் உருவாக்கப்பட்ட எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் - அவற்றில் மூன்று விடயங்களின் சங்கமத்தை அவதானிக்கலாம். ஒன்று - அந்தப் பொருளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள். இரண்டு அந்த மூலப்பொருட்களை ஒன்றாக இணைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம். மூன்று அந்தப் பொருளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட உருவாக்கியவனின் அறிவு.

ஒரு சிறு உதாரணம் - நாம் அன்றாடம் அமரும் ஒரு நவநாகரீக நாற்காலி. மனிதனால் உருவாக்கப்பட்ட இந்தப் பொருளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள்: மரம் - ஆணி - வித விதமான துணி வகைகள் - பல வகையான பிளாஸ்டிக் - பல வகையான உலோகங்கள். இந்த மூலப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்: அறவை இயந்திரங்கள் - கடைச்சல் இயந்திரங்கள் - வண்ணமடிக்கும் இயந்திங்கள். இந்த நவநாகரீக நாற்காலிக்குள் மறைந்திருப்பது ஒருதனிமனிதனின் அல்லது பல மனிதர்களின் அறிவு. இந்த மூன்று விடயங்களும் ஒன்று சேராவிடில் - இங்கு எந்தப் பொருளும் உருவாகியிருக்க முடியாது.

தெரிந்தோ - தெரியாமலோ - இந்த உண்மையின் அடிப்படையில் இயங்கும் நமது அன்றாடச் செயல்பாடுகளுக்கு வேறு ஒரு உதாரணம் நாம் தாயகத்தில் வாழ்ந்திருந்த போது - வெளிநாட்டிலிருந்து வந்த நமது உறவினர் ஒருவர் நமக்குப் பரிசாகக் கொடுத்த அந்த அதி நவீன - விலை உயர்ந்த கடிகாரத்தில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்ட போது- நாம் அதை யாரிடம் எடுத்துச் சென்றோம்? கட்டிடப் பொறியியலாளர்? பல் வைத்தியர்? ஜோதிடர்? குருக்கள்? நிச்சயமாக இவர்கள் யாரிடமுமல்ல. அது மட்டுமல்ல - தெரு முனையில் ஒரு சிறிய மேசையின் முன்பு - "இங்கு கடிகாரம் பழுதுபார்க்கப்படும்" என்ற விளம்பரப் பலகையுடன் அமர்ந்திருக்கும் அந்த முதியவரிடம் கூடவல்ல. மாறாக - அந்தக் கடிகாரத்தைப் பற்றி நன்கு அறிந்த - அதன் தொழில்நுட்பங்களை நன்கு உணர்ந்த ஒரு அதி நவீன ஸ்தாபனத்திற்கு எடுத்துச் சென்றோம். எதற்காக?

காரணம் - மனிதனால் உருவாக்கப்பட்ட எந்தப் பொருளிலும் கோளாறுகள் ஏற்படும்போது - அதைச் சரி செய்வதற்கு - அந்தப் பொருள் எதற்காக உருவாக்கப்பட்டது - அதை உருவாக்கியவன் எதற்காக அதை உருவாக்கினான் - அது என்ன என்ன மூலப்பொருட்களால் ஆக்கப்பட்டிக்கிறது - அந்த மூலப்பொருட்கள் எந்த தொழில்நுட்பத்தால் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற அறிவு வேண்டும். உருவாக்கப்பட்ட பொருட்களின் சிக்கலான தன்மை அதிகரிக்க அதிகரிக்க - அதைச் சரி செய்வதற்கான அறிவும் அதிகரித்துக் கொண்டே போகிறது - அரியதாகிக் கொண்டே போகிறது. உதாரணமாக- ஆடிக்கொண்டிருக்கும் நாற்காலியின் ஒரு காலை சரி செய்வதற்கு தேவையான அறிவு வேறு - காரில் திடீரென ஏற்பட்ட அந்த விசித்திரமான சத்தத்தை சரி செய்வதற்கு தேவையான அறிவு வேறு.

இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் - இதை மனதார ஏற்றுக்கொண்டால் கண்களைச் சற்று மூடி இதன் சூட்சுமங்களை நன்றாகப் புரிந்து கொண்டால் இப்பொழுது தெரியும் - தெரிய வேண்டும் அன்றாட வாழ்வில் நாம் புரியும் பித்துக்குளித்தனம். அது என்ன? பார்ப்போம்.

இதுவரை நாம் பேசியது - ஆராய்ந்தது - மனிதன் உருவாக்கிய உருவாக்கங்களைப் பற்றி மட்டுமே. ஆனால் - இந்தக் கட்டுரையை எழுதிய நானும் - இதைப்படிக்கும் நீங்களும் - ஒரு அதிசய - ஒரு அற்ப - ஒரு அபூர்வ உருவாக்கங்கள். ஆனால், நிச்சயமாக நாம் மனிதனின் உருவாக்கங்களல்ல. அதே சமயம் நாம் யாருடைய உருவாக்கங்கள் என்பதும் இங்கு நமது பிரச்சனையல்ல ஆனால் - இங்கு மனிதனால் உருவாக்கப்பட்ட எந்தப் பொருளையும் விட கோடானு கோடி சிக்கலான உருவாக்கங்கள்தான் நானும் நீங்களும் என்பது எனக்கும் தெரியும் உங்களுக்கும் புரியும்.

மனித உடல்! அந்த உடலை இயக்கும் மனம்! உடலையும் மனதையும் இயக்கும் அந்த உயிர்சக்தி! இவற்றின் சங்கமத்தில் உருவாகிய நானும் நீங்களும் உலகைப் பார்ப்பதற்கு கண்கள் - அந்தக் கண்களைப் பாதுகாப்பதற்கு இமைகள்! உணவைச் சீரணிப்பதற்கு ஒரு அமைப்பு - அந்த அமைப்பு தன்னைச் தானே சீரணித்து விடாமலிருப்பதற்கு ஒரு தொழில்நுட்பம்! அடுத்தவனை வாழவைக்கும் மனித மனம் - அவனுக்கு குழி பறிக்கும் அதே மனம்! ஆகாயத்தில் பறப்பதும் மனித மனம் சாக்கடையில் குறிப்பதும் அதே மனம்! புத்தனுக்குள் ஒரு உயிர் - புழுவுக்குள்ளும் அதே உயிர்!

மனிதனுடைய உருவாக்கங்களுக்கு அமைந்த அந்த மூன்று தன்மைகளும் - இங்கே நமக்கும் பொருந்தும் - பொருந்த வேண்டும். எத்தனை எத்தனை மூலப்பொருட்கள் நமக்குள்! எவ்வளவு தொழில்நுட்பம் நமக்குள்! எவ்வளவு அறிவு நம்மை வார்த்தவனுக்கு!

ஆனால் - நமக்கு இதில் எவ்வளவு தெரியும்? - புரியும்? - ஞானிகள்- முனிவர்கள்.

மனித உடலைப் பற்றி - அதை இயக்கும் மனித மனதைப் பற்றி - இவை இரண்டையும் இயக்கும் உயிரைப் பற்றி - இவற்றை உருவாக்கிய மூலப்பொருட்களைப் பற்றி - இவை உருவாகிய விதம் பற்றி - இவை உருவாக்கப்பட்டதன் நோக்கம் பற்றி - இவற்றை உருவாக்கியவனைப்பற்றி- இவற்றில் ஏற்படும் கோளாறுகள் பற்றி - இவற்றில் கோளாறுகள் ஏற்படும்போது அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றி - விளக்கமாக விஸ்தாரமாக - தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது: வேதத்தில் - வேதாந்தத்தில் - உபநிடதத்தில் கைவல்லியத்தில் - இன்னும் இது போன்ற எங்கெங்கல்லாமோ.

ஒரு சிறு உதாரணம். நான்கு உபவேதங்களின் ஒன்றான ஆயுர்வேதம் மனித உடலை விபரிப்பது போல இங்கு யாரும் இதுவரை மனித உடலை விபரித்து விடவில்லை. நமக்குள் உடைந்திருக்கும் - பஞ்ச பூதங்களை - திரி தோசங்களை - திரி குணங்களை - நமது பிரகிருதியை - ஆயுர்வேதம் விபரிப்பது போல இங்கு யாரும் இதுவரை விபரித்து விடவில்லை.

ஆனால் - ஆயுர்வேதம் என்றால் - நம்மில் பலருக்கு ஒரு சிரிப்பு - ஒரு வகை நகைப்பு - ஒருவித ஏளனம்! தாயகத்தில் நாம் வாழ்ந்திருந்த போது - யாராவது "எனது வியாதிக்கு நான் தமிழ்வைத்தியம் பார்க்கிறேன்" என்று நம்மிடம் கூறினால் - "வடி கட்டிய முட்டாள் இவன்" - "படிப்பறிவற்றவன்" - "இவனுக்கு ஏதோ மாற்ற முடியாத வியாதி போலிருக்கிறது" - இப்படித்தான் நமது சிந்தனை ஓடியது. யாராவது ஒரு தந்தை நம்மிடம் தனது மகன் "ஆயுர்வேதம் படிக்கிறான்" என்று கூறினால் - "படிப்பில் அவரது மகன் மகா முட்டாள் அவன் உருப்படவே மாட்டான்" என்பது நமது தீர்க்க தரிசனம்!

கழுத்துப்பட்டி அணிந்து - கருப்புக் கோட்டு அணிந்து - வைத்தியம் பார்ப்பவர்களுக்கு - உடலை எட்டாக வளைத்து "சலாம்" வைத்த நாம் - ஒரு தமிழ் வைத்தியரைப் பார்த்து வெறும் வணக்கம் கூடத் தெரிவிக்கவில்லை.

அது மட்டுமல்ல - வேதம் கூறுகிறது என்று கூறி - வேதத்தில் நம்பிக்கை வைத்து - அரோஹரா பாடி - ஆயிரத்தி எட்டு சங்காபிசேகம் செய்து - "எனது இருதயநோயை மாற்றி விடு அப்பனே" என்று வழிபட்டு விட்டு - ஆங்கில வைத்தியரிடம் செல்லும் நம்மில் பலருக்கு - அதே வேதம் கூறும் ஆயுர்வேத்தில் நம்பிக்கை இல்லை - அந்த வேதம்படித்த வைத்தியரில் நம்பிக்கை இல்லை!

வேதம் கூறுகிறது என்று கூறி - வேதத்தில் நம்பிக்கை வைத்து - அப்பய்பா பாடி - அங்கப்பிரதட்சனை செய்து - "எனது மகனுக்கு இலண்டன் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றுக் கொடு அப்பனே" என்று வழிபடும் நம்மில் பலருக்கு - அதே வேதம் கூறும் ஆயுர்வேத வைத்தியராக நமது பிள்ளை உருவாகுவதில் உடன்பாடில்லை! என்ன லாஜிக் இது?! படைத்தவனையே குழப்பும் லாஜிக்!

அதேநேரம் - பாடுபட்டுத்தேடிய செல்வத்தை அனுபவிக்காமல் - அதை வீட்டிற்குள் பூட்டி வைத்து விட்டு - வீட்டிற்கு முன்னாள் அமர்ந்து சொத்து மதிப்பீடு செய்து கொண்டிருந்த செல்வந்தனின் செல்வத்தை - கொல்லைப்புற வழியாக வந்த அடுத்தவன் திருடிச் செல்ல அவனிடமே சென்று யாசித்த செல்வந்தனைப் போல - மேடை போட்டு - "சனாதன தர்மம் நமது மதம்" - "காலத்திற்கு அப்பாற்பட்டது நமது வேதங்கள்" - "முதலும் முடிவும் இல்லாதவை நமது சூத்திரங்கள்" - என்று நாம் இரட்டை வேடம்போட்டு உதட்டளவில் மட்டும் பேசிக் கொண்டிருக்கும்போது - நமது செல்வங்கள் எல்லாம் திருட்டுப்போகின்றன கொல்லைப்புற வழியாக. இன்று திருடியவனிடமே சென்று யாசிக்கிறோம் நாம்.

ஒரு சிறு உதாரணம். உடலைப் பாதுகாக்க - அன்று தாயகத்தில் - கோவணம் அணிந்து யோகாசனம் பயில வெட்கப்பட்ட நாம் - இன்று - இங்கு - கால் சட்டை அணிந்து 'Yoga' பயில்கிறோம் - அதை பெருமையாக வேறு சொல்லித் திரிகிறோம். மனதைப் பாதுகாக்க இரண்டாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் - புத்தன் சொன்ன தியானத்தை தரையில் அமர்ந்து அப்பியாசிக்க வெட்கப்பட்ட நாம் - இங்கு - நாற்காலியில் அமர்ந்து *Meditation* பயில்கிறோம் - அதை பெருமையாக வேறு சொல்லித் திரிகிறோம்.

"ஒரு நிமிடம் - இப்படியே குழம்பிக் கொண்டிருந்தால் - இப்படியே குழப்பிக் கொண்டிருந்தால் - இதன் முடிவு தான் என்ன"? வாசகர்கள் பலரின் குரலாக இது ஒலிக்கலாம்.

ஆனால் - குழம்பாத மனங்கள் - குழப்பாத மனங்கள் தெளிவதில்லை. குழம்பியதால் தான் அன்று அந்தச் சித்தார்த்தன் புத்தனானான். ஆகவே - தயக்கமின்றிக் குழம்புவோம் - தயக்கமின்றிக் குழப்புவோம். தெளிவடைய வேண்டும் நாம் ஏதோ ஒரு பிறவியில் என்ற ஒரே காரணத்துக்காக மட்டும்.

போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.
அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.
அது ஒரு சத்தியம்.

எதற்காக வார்க்கப்பட்டோம்? எப்படி வார்க்கப்பட்டோம்? எது எது கொண்டு வார்க்கப்பட்டோம்? நமக்கு எதுவுமே தெரியாது.

அதே சமயம் - மனித உருவாக்கங்களுக்கு ஏற்படுவதைப் போல - நமது உடலிலும் கோளாறுகள் ஏற்படுவதுண்டு - நமது மனதிலும் கோளாறுகள் ஏற்படுவதுண்டு. அப்பொழுது - இங்கு - நமது உடலை - மனித உடலை - நமது மனதை - மனித மனத்தை - யார் யாரோவெல்லாம் குடைகிறார்கள் - தொண்டுகிறார்கள் - குலைக்கிறார்கள். ஆனால், நாமோ - தாயகத்தில் பழுது போன அந்தக் கடிகாரத்தை பழுது பார்ப்பதற்கு எடுத்த கவனத்தைக்கூட இதற்காக எடுப்பதில்லை. "மனித உடலைப் பற்றி நமக்கு முற்றாகத்தெரியும்" என்று கூறுபவர்களுக்கு - "அது எப்படி அவர்களுக்கு முற்றாகத் தெரிய முடியும்" என்றுநாம் சிந்திப்பதில்லை.

மனித மனதைப்பற்றி நமக்கு முற்றாகப்புரியும் என்று கூறுபவர்களுக்கு அது எப்படி அவர்களுக்கு முற்றாகப்புரிய முடியும் என்று நாம் சிந்திப்பதில்லை.இதன் நடைமுறை விளைவு? சாதாரண தலைவலிக்கு மருந்து அருந்த ஆரம்பித்து தலையையேபறி கொடுத்தவர்களளயும் - தூக்கமற்ற இரவுகளுக்கு பரிகாரம் தேடிசி சென்று நிரந்தரமாகவே தூங்கிப் போனவர்களையும் - நரம்புத் தளர்ச்சிக்கு வைத்தியம் பார்த்தனால் நரம்பு மண்டலமே பாதிக்கப்பட்டவர்களையும்- நாம் சந்தித்திருக்கிறோம் - நாம் பார்த்திருக்கிறோம்.

எதற்காக இங்கு இப்படி நடக்கிறது? இதற்கு ஒரே ஒரு பதில் தான் உண்டு. நம்மை வார்த்தவன் யாரோ. இந்த வார்ப்பின் சூட்சுமத்தை முற்றுமுழுதாகப் புரிந்து கொள்ளாமல் இங்கு இதைப் பழுது பார்க்கும் அரைகுறைகள் யார் யாரோ!

மனித வார்ப்பைப் பற்றிய புதிரை எப்படித் தான் விடுவிப்பது?

திறந்த கண்களுடன் இந்தப் புதிரை விடுவிக்க முடியாத படியால் தான் கண்களை மூடி இதை விடுவித்தார்கள் யோகிகள்

லண்டனில் அகஸ்தியர் 20வது ஆண்டு விழா
மகள் நவஜோதி 'மகரந்த சிதறல்' நூல் வெளியீடு

'இலங்கையிலும்; அகஸ்தியர் பிரான்சுக்கு புலம்பெயர்ந்து வந்ததின் பின்னரும் அவருடன் மிகவும் நெருக்கமான உறவுகொண்டிருந்ததையும்; தனது 'வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' என்ற தனது நூலுக்கு அகஸ்தியர் அணிந்துரை வழங்கி அதனை நூலாக்கம் பெறுவதற்கு உதவினார் என்றும் லண்டன் ஹரோ நகராட்சி மன்ற உறுப்பினர் மண்டபத்தில் இடம்பெற்ற ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் அகஸ்தியரின் 20ஆம் ஆண்டு நிறைவும், நவஜோதி ஜோகரட்னத்தின் 'மகரந்தச் சிதறல்' நூல் வெளியீட்டில் உரையாற்றும்போது புதினம் ராஜகோபால் தெரிவித்தார். 'அகஸ்தியரின் துணைவியான நவமணியின் பிரசன்னம் தன்னை மிகவும் மகிழ்ச்சிப்படுத்துவதாயும், அகஸ்தியரின முற்போக்கு எழுத்துக்களுக்கு நவமணி பக்கபலமாகத் திகழ்ந்ததாகவும், அவரின் நூல்களை வெளியிடுவதில் ஆர்வத்துடன் செயல்படுவதாகவும்' மேலும் அவர் தெரிவித்தார்.

'20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அகஸ்தியர் போன்ற சமூக சிந்தனையாளர்களின் கருத்துக்களுக்கு இலங்கையின் தேசிய பத்திரிகைகள் தயக்கம் காட்டின என்றும் ஆனால், அகஸ்தியர் அவர்கள் தனது பொதுவுடமைக் கொள்கையிலிருந்து தளராமல், பேனாவை வலிமை மிகுந்த ஒரு ஆயுதமாகக்கருதி, மக்களோடு பின்னிப்பிணைந்த தத்துவங்களை படைப்புகளாக்கி, தொடர்ந்த அவரது எழுத்தாற்றலால் மிகுந்த செல்வாக்கை பெற்றார்' என்றும் மூத்த பத்திரிகையாளர் பொன் பாலசுந்தரம் அகஸ்தியர் பற்றி தெரிவித்தார்.

மூற்போக்கு எழுத்தாளரும் மிருதங்கக் கலைஞருமான அகஸ்தியரின் நினைவு விழாவின்போது அவரது பேரனான செல்வன் அகஸ்ரிஜோகரட்னத்தின் மிருதங்க இசையுடன் செல்வன் பிரவீன் பிரதாபனின் புல்லாங்குழல் இசையும் இணைந்து டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா அவர்களின் பல பாடல்களை இசைத்து சபையோரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்று, மறைந்த கலைஞர்களை நினைவு கூர்ந்தமை இவ்விழாவுக்கு முத்தாய்ப்பாய் அமைந்திருந்தது.

'பத்திரிகைக் கடிதம் மூலம் ஏற்பட்ட நவஜோதியின் அறிமுகம் தமது 50 ஆவது திருமண ஆண்டுவிழா தமது குடும்பத்துடன் இடம்பெற்றவேளை, தனது சொந்த மகள்போல் வந்து சிறப்புரை ஆற்றிருந்தார். லண்டன் ஜிரிவி தொலைக்காட்சியிலும், வானொலியிலும் தனது சேவைகள் குறித்து நேர்காணல்களை மேற்கொண்ட நவஜோதி துடிதுடிக்கும் ஒரு பெண்ணியல் வாதியாவார். 'மகரந்தச் சிதறல்' என்ற இந்த நூல் மூலம் லண்டன் வாழ் 30 பெண் சாதனையாளர்களை ஒரே மேடையில் ஏற்றியுள்ள சாதனையும் அவரின் திறமையையும்,ஆளுமையையும் வெள்ளிடை மலையாய் எடுத்துக்காட்டுகின்றன' என்று பேராசிரியர் கோபன் மகாதேவா தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

'பத்து ஆண்டுகளுக்கு மேலாக மகரந்தச் சிதறல்' நிகழ்ச்சியின் மூலம் 400 வரையான நேர்காணல்களை மேற்கொண்டிருந்தார். அதில் 33 பெண்களின் ஆளுமைகளைத் தொகுத்து லண்டன் வாழ் பெண்களின் வரலாற்றுத் தொகுப்பாக 300 பக்கங்களில் வெளியிட்டமை தனிச்சிறப்பாகும் என்று ஊடகவியலாளர் திரு. நடா மோகன் தனது சிறப்புரையில் தெரிவித்தார். 'லண்டனின் முதல் தமிழ் வானொலியான 'சன்றைஸ்' மூலமாக செய்திகளை வாசிக்க ஆரம்பித்த நவஜோதி தற்போதைய இணையத் தொலைக்காட்சிவரை பாரிய சவால்களை எதிர்கொண்டு அயராது உழைப்பவர்' என மேலும் தெரிவித்தார்.

'லண்டன் கிழைத்தேச நுண்கலை அமைப்பின் பட்டமளிப்பு விழாக்களில் மேடை அறிவிப்பாளராக தன்னை வெளிக்காட்டிய நவஜோதி, அந்த அமைப்பின் பரீட்சைகளின்போது மேற்பார்வைப் பணிகளுடன் ஈடுபடுவதுடன், இவ்வருடம் இத்தாலியின் 'பலர்மோ' நகரில் இடம்பெற்ற கலைவிழாவில் எமது அமைப்பின் சார்பில் நவஜோதி பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்' என்று முருமடு அமைப்பின் தலைவி ஸ்ரீமதி அம்பிகா தாமோதரம் தனதுரையில் தெரிவித்தார்.

'சிறுவயது முதல் திரு. அகஸ்தியரின் எழுத்துக்களையும், அவரது புரட்சிகர கருத்துக்களையும் அவதானித்து வந்ததையும், சமூக சீர்திருத்தத்தில் அவர் கொண்ட ஈடுபாடுகளையும், போராட்டங்களையும் நினைவுபடுத்தி இன்று அவரது மகள் நவஜோதி 'மகரந்தச் சிதறல்' நூலை வெளியிடுவது பெருமைக்குரியது' என்று அகஸ்தியர் பிறந்த இடமான ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் சுரேஷ் துரைரட்னம் தனது சிறப்புரையில் தெரிவித்தார்.

'ஹரோ நகரில் கடந்த 20 ஆண்டு காலமாக வாழ்ந்து பல விதத்தில் தனது திறமைகளை வெளிப்படுத்திய நவஜோதியை 2015 ஆம் ஆண்டு ஹரோ நகராட்சி மன்றம் அவரை கௌரவித்து விருது வழங்கியபோது, அவ்வாண்டு ஹரோ நகர மேயராக இருந்த எனக்கு பெருமையாக இருந்தது' என்று திரு. சுரேஷ் கிருஷ்ணா தெரிவித்தார்.

'தன்னலம் கருதாமல் பொதுநலம் விரும்பி 33 லண்டன் வாழ் பெண்களின் நேர்காணல்களை நூலாக்கியிருப்பது மெச்சத்தக்க விடயம் என்று முன்னாள் ஆங்கில பாடசாலையின் ஆசிரியரும், ஹரோவில் தமிழ் பாடசாலைகளை ஆரம்பித்தவர்களில் ஒருவரான புனிதா பேரின்பராஜா தெரிவித்தார்.

'புதிய வடிவில் புதிய உத்திகளுடன் இந்த நூலை நவஜோதி வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது. முன்னுரையில் நவஜோதி குறிப்பிட்டது போன்று பிரபல அமெரிக்க எழுத்தாளர் 'மார்க் ருவைன்' இன் கருத்துப்படி பேசப்படும் வார்த்தை என்பது ஒன்று, எழுதப்படும் வார்த்தை என்பது பிறிதொன்று. பேசப்படும் ஒன்றிற்கு அச்சு ஊடகம் பொருந்தி வராது என்ற கருத்தை முன்வைத்து நவஜோதி பல சிரமங்களுக்கிடையில் இந்நேர்காணல்களை எழுத்து வடிவில் ஆக்கியது லண்டனில் முதல் தமிழ் பெண் ஆற்றிய புதிய முயற்சி' என்று நாழிகை ஆசிரியர் மகாலிங்கசிவம் அவர்கள் தனது வெளியீட்டுரையில் தெரிவித்தார்.

'33 வண்ண மலர்களான பெண்களின் ஆளுமைகளை கண்ணாடாக வெளிப்படுத்தும் செல்வன் அகஸ்ரி ஜோகரட்னத்தின் கைவண்ணத்தில் அமைந்த அட்டைப்படம் பாராட்டுக்குரியது. ஒரு தசாப்தத்துக்குரிய வரலாற்றுப்பதிவாக இந்நூலைப்பார்க்கமுடிகிறது' என்று நூலை பல கோணங்களிலிருந்து சிறப்பாக விமர்சித்த திருவேணி சதீஸ்குமார் தெரிவித்தார்.

'பெண்கள் யாவரும் ஆளுமை படைத்தவர்கள். ஆனால், வாழ்வின் துன்பியல்களால் வெவ்வேறு வழிகளில் தம்மை ஈடுபடுத்தி ஆளுமைமிக்கவர்களாகின்றனர். தையல்சுந்தரம் பரந்தாமன், சரஸ்வதி பாக்கியராஜா, நிர்மலா ராஜசிங்கம், மீனாள் நித்தியானந்தன், உதயகுமாரி பரமலிங்கம் (நிலா), மாதவி சிவலீலன், ராஜேஸ்வரி சிவம் போன்ற இந்நூலின் 33 பெண்கள் பற்றிய முயற்சிகள் போற்றுதற்குரியது' என்று தோழர் வேலு தனது விமர்சன உரையில் குறிப்பிட்டிருந்தார்.

'வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் நேர்காணல்கள் செய்யும்போது சுவையான அனுபவங்களும், சிக்கலான அனுபவங்களும் ஏற்படுவதுண்டு. 'மகரந்தச் சிதறல்' நூலில் நவஜோதி பற்றி அல்லாமல் லண்டன் வாழ் 33 பெண் ஆளுமைகளை வெளிக்கொண்டுவந்து சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருப்பது பாராட்டுக்குரிய முயற்சி' என்று இவ்விழாவிற்கு தலைமை வகுத்த பிரபல ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா தனது தலைமையுரையில் தெரிவித்தார். நிகழ்ச்சி அறிவிப்புக்களை தமிழிலும் ஆங்கிலத்திலும்முன்னாள் ஊடகவியலாளரும் வழக்குரைஞருமான திரு. பீற்றர் யேசுதாசன் நிகழ்த்தியிருந்தார். அகஸ்தியரின் பேத்தியான செல்வி சுஜீரா நவஜீவா வரவேற்புப் பாடலை வழங்கியிருந்தார்.

நூலாசிரியர் நவஜோதி ஜோகரட்னம் தனது தந்தை அகஸ்தியரை நினைவிலிருத்தி தனது தாயாரான நவமணி அகஸ்தியரை வாழ்த்தி ஏற்புரையை வழங்கியதோடு, திரு.ஜோகரட்னம் சிறப்புடன் நன்றியுரையை வழங்கியிருந்தார். லண்டனின் பல்வேறு நிகழ்வுகளின் மத்தியில், மண்டபம் நிறைந்த பல்கலை அறிஞர்களுடன் பெண் ஆளுமைகள் பலர் கூடுதலாக வருகை தந்திருந்தமை மிகச் சிறப்பாகக் காட்சியளித்தது. ■

ப.வை. ஜெயபாலன்

ஜல்லிக்கட்டு

தை பிறந்தது. தமிழர் திருநாள் மலர்ந்தது. பொங்கல் கொண்டாட்டம் பூரிப்போடு நிறைந்தது. உழவர் திருநாள் இது. பயிர் விளைந்து, பொலிந்து, விளைச்சலைத்தர உதவிய சூரியனுக்கும், மாடு மற்றும் தொழிலாளர்களுக்கும் நன்றி செலுத்தும் நாள் இது. மறுநாள் மாட்டுப் பொங்கல். பட்டியாக உள்ள பல மாடுகளும் பசளை பால் என தருவதற்கு நன்றி செலுத்தும் நாள். தமிழ்நாட்டில் கழிவுகளை அகற்றும் போகிநாள், பொங்கல் நாள், பட்டிப் பொங்கல், காணும் பொங்கல் என கொண்டாட்டங்கள் நான்கு நாட்கள் நடக்கின்றன. பொங்கல் நாள் வள்ளுவரின் பிறந்த நாள் என்று தமிழக அரசு பிரகடனப்படுத்தி உள்ளது. தமிழ் ஆண்டாக வள்ளுவராண்டு கணக்கில் புத்தாண்டு நாள் பொங்கல் நாள்தான்.

ஈழத்தில் பொங்கல்நாள், பட்டிப் பொங்கல் நாள் என்ற இரு நாட் கொண்டாட்டங்கள்தான். சித்திரை வருடப்பிறப்பு தமிழர் வருடப்பிறப்பாக கொண்டாடப்படுவது ஊர் வழக்கம். உறவினர் வீட்டுக்கு செல்லுதல், உறவினர்களை வரவேற்றல் என்ற உறவுக் கலப்பு கொண்டாட்டங்கள் ஈழத்தில் சித்திரை வருடப்பிறப்போடு அமைந்து விடுகின்றது. தமிழ்நாடு தைப்பொங்கலை புது வருட பிறப்பாக கொண்டாடுவதால் காணும் பொங்கல் என்ற உறவுக்கலப்பு கொண்டாட்டம் பட்டிப் பொங்கலை அடுத்து ஏற்பாடு செய்யப்பட்டு வழக்கமாகிவிட்டது.

ஜல்லிக்கட்டு அல்லது காளை தழுவல் அல்லது மஞ்சு விரட்டல் என்பது பொங்கலோடு ஒட்டி நடக்கும் விளையாட்டாக காலா காலமாக நடைமுறையில் உள்ளது. தமிழ்நாட்டில் வீர விளையாட்டாக ஊர்கள் தோறும் கொண்டாடப்பட்டு வந்தது. பெரும் பசும்புல்வெளிகளைக் கொண்ட முல்லை நிலத்தில் கால்நடை வளர்ப்பு ஒரு முக்கிய வருவாய் தரும் குடிசைக் கைத்தொழிலாக இருந்து வருகிறது. சிந்துவெளி நாகரீக காலத்திலேயே பட்டிகளாக மாடுகளைப் பராமரிப்பதும் பட்டிப்பொங்கல் கொண்டாடப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. பட்டிப் பொங்கலின் முக்கிய அம்சம் ஜல்லிக்கட்டு.

காளையை அடக்காத ஒருவனை மறுபிறப்பில் கூட காதலனாக, கணவனாக ஏற்கமாட்டாள் ஒரு கன்னி என்று பொருள்படும் பாடல் ஒன்று கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது. கட்டிளம் காளை ஒருவன் காளையை அடக்கும் வல்லமை மூலம் தன் வீரத்தை, தேக திடத்தை காட்டும் வாய்ப்பை ஜல்லிக்கட்டு வழங்குவதால் இளைஞர்கள் இந்த விளையாட்டில் ஆர்வம் காட்டுவது ஆண்டு ஆண்டாக தொடர்கிறது.

சல்லிகள் என்று காசை உள்ளடக்கிய கழுத்து மாலைகளை அணிந்து வரும் காளையை அடக்கி அந்த மாலையை தனதாக்கி கொள்ளுதல் என்று பொருள்பட ஜல்லிக்கட்டு என்று பெயர் தோன்றியதாக கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆங்காங்கே பல ஊர்களிலும் பொங்கலோடு ஜல்லிக்கட்டு கொண்டாடப்படுதல் வழமையாகிவிட்டது. குறிப்பாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு பெருமளவு வீரர்களையும் காளைகளையும் உள் அடக்கிய விழாவாக அயல் ஊர்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்ளும் விழாவாக நடைபெற்று வருகிறது.

நடைமுறையில் உள்ள ஜல்லிக்கட்டில் வல்லமை மிக்க காளைகளை உரிமையாளர் ஏற்கனவே வளர்த்து தயாராக்குவார். மலைமாடு, காங்கேயன், ஆலங்குடி என ஆறு காளை இனங்கள் ஜல்லிக்கட்டுக்கு உகந்தவையாக

மஞ்சு விரட்டு சுற்றுவர பார்வையாளர் திரண்டு நிற்க ஐம்பது அடி தூர எல்லை வரை காளையின் திமில் என்ற முதுகுப்பகுதியை பற்றியபடி திமிறும் காளையை தழுவிக் கொண்டு பயணிக்க வேண்டும். வெளி விரட்டு என்பது திமிறிக் கொண்டு பாய்ந்து ஒடும் காளையை துரத்தி சென்று அடக்குவது. வட்ட விரட்டு என்பது, சுற்றுவட்ட கயிற்று எல்லைக்குள் காளையை அடக்குவது.

அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது ஒரு இரு இனங்களே உள்ளன. காளை பிறக்கும் போதே ஜல்லிக்கட்டுக்கு உகந்ததாக தெரியப்படுகிறது. சத்தான உணவு வகை வழங்கப்பட்டு திடகாத்திரமாக வளர்க்கப்படுகிறது. பின்னங்கால்கள் பலம் பெற குளங்களில் நீச்சலுக்கு விடப்படுகிறது. வீரக்காளை ஒன்றின் உரிமையாளர் என்ற வீராப்பை கொள்ள வேண்டும் என்ற வேணவாவோடு காளையை தன் பிள்ளை போலவே வளர்த்து ஜல்லிக்கட்டுக்கு தயாராக்குகிறார் அதன் உரிமையாளர்.

காளை தழுவுதல், காளை அடக்கல் என்ற இந்த விளையாட்டு மூன்று வெவ்வேறு முறைகளில் நடத்தப்படுகின்றது. மஞ்சு விரட்டு சுற்றுவர பார்வையாளர் திரண்டு நிற்க, ஐம்பது அடி தூர எல்லை வரை காளையின் திமில் என்ற முதுகுப்பகுதியை பற்றியபடி திமிறும் காளையை தழுவிக் கொண்டு பயணிக்க வேண்டும். வெளி விரட்டு என்பது திமிறிக் கொண்டு பாய்ந்து ஒடும் காளையை துரத்தி சென்று அடக்குவது. வட்ட விரட்டு என்பது, சுற்றுவட்ட கயிற்று எல்லைக்குள் காளையை அடக்குவது. முதலாவதில் தனி ஒருவரே கலந்து கொள்வர். ஏனயவற்றில் மூவர் வரை கலந்து கொண்டு காளையை வீழ்த்தி அடக்குவர். வெளி விரட்டில் பரிசுப்பணம் கொம்பிலேயே கட்டி விடப்படுகிறது. எவரும் அடக்க முடியாத நிலையில் காளை வெற்றி பெறுகிறது. உரிமையாளர் பரிசு பெறுகிறார். தமிழர்களின் வீரத்தை பறைசாற்றும் இந்தக் கலாச்சார விழா சுற்றுலா பயணிகளையும் வெகுவாக கவர்கிறது.

பீற்றா திருவனம், 2004ம் ஆண்டு ஜல்லிக்கட்டு ஒரு மிருகவதை விளையாட்டு என்று காரணம் காட்டி அதற்கு தடை உத்தரவு கோரி உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தது. நீதிமன்ற தீர்ப்பு 2014 இல் வெளியானது. ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டது. தடை நீக்கக் கோரி தமிழ்நாடு எங்கும் போராட்டம் வெடித்துள்ளது. போராட்டம் அரசியல்வாதிகள் கையில் இருந்து இப்பொழுது மாணவர்களால் பொறுப்பேற்கப்பட்டுவிட்டது.

ஏறுதழுவுதல் ஒரு நட்பு விளையாட்டு. தமிழ்நாட்டில் மட்டும் கலப்பில்லாத சத்தான பாலை மக்கள் பெற காரணம் ஜல்லிக்கட்டுக்காக காளைகளின் தனித்துவம் பேணப்படுவதுதான் என்பது ஜல்லிக்கட்டு தரப்பினர் வாதம். ஒரு லட்சத்துக்கு மேலான பால் சேகரிப்பு, விஞ்ஞான நிலையங்களில் ஒருகோடிக்கு மேலான கறவைமாட்டு உரிமையாளர்கள் பால் விற்பனை வருமானத்தில் பயன்பெறுகிறார்கள். டில்லி குதிரை பந்தயத்துக்கு தடை கோராத பீற்றா நிறுவனம், மேற்கத்திய கறவை இனத்தை தமிழ்நாட்டிலும் இறக்குமதி செய்து தன் மாட்டுத்தீவன சந்தை வருமானத்தை கூட்டிக்கொள்ள இந்த நிறுவனம் மூலம் நீதிமன்ற தடை பெற்றதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

ஈழத்தில் வன்னி கிளிநொச்சி பிரதேசங்களில் பொங்கலை ஒட்டி மஞ்சு விரட்டல் நடைபெறுகிறது. கொம்பில் பணப்பரிசிலை கட்டி விடும் முறையே நடைமுறையில் உள்ளது. வண்டிச் சவாரிப்போட்டியின் மூலமே ஈழத்தில் குறிப்பாக வடமாகாணத்தில் காளைகள் விளையாட்டில் இணைகின்றன. பொங்கலை ஒட்டி விசேட மாட்டு வண்டிச் சவாரி போட்டிகள் இதற்கென உள்ள கறவை நிலங்களில் நடத்தப்படுவது இன்றும் நடைமுறையில் உள்ளது.

நல்ல இன காளைக்குட்டிகளை பிறப்பிலேயே தெரிந்து, சத்தான உணவூட்டி வளர்த்து நலமடித்து அதன் தேக கட்டமைப்பை திடப்படுத்தி வண்டிலில் ஓட்டப் பயிற்சி அளித்து தயார்படுத்துவதில் வெறி கொண்ட மாட்டு உரிமையாளர்கள் பலர் இருந்தனர். நெல்லைப் பயிரிட்டு கதிர்மணிகள் பால் பிடிக்கும் பருவத்தில் அறிந்து இக்காளைகளுக்கு சத்துணவாக ஊட்டுபவர்களும் இருந்தார்கள். முன்னூறு ஆண்டுகளின் முன் ஜல்லிக்கட்டில் காளை அடக்குவதில் நிலையான பெயர்பெற்ற அழகதேவருக்கு மதுரை அரிய நல்லூரில் கோயில் கட்டி உள்ளனர். ஈழத்தில் சுரவெட்டி கட்டை இளைய தம்பி என்பவர் உட்பட பல வண்டிச் சவாரியாளர்கள் ஆர்வலர் நெஞ்சில் நிலைத்துள்ளனர்.

பாவப்பட்ட இளம் தலைமுறை நாசமாகிக் கொண்டிருக்கும் வாழ்க்கை!!

ஒரு பிறந்தநாள் வைபவம். ஒரு அம்மாவும் இரண்டு குழந்தைகளும். மூத்தவன் பையன் - 13 வயது. அடுத்தது பெண் 5 வயது. விழாவுக்கு வந்ததில் இருந்து இந்தப் பையன் தனது மொபைல் போனை வைத்துக் குடைந்து கொண்டே இருந்தான். யாரிடமும் பேசவில்லை. பெண் குழந்தையோ அம்மாவின் மடியில் இருந்தபடியே வேறொரு மொபைல் போனை வைத்து விளையாடிக் கொண்டுஇருந்தாள். சாப்பிடும் போதாவது இவர்கள் போனை வைத்து விட்டுச் சாப்பிடுவார்கள் என்று பார்த்தால் இந்த நாட்டில் தான் முள்ளுக்கரண்டி தருவார்களே அதனால் சாப்பாட்டில் கை பட வேண்டிய தேவை இல்லை. முள்ளுக்கரண்டியால் லாவகமாய் போனை ஒரு கையில் வைத்தபடி மற்றக் கையால் உணவை உண்டான் இந்தப் பையன். அந்த சிறுமியோ அம்மாவின் மடியில் அமர்ந்தபடியே போனில் விளையாட அம்மா உணவை ஊட்டினாள்.

சுற்றுமுற்றும் பார்த்தபோது எல்லோருமே போனும் கையுமாக அலைந்தார்கள். வாலிபப் பிள்ளைகளை விட இப்போது பெரியோர்கள் தான் செல்பி (Selfi) மோகத்தில் அலைகிறார்கள்! வாலிபப் பிள்ளைகள் சாட்டிங், வாட்ஸ்அப் என்று அதில் மும்முரமாய் இருக்க பெரியோர்கள் கொஞ்சம் பேசுவதும் படங்கள் எடுப்பதிலும் மும்முரமாய் இருந்தார்கள்.

தொழில்நுட்ப அறிவு வளர்ந்து, விதம்விதமாக கருவிகளை கண்டுபிடித்து அதை மக்களுக்கு வழங்க அவை எல்லாம் செய்த ஒரு பெரிய தீமை என்ன தெரியுமா? உறவுகளை நாசப்படுத்தியதுதான். பக்கத்தில் உள்ள ஒரு உறவோடு பேசுவதை விட தூரத்தில் எங்கையோ என்னமோ செய்து கொண்டு இருக்கும் யாரோ ஒரு உறவோடு "சாட்" அடிப்பதே முக்கியமாய் போய் விட்டது - அதுவும் எங்களின் வாலிபப் பிள்ளைகளுக்கு.

என்ன ஒரு சமுதாயத்தை நாங்கள் உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்? ஒரு விதத்தில் பார்த்தால் இந்தத் தலைமுறையில் வளரும் பிள்ளைகளை நினைத்துப் பார்க்கும் போது பாவமாய் உள்ளது. ஊரில் நாம் சிறு வயதில் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறேன். பாடசாலை முடிந்து வந்து மதிய உணவுக்குப் பின்னர் ஒரு குட்டித் தூக்கம். பின்பு சாயங்காலம் 4மணியில் இருந்து 6 மணிவரை விளையாட்டுதானே. விதம்விதமான விளையாட்டுப் பொருட்கள் நம்மிடம் இருக்கவில்லை. ஆனாலும் நாம் விளையாடிய விளையாட்டுக்கள்தான் எத்தனை எத்தனை! எட்டுக்கோட்டில் இருந்து, கிளித்தட்டு, ஓடிப்பிடித்து விளையாட்டு, கிட்டிப் புல் என்று விளையாடிய அந்த நாட்கள். புழுதியிலும் மண்ணிலும் வெயிலிலும் வேர்க்க விறுவிறுக்க வியர்வை வழிந்தோட ஓடி ஆடி விளையாடிய அந்த இனிமையான நாட்கள்.



நாங்கள் இப்போது அந்த நாட்களையா எங்களின் பிள்ளைகளுக்கு வழங்குகிறோம்? விதம்விதமான கருவிகளையும் (Xbox, iPad, Laptop) மொபைல் போனையும் வீட்டில் கொண்டு வந்து வைத்து விட்டு நீ போய் வெளியே விளையாடு என்றால் எந்தப் பிள்ளை போகும்? வீட்டில் அமர்ந்து தன்பாட்டில் கணனியில் விளையாடுவதையே இன்றைய தலைமுறையினர் அதிகம் விரும்புகிறார்கள். முன்னர் சீட்டு விளையாடுவதற்கு ஆட்கள் சேர்க்க வேண்டும். இப்போது அதைக் கூட தனிமையில் விளையாடலாம் - கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து கொண்டு!

தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்சி, புல்லுப் பிடுங்கி, செடியை நாட்டி பூக்களை பறித்து - இப்படி நாங்கள்

வளரும் போது செய்த சின்ன சின்ன காரியங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இயற்கையோடு நாங்களும் ஒன்றி வாழ்ந்தோம். இயற்கையை புரிந்து கொண்டு அவற்றை ரசிக்கக் கற்றுக் கொண்டோம். எங்களின் பெற்றோரும் எங்களுக்கு அதைக் கற்றுத் தந்தார்கள். இன்றைய தலைமுறையினர் செயற்கையாகவே கம்ப்யூட்டர் முன்னால் இருந்து கொண்டு தோட்டம் செய்கிறார்கள்!

இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன தெரியுமா? சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு பெரியோர்களுக்கு வரவேண்டிய வியாதிகள் எல்லாம் வருகிறது. உடல் பருமன், நீரிழிவு நோய் அத்தோடு மனஅழுத்தம் வேறு. பிள்ளைகளுக்கு எப்படி உறவுகளை ஏற்ப்படுத்திக் கொள்வது, நட்புக்களை வளர்த்துக் கொள்வது, உலகத்தை கையாளுவது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். அந்தக் காலத்தில் சிறு பிள்ளைகள் கண்ணாடி போடுவது மிகவும் அரிது. ஆனால், இப்போது அநேகப் பிள்ளைகள் கண்ணாடி போட வேண்டிய அவசியத்துக்கு உள்ளாகுகிறார்கள்.

இதற்கு காரணம்? ஒரே கம்ப்யூட்டர் முன்னாலும் போனை வைத்துக் கொண்டும் இருப்பதுதான். இந்தக் காலத்தில் பிள்ளைகளை வளர்ப்பது என்பது லேசான காரியம் இல்லை. ஆனாலும் பிள்ளைகளை சரியான வழியில் நடத்திச் செல்ல வேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு. எது சரியானவழி? இந்தக் காலத்தில் கம்ப்யூட்டர் மற்றும் செல்போன் ஒரு அத்தியாவசிய தேவையாகி விட்டது. அவை எங்களின் அன்றாடத் தேவைக்கு அவசியமாகி விட்டது. ஆனால், இவற்றுக்கு நாங்கள் அடிமைகள் ஆகி விடுவதுதான் அபாயம்! எங்களின் பிள்ளைகள் இவற்றுக்குள் மிகவும் ஈர்க்கப்படுகிறார்கள். இந்த நாட்டில் ஒவ்வொரு பெற்றோருக்கும் உள்ள பெரிய சவால் இதுதான். மொபைல் போன் இந்தக் காலத்தில் ஒரு அத்தியாவசியத் தேவையாகி விட்டது. ஆனால், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான். பெற்றோர் சரியான விதத்தில் இவற்றைக் கையாள வேண்டும்.

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்."



நுவரெலியா நகரசபை சினிசிற்றா அரங்கில் 5000க்கும் அதிகமானோர் கலந்து கொண்ட தைப்பொங்கல் விழாவில் இயற்கையை நேசித்து சமாதானத்தை மதித்து மனிதப்பண்புகளை உருவாக்க வளர் இளம் பருவத்தினருக்கு அறிவூட்டும் ஆக்கங்களை உள்ளடக்கிய உடுவை. எஸ்.தில்லைநடராசா எழுதிய "நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம்" நூல் பிரதம அதிதியாகப் பங்கேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. விழாவில் உடுவை. எஸ்.தில்லைநடராசா எழுதிய "நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம்" என்னும் நூல் அமைச்சர்கள் சுவாமிநாதன், திகாம்பரம், மனோகணேசன், ராதாகிருஷ்ணன், நவீன் திஸா நாயக்க ஆகியோர் உட்பட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்

இலக்கியம் பேசி மகிழுவோ?

திருக்குறள் செம்மல் ந. மணிமொழியனுடன் நெருங்கிப் பழகுவதற்குக் கிடைத்தது என் வாழ்வில் நான் பெற்ற பாக்கியம், சமீபத்தில் அவர் மறைவு துயரமளிக்கிற சம்பவம். பதினான்கு வருடங்களுக்கு மேலான அவர் குடும்பத்துடன் உள்ள உறவை நினைத்துப் பார்க்கிறேன். தமிழகத்தில் பல்கலைக்கழகங்களின் விநாயக மிஷன்ஸ் சாம்ராஜ்யத்தை உருவாக்கிய அமரர் சண்முகசுந்தரத்தின் புதல்வர் விநாயகமிஷன்ஸ் பல்கலைக்கழக வேந்தர் இளையவர் டாக்டர் ஏ.எஸ். கணேசன் மூலம் திருக்குறள் மேதை மணிமொழியன் நட்பு ஏற்பட்டது. நொடிக்கு நூறோ என குறள்களை அவையினர் வியக்குமாறு சொல்வார்.

"வணிக வாழ்வுக்கு ஆட்பட்டுப் பல்வேறு பொறுப்புகளுக்கு உட்பட்ட போதிலும், என்னுள்ளே இலக்கிய உணர்வுகள் மட்டும் மங்காமலே கனன்று கொண்டிருந்தன" என்று மனம் விட்டு என்னிடம் தன் உணர்வுகளைப் பகிர்ந்திருக்கிறார். அவர் எழுத்துக்கள் தொடர்ந்து 'புதினம்' வாசகர்களுக்கு வழங்குவதில் பெருமையடைகிறேன்.

- ஆசிரியர்.

இலக்கியம் இனியதொரு வாழ்க்கைக்கலை; கலைகளுள் எல்லாம் சிறந்த கலை. ஓவியம், சிற்பம் முதலிய கலைகள் காலத்தின் கைப்பட்டுச் சிதைய நேரிட்டாலும் கூட, காலத்தை வென்று நிற்கும் அரிய கலையாக இலக்கியமே விளங்குகிறது. மனிதனது சிந்தையில் உருவான இந்த ஒப்பந்த கலை. இயற்கை வனப்பையும் செயற்கைப் புனைவையும் விட நெடிது காலம் நிலை கொண்டு விடுகிறது. இலக்கியத்தை எழுதி வைத்த சுவடிகளும் காகிதங்களும் சிதைய நேரிட்டாலும் கூட மனிதனது சிந்தையின் நினைவு நீடிக்கும் வரை, இலக்கியமும் சாகாக்கலையாக, கர்ண பரம்பரைச் செல்வமாகப் பயன் தந்தே வரும், வாழும்.

இலக்கியம் - புலவர்கள் உணர்வில் வாழ்ந்தால் மட்டும் போதாது; பொதுமக்கள் நாவிலும் அது அன்றாடம் புழங்கி வருதல் வேண்டும். புலவர் ஆக்குதலும், பொதுமக்கள் போற்றுதலும் இருகரைகளாக அமைந்து இலக்கிய வாய்க்காலை வாழ்க்கைப் பாத்திகளுக்குக் கொண்டு வந்த சேர்க்கும்.

நம் தமிழ்மொழி- நினைப்பிற் கெட்டாத நெடுங்காலத்திலிருந்தே - இலக்கியம் பேசி, போற்றி, வளர்த்து வாழும் கலையில் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது; புலவர் கூட்டுண்ணும் சங்கத்து மேடைகள் ஒருபுறமும் பொதுமக்கள் ஆடி மகிழும் நாட்டுப்புறக்கலை வடிவங்கள் மறுபுறமும் கைகோத்து வந்துள்ளன. கவிச்சக்கரவர்த்தி கம்பனையே மெய் மறக்கச் செய்த "மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே" எனும் ஏற்றப்பாட்டும், "சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக்காட்டினிலே" எனக் கவியரசு கண்ணதாசனுக்கு அடி எடுத்துக் கொடுத்த ஒப்பாரியும், 'ஆசை தரும்கோடி அற்புதங்கள் கண்டதிலே, ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ?" எனப் பாரதியைப்பாட வைத்த தமிழோசை அருவிகளும், "தொந்தி மறைந்திட வேட்டிகட்டி- அவன் தூக்கி வந்தானொரு வெல்லக்கட்டி" எனப் பாரதிதாசனுக்கு மெட்டமைத்துத் தந்த அழகின் சிரிப்புக்களும், இன்னபிறவும், தமிழ்மொழிச் சோலையில் நாள்தோறும் பூத்து வரும் இலக்கியமலர்கள்.

நம்மவர்கள் இன்பத்தைச் சுவைக்க முற்பட்ட போதும் சரி, துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள நேரிட்டபோதும் சரி, இலக்கியத்தையே துணையாக நாடினர். அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருள் விளக்கங்களை எல்லாம், இலக்கியத்தைப் பேசிப்பேசிப் பிறரோடு பகிர்ந்து கொண்டனர்.

பிறமொழியினரை விட, தமிழ்மொழியினர்க்கு- இலக்கியத்தைப் பேசி மகிழ்வதில் ஒரு தனி நாட்டமும் ஆர்வமும் எப்போதும் இருந்து வருதல் கண்கூடு. சங்க இலக்கிய மாநாடு, திருக்குறள் பேரவை, சிலம்புமேடை, உலகத் தமிழ் மாநாடு, பட்டிமன்றம், இலக்கிய வட்டம், வழக்காடு மன்றம் - எனப்பல்வேறு முறைகளில் வெவ்வேறு நிலைகளில் இங்கே இலக்கியம் எப்போதும் வாழ்வு பெற்றே வருகிறது.

வானொலி, தொலைக்காட்சி போன்ற புதிய பொழுது போக்குச் சாதனங்கள் வந்த பிறகு, வாழ்க்கையில் போராட்டமும் அவசரமும் ஏற்பட்டு விட்ட பிறகு- சாவதானமாக, அமைதியாக அமர்ந்து இலக்கியத்தைப் பேசி மகிழ நேரம் கிடைப்பதில்லையே எனும் விரக்தி பரவலாக ஏற்பட்டு வருகிறது. என்றாலும் - வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் இலக்கியம் இடம்பெற்றபோது - இலக்கியத்தைப் பேசி மகிழும் வாய்ப்பு - புத்தாக்கம் பெற்றுக் கொள்ளுகிறது.

இலக்கியம் பேசி மகிழுவோ?

இலக்கியம் ஒரு காலத்தில் ஆற்றல் மிக்கவரால், கருவிலே திருவாய்க்கப்பெற்ற நுண்மாண் நுழை புலம் மிக்கவரால் படைக்கப்பெற்று நவில்தோறும் இன்பம் பயக்கும் கலையாகப் போற்றப்பட்டது. புலமை மிக்க ஒரு சிலர் மட்டும் இலக்கியத்தைப் பொழுது போக்காகப் புகழ்ந்து பாராட்டித் தமக்குள் பேசி மகிழ்ந்தார்கள்.

இன்றைய அறிவியல் தாக்கத்தில், கம்ப்யூட்டர் காலத்தில் பலர் காலத்திற்கேற்ற ஓரளவு தரமுள்ள இலக்கியத்தைப் படைத்து வருகிறார்கள். இன்று இலக்கியம் பேசி மகிழ மட்டுமா? இலக்கியம் திரைப்படம் போல் பொழுது போக்கவா? அல்லது வாழ்க்கைப் போராட்டத்திற்கு உறுதுணை செய்யவா? சிந்தியுங்கள். இலக்கியம் படைப்பிலக்கியமாய், ஆக்க இலக்கியமாய், நம் சிக்கல்களைத் தீர்க்கும் மருந்தாக அமைய வேண்டாமா? வளம் மிக்க, உணர்ச்சி மிக்க சொல்லோவியங்களும் நலம் மிக்க கவிதைகளும் அல்லவை தேய அறம் பெருக்கும் ஆற்றல் மிக்க, சக்தி மிக்க கருவிகள் அல்லவா? உழவன் பண்படுத்திய நிலம் வளம் மிக்க விளைவு தருவது போல், மனத்தைப் பண்படுத்தும் இலக்கியங்கள் வாழ்வுப்பயன் நல்குமல்லவா? சிந்தனையற்றவனை, பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் அறிவுக் குருடர்களை, விழிபெற்று, ஒளிபெற்று வாழ்விக்கும் ஒளிவிளக்கு அல்லவா அது? சோம்பல் உடையவனைத் தூக்கத்தில் இருந்து எழுப்பி வலிமை பெறச் செய்யுமல்லவா? மக்களுக்கு மனத்தில், சிந்தனையில் தெளிவு தந்து, கவவு தந்து துணிவூட்டுமல்லவா? கவிஞன் பார்வை, கலைஞன் பார்வை பல துறைகளை ஆழ்ந்துசென்று அற்புத உவமைகளால் அரிய உண்மைகளை வழங்குமல்லவா?



சுவை புதிதாய், பொருள் புதிதாய், சொற் புதிதாய், சோதிமிக்க நவகவிதையாய், எந்நாளும் அழியாத மகா கவிதையாய், இலட்சியமாய் இலங்கும் அவ்விலக்கியத்தால் உலகை வாழ்விக்க வேண்டாமா?

"வலிமை வலிமை என்று பாடுவோம் - என்றும்
வாழும் சுடர்க் குலத்தை நாடுவோம்
கவியைப் பிளந்திடக் கை ஓங்கினோம் - நெஞ்சில்
கவலை யிருளனைத்தும் நீக்கினோம்."

என்று மகாகவி பாரதி போல் பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாவித்திட வேண்டாமா? ஆகவே, இலக்கியம் பேசி மகிழுவோ என்றால் பேசி மகிழவும் வேண்டும்; அங்கு பிறவகைப் பயனும் வேண்டும்.

'எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்று பெருமை தரும்.'

தனிமனிதன் முழு வாழ்வு வாழ, நிறை வாழ்வு வாழ, வையத்துள் வாழ்வாங்கு வாழ, உலகெலாம் வாழ உலகப் பொதுமறை செய்த வள்ளுவன் குறள் போன்ற சிறந்த இலக்கியங்கள் இன்பம் நல்கியும், வாழ்வுப் பயன் வழங்கியும் நம்மிடையே அழியாது வாழ்ந்து வருபவை.

இவ்விலக்கியங்கள், கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், நிரந்து, இனிது, சொல்லும் வல்லமையால் ஞாலத்தை விரைந்து தொழில் கேட்கச் செய்ய வல்லவை.

நாம் வாழும் வாழ்க்கை பரபரப்பும், அவசரமும் மிக்கது, தொலைக்காட்சிப் பெட்டியும், வீடியோ பெட்டியும், மலிவு நூல்களும், மற்ற பொழுது போக்குக் காட்சிகளும் நம் ஓய்வு நேரத்தைக் கவர்ந்து கொள்கின்றன. பெரும்பான்மையான தற்கால இதழ்கள் படிக்கும் வகையில் இல்லை. நல்ல இலக்கியங்களோவெனில் படிக்கப்படுவதில்லை. இந்தச் சூழலில் இலக்கியத்தை நன்கு படித்தவர்கள் தமக்குள்ளே பேசி இவ்வையகம், தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார் என்பது போல சாதாரண மக்களிடமும் இவ்விலக்கியம் பரவ வேண்டும். இன்பம் நல்க வேண்டும். அவர்கள் மனத்தை உயர்த்தி சமுதாயத்தை மேன்மை பெறச் செய்ய வேண்டும். தொலைக்காட்சி போன்ற வலிமை மிக்க சாதனங்கள் எல்லாம் நல்ல இலக்கியங்களை இனிமையுடன் எடுத்துச் சொல்லி, மனித வாழ்வு மேம்பட, உயர்வடையத் துணை நிற்க வேண்டும். இலக்கியம் பேசி மகிழ்வோம்; பேசுவதோடு அமையாமல் பேசிய நல்வழியிலே மனத்தையும் உயர்த்தி அருஞ்செயல்கள் ஆற்றுவோம்.

லண்டன் கலைஞர்களின் தாயகக் கலைப் பயன்

→ பாலேந்திரா - ஆனந்தராணி

→ குழந்தை மாஸ்டருடன்

→ யாழ். இசை மேதை கண்ணனுடன்

புலம்பெயர் கலைஞர்கள் தாயகம் செல்லும் போது அங்குள்ள இளையோரை பயிற்றுவிப்பதற்கு தமது நேரத்தை பயன்படுத்துவது பாராட்டுக்குரியது. வெறும் சுற்றுலா பயணமாக கொள்ளாமல் பாடசாலைகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் சென்று அங்குள்ள மாணவர்களை பயிற்றுவிக்கும் பணியினை அவ்வப்போது லண்டன் நாடக நெறியாளர் பாலேந்திரா கடந்த நான்கு வருடங்களாக செய்து வருகிறார். கடந்த வருட இறுதியில் தனது மனைவி ஆனந்தராணியுடன் இலங்கை சென்ற அவர் யாழ்ப்பாணத்தில், தனது பழைய பாடசாலையான யாழ் இந்தக் கல்லூரியிலும், யாழ் கனகரத்தினம் வித்யாலத்திலும், தெல்லிப்பளை மஹாஜனக்கல்லூரியிலும், ஆரோகண கலைக் கூடத்திலும் உள்ள நாடகம் பயிலும் மாணவர்களுக்கு நாடகப் பயிற்சி பட்டறைகளை ஆனந்தராணியுடன் இணைந்து நடத்தியுள்ளார். யாழ் பல்கலைக் கழகத்திலும் இவர்கள் ஆங்கிலத் துறை, மொழிபெயர்ப்பு துறை மாணவர்களுடன் ஒரு அனுபவப் பகிர்வு கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியுள்ளனர். இந்த நிகழ்வினை அங்கு விரிவுரையாளராக பணி புரியும் கலாநிதி ஸ்ரீ கணேசன் ஒழுங்கு செய்திருந்தார். மேற்படி நிகழ்வுகள் மூலம் தாம் மிகவும் பயன் பெற்றதாக அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். நாடகம் (*Drama and theatre*) பாடத் திடடத்தில் பாடசாலைகளிலும், பல்கலை கழகங்களிலும் கற்பிக்கப் படுகிறது. இருந்தாலும் சுமார் நாற்பது வருட அனுபவம் உள்ள இவர்களின் பயிற்சி முறைகள் அங்கு புதுமையானதாக இருந்ததாக பலரும் கருதினர். பாடத் திட்டத்தில் பாலேந்திராவின் நாடக இயக்கம் பற்றி அவர்களுக்கு போதிக்கப்படுவது குறிப்பிடத் தகுந்தது. யாழ் நகரில் வசிக்கும் மூத்த கலைஞர்களையும் சந்தித்து உரையாடல்களை இவர்கள் நிகழ்த்தியுள்ளனர். குறிப்பாக இசை அமைப்பாளர் கண்ணன். நாடகாசிரியர் குழந்தை சண்முகலிங்கம், அலை ஆசிரியர் அயேசுராசா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

இவர்கள் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக் கழகம் சென்று, அங்குள்ள விபுலானந்தர் அழகியற் கல்லூரியில் நாடகத்துறையில் பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுடன், நான்கு முழு நாட்கள் தங்கி காலை முதல் இரவு வரை நாடகப் பயிற்சி பட்டறைகள், அனுபவப் பகிர்வுகள் செய்துள்ளனர். இந்த பட்டறைகள் - நாடகத் தயாரிப்பு நெறியாள்கை குறித்து அமைந்தது. இந்த வருட ஆரம்பத்தில் அவர்கள் தமது சொந்தமாக ஒரு சிறு நாடகம் நெறிப்படுத்தி நிகழ்த்திக் காட்ட வேண்டும் என்பது அவர்களது பாடநெறியில் உள்ள ஒரு நிபந்தனை. அதன்படி அவர்களுக்கு உதவும்படி இந்த நான்கு நாள் வேலைத்திட்டத்தை அமைக்கும்படி கல்லூரி பணிப்பாளர் கலாநிதி சி. ஜெயசங்கர் இவர்களை கேட்டுக் கொண்டார் . அதற்கு இணங்க பயிற்சி வழங்கப்பட்டது. மற்றும் அங்கு நடைபெற்ற கலை நிகழ்வுகளிலும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். அண்மைகாலமாக இந்த வளாகத்தில், மாணவர்கள் பயன் பெறக்கூடிய கலை நிகழ்வுகள், கருத்து அரங்குகள் பல தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதற்காக பணிப்பாளர் ஜெயசங்கரும், விரிவுரையாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

மற்ற பல்கலைக்கழகங்களை விட மிகவும் உற்சாகமாக இவர்கள் தற்போது இயங்குகிறார்கள். புலம் பெயர் கலைஞர்கள் மற்றும் திறன் உள்ளவர்கள், தமக்கு நேரம் கிடைக்கும் போது தாயகம் சென்று தாம் கற்றுத் தேர்ந்த திறன்களை அங்கு உள்ள இளையவர்களுக்கு பகிர்ந்துகொள்ளும் போது, தாயகத்தில் நல்லதொரு இளம் சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும் என்று நம்பலாம். போருக்குப் பின்னால் இது போன்ற சேவையின் தேவை அங்கு பலமாக உணரப்படுகிறது.

→ கனகரத்தினம் மகாவித்தியாலயம்

→ யாழ். பல்கலைக்கழகம்

→ மட்டு. பல்கலைக்கழகத்தில்

→ ஆரோகண மாணவர்கள்

→ மகாஜனா கல்லூரி

→ யாழ். இந்துக் கல்லூரி

போகிற போக்கில்...

ஏ.ஜே.ஞானேந்திரன்

மக்டொனால்டுக்கு சிறகு முளைக்கின்றது

இதுகாலம்வரை தரையில் இருந்தவர் பறக்க ஆரம்பித்து ரொம்பவே குஷியாகி இருக்கின்றார்.

பறக்கும் விமானங்களிலும் மாக்டோனால்ட்ஸ் நிறுவனம் பயணிகளுக்கு கோப்பி அருந்த வழி செய்துள்ளது. கனடிய விமான நிலையமான West Jet உடன் செய்துள்ள ஒப்பந்தத்தின்படி இந்த நிறுவனத்தின் ஸ்பெஷல் கோப்பி இதனுடைய முழு விமானங்களிலும் பரிமாறப்படும்.

ஏற்கனவே டொராண்டோ-கால்கரி பாதைப் பயணத்தின்போது கடந்த வாரம் முதற் தடவையாக இந்தப் பானம் விமானத்தில் அறிமுகம் செய்யப்பட்டு இருந்தது . அடுத்த மாதம் தொடக்கம், இந்த விமான நிறுவனத்தின் போயிங் 737, 767 விமானங்களின் பயணிகளுக்கு McCaf இலவச பானமாக வழங்கப்படவுள்ளது. இது ஒரு விளம்பர யுக்தி என்பது உங்களுக்கு சொல்லாமலே புரிந்திருக்கும்.

ஸ்டார்பக், டிம் ஹோர்ட்டன்ஸ் போன்ற பிரபல்ய நிறுவனங்களுடன் போட்டியிட்டு இந்த ஒப்பந்தம் மக்டொனால்ட்ஸ் நிறுவனத்தின் கைகளில் போய் சேர்ந்துள்ளது.

வானமே எல்லை என்பதை நாம் நம்பினோம். இன்று அது சாத்தியமாகி இருக்கின்றது என்று பூரிப்போடு சொல்கிறார் மக்டொனால்ட்ஸ், கனடாவின் தலைவர் ஜான் பெட்ஸ்.

ஏனைய சிற்றுணவுகளும் தொடருமா என்று கேட்டபோது முதலில் கோப்பி பறக்கட்டும், பின்பு பார்ப்போமே என்கிறார் தலைவர்.

வியாபாரிகளுக்கு பிழைக்க ஆயிரம் வழிகள் இருக்கின்றன.

அறக நணைந்தவனுக்கு உண்டோ கூதலும் குளிரும்?

பொதுவாகவே வட கொரியாவின் சிறைக் கைதிகள் மிருகத்தனமாக நடாத்தப்படுவது உலகறிந்த சங்கதி. இந்த அநியாயத்தை மேலும் அதிகரிப்பது போல புதிதாக ஒரு சவ எரிப்பகத்தை கட்டியுள்ள வட கொரியா சிறைக் காவலாளிகளை நிறுத்தி வைக்க மேலும் புதிய ஆறு நிலையங்களை தனது சிறைச்சாலைக்கு அண்மையில் எழுப்பியுள்ளது. பெரிய அளவில் கைதிகள் மீது மேற்கொள்ளும் சித்திரவதைகளை அதிகரிக்கவே இந்த ஏற்பாடு என்று சர்வதேச மன்னிப்பு சபை எச்சரித்துள்ளது.

மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் அரசின் இரண்டு முகாம்களில் அதிக நடவடிக்கைகள் இடம் பெறுவதை செய்மதிகள் அனுப்பிய படங்கள் மூலம் இந்த அமைப்பு உறுதிப்படுத்தி உள்ளது.

வன்புணர்வு, சிசுக்கொலை, சித்திரவதை, நிட்டமிட்ட பட்டினி வதை என்று உலகிலேயே மிக மோசமான வழிகளில் இங்கு சித்திரவதைகள் இடம்பெறுவதாக சமீபத்தில் தன் அறிக்கை ஒன்றில் ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

மிக மோசமான இந்த முகாம்களில் 1,20,000 பேர் வரையில் சிறை வைக்கப்பட்டு இருப்பதாகவும் அநேகமானவர்கள் அரசியல் கைதிகள் என்று கூறப்படுவதோடு, பலர் அரசை விமர்சித்த ஒரே குற்றத்திற்காக இங்கே அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

வட கொரிய மண்ணைவிட்டு தப்பியோட முயல்பவர்கள் இங்குள்ள வயல்களில் சாகும் வரை கடுமையாக உழைக்க பலவந்தப்படுத்தப்படுவதோடு, சாப்பாட்டின் தேவையைக் குறைக்க பலரை அவர்களது சொந்தப் பிள்ளைகளைக் கொல்லும்படி அதிகாரிகள் நிர்ப்பந்திப்பது இங்கு வழமையில் உள்ளது என்கிறார்கள்.

அரசு இப்படியான முகாம்கள் இருப்பதை என்றுமே ஒத்துக் கொண்டதில்லை. ஆனால், வருடாவருடம் இங்கு நடைபெறும் அட்டூழியங்களை நாம் படமெடுத்தபடிதான் இருக்கிறோம் என்கிறார் மன்னிப்பு சபையின் பிரித்தானிய இயக்குனர்.

அறக நனைந்தவனுக்கு கூதல் என்ன குளிர் என்ன என்ற நிலைதான் வடகொரிய அரசுக்கு!

அறுபதிலும் ஆசை வரும்...

ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன்... நியாயம்தான். ஒருவனுக்கு பல பெண்டாட்டி என்பதை உங்களால் ஜீரணிக்க முடிகிறதா? அரபு நாடுகளில் மதத்தை முன்வைத்து பல தாரக்காரர்களாக பலர் வாழ்கிறார்கள். இங்கே நமக்கு வாய்க்கட்டு போடப்பட்டு விடுகிறது. அது போகட்டும்.

பிரிட்டனில் வாழ்கின்ற 68 வயது கொள்ளுத் தாத்தாவுக்கு எதுக்கு பல பெண்டாட்டிகள்?

பிரிட்டனில் மிக அதிகம் பெண்களை மணந்தவர் என்ற சாதனையோடு ரொன் செப்பெர்ட் என்ற பெயர் கொண்ட இந்த இளையவர் தனது ஒன்பதாவது திருமணத்திற்கு தயாராகி வருவதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு சென்று 26



வயதான கிரிஸ்டல் என்ற பெண்ணின் குடும்பத்தாருடன் நத்தார் நாட்களைக் கழித்து விட்டு வருட முடிவில் பெண்ணை மணம் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார். அத்துடன் கதையை முடித்து விட்டு, இப்பொழுது தன்னுடன் ஒரு மாதம் பிரிட்டனில் தங்கியிருக்க ஏற்பாடு செய்துள்ளார். ஏழு மாத சிசுவை வயிற்றில் சுமக்கும் பெண்ணுடன் இவருக்கு திருமண வைபவம் நடக்கப்போகிறது. இவள் இவரது 9வது மனைவி. தனது எட்டாவது மனைவியின் விவாகரத்து அறிவித்தல்கள் வரும்வரை காத்து நிற்கிறார். வருடாவருடம் இதே கூத்துதான். ஒருத்தியை மணம் செய்வது. பின்பு அவளை விவாகரத்து செய்து விட்டு இரண்டாவது திருமணம். இவருக்கு 19 வயதாக இருந்தபோது அதாவது 1966ம் ஆண்டு மார்க்றேட் என்ற பெண்ணை முதலில் மணந்தவர் இன்று வரை எட்டு பெண்களை திருமணம் செய்துள்ளார். இத் திருமணங்கள் மூலம் இவருக்கு எட்டுப் பிள்ளைகள் பிறந்துள்ளார்கள். கடைசியாக 2004இல் திருமணம் செய்து கொண்ட வெங் என்ற பெண்ணுடன்தான் இவர் அதிக காலம் அதாவது 11வருடங்கள் விவாகரத்து செய்யாது இருந்துள்ளார். புதுமையான உலகம் புதுமையான மனிதர்கள்

உயிர் காப்பான் தோழன்

தினமும் பலருக்கு பல வேலைகள் இருக்க. இந்தக் குறிப்பிட்ட நபர் கடந்த 13 வருடங்களாக வார முடிவில் செய்யும் வேலை நம்மை பெருமளவில் ஆச்சரியப்படுத்தும் என்பது நிச்சயம். தனது வீட்டிலிருந்து தன் எலேக்ட்ரோனிக் ஸ்கூட்டர் மூலம் 20கி.மீ. தூரம் பயணம் செய்து சீனர்கள்

அதிகமாக தற்கொலை செய்யும் இடத்திற்கு வார முடிவில் போய் வருவதை இவர் வழமையில் வைத்துள்ளார். 48 வயதான இவர் சீனாவின் மிக நீண்ட நதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள Nanjing Yangtze பாலத்திற்குதான்வந்து போகிறார். இங்கு தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களை தடுத்து நிறுத்தவே இவர் இங்கு வந்து போகிறார். தன் சொந்தச் செலவிலேயே இந்தச் சமூகப்பணியை மேற்கொண்டு வருகின்றார் இந்த அபூர்வ மனிதர்.

2003இலிருந்து இந்தப் பணியை ஆரம்பித்த சென் இதுவரையில் 321 பேரை தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றி உள்ளாராம்.

இவரே ஒரு தடவை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும், ஒரு நண்பர் இவரைக் காப்பாற்றியதாகவும் அதன் பின்னர் இவர் மற்றவர்களை காப்பாற்றும் முயற்சியில் இறங்கியதாகக் கூறப்படும் செய்தியை இவர் அடியோடு மறுக்கின்றார்.

1968இல் கட்டப்பட்ட இப் பாலம் சீன தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தும் பிரபல்யமான பாலமாக இருப்பினும் 67மீ. உயரத்தில் உள்ள இப் பாலத்திலிருந்து ஆற்றுக்குள் குதித்து தற்கொலை செய்பவர்கள் அதிகரித்து வருவது இதற்கு அப்கீர்த்தியை ஏற்படுத்தி வருகின்றது. 1968-2006 காலகட்டத்தில் 2000 பேர் வரையில் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

Applications are invited for

The Kaanakkuyil 2017

Mrs Yoga Thillainathan
Presents the 24th Annual

KAANAKKUYIL 2017

On Saturday the **1st of July 2017** at 6.00 pm At Greenford Assembly Hall Greenford Middlesex, UB6 9QN
Applications are invited

for Bala Kaanakkuyil (Age between 8 and 12 yrs)	for Ilaya Kaanakkuyil (age between 13 and 16yrs)	for Kaanakkuyil (age 17yrs and over)

Application closing date: 28th February 2017

For application form, kindly contact:

020 3489 8309 / 079 0332 7708

Or

E-mail: arumthill@hotmail.com

தமிழ் மக்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி

BARRISTER S.J.JOSEPH

LLB(Ceylon) LLB Hons(Lond) MA (Business Law)
Bar-at-Law (Middle Temple)

பாரிஸ்டர் செ.யோ.யோசேப்

சொலிசிற்றர் இல்லாமலே நேரடியாக உங்கள் வழக்குகளை ஆராய்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகஉரிமை பெற்றுள்ளார்.

வழக்கை ஆராய்தல், நீதிமன்றத்தில் வாதாடல் ஆகிய இரண்டையும் ஒருவரே செய்வதால் உங்கள் வழக்குச் செலவு குறைவாகும்

BARRISTERS' CHAMBERS OF SEL-JOB JOSEPH
39, Hermitage Road, London N4 1LU
Tel: 0208 809 3083
Mobile 07831 594270

AREAS OF PRACTICE	பயிற்சி பெற்ற சட்டங்கள்
• Immigration and HR Law	• குடிவரவு சட்டம்
• Public Law [Judicial Review]	• மனித உரிமைகள் சட்டம்
• Employment Law	• பொதுச் சட்டம்
• Commercial Law	• தொழில் சட்டம்
• Criminal Law	• வர்த்தகச் சட்டம்
• Family Law	• குற்றவியல் சட்டம்
• Landlord and Tenant Law	• குடும்பச் சட்டம்
• Equity and Trust Law	• வாடகைச் சட்டம்
• Company & Partnership Law	• நம்பிக்கைச் சட்டம்
• International Trade Law	• கம்பனி பங்காளர் சட்டம்

கனக துர்க்கை அம்மன் பணி: வெள்ளி விழாவில் கௌரவிப்பு

லண்டனில் மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் ஈலிங்க் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்ட (1991-2016) 25 வருட வெள்ளிவிழா, சமீபத்தில் ஆலயத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அமரராகிவிட்ட அறங்காவலர் பொன்தெய்வேந்திரம் வீட்டில் 1991 ஆம் ஆண்டு ஒன்று கூடி ஆரம்பமான இவ்வாலயம், சவுத்தோல், வெம்பிளி என்று இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லப்பட்டு பூசைகள் நடைபெற்றன. அடியவர்கள் அறங்காவலர்களுடன் பக்கபலமாக இருந்து ஆலயத்தை வளர்க்கப் பாடுபட்டார்கள். ஆலயத்தில் நடைபெற்ற வெள்ளி விழா நிகழ்வுக்கு நிர்வாக சபைத் தலைவர் ஆர்.டி. இரத்தினசிங்கம் தலைமை வகித்தார்.

முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட நிர்வாக சபைக்கு சட்டத்தரணி என். கிருஷ்ணராஜா முதலாவது தலைவராகப் பெருமை பெற்றார். அடுத்து பாலசிங்கம், கருணைலிங்கம், யோகநாதன், ராமச்சந்திரன், சட்டத்தரணி இரத்தினசிங்கம் ஆகியோர் பொறுப்புகளை ஏற்று, வழி நடத்தி வந்துள்ளார்கள். இந்த ஆலயத்தை வளர்க்கப் பாடுபட்ட சிவாச்சாரியர்களில் கண்ணன் ஐயர், பவன் ஐயர், குமார் ஐயர் குறிப்பிடக் கூடியவர்கள். சென்னை காளிகாம்பாள் சாம்பசிங் சிவாச்சாரியார் 'கனகதுர்க்கா' என்று நாமம் சூட்டி, சிறப்புச் செய்தார்.

இந்த ஆலயம் லண்டனில் பிரசித்தி பெற்று விளங்குவதற்கு அடியவர்கள், நிர்வாகசபை, அறங்காவலர்கள் என்ற முக்கோண அமைப்பே காரணம் எனலாம்.

வெள்ளி விழா கௌரவிப்பு நிகழ்வில், மட்டக்களப்பு எம். பி. யோகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். "இந்த ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும், அறங்காவல் சபை உறுப்பினராகவும், பணி செய்பவர்கள், முந்தின பிறப்பில் செய்த பெரும் புண்ணியம் நான் எம். பி.யாக வராத காலத்திலேயே, அமரர் பொன் தெய்வேந்திரன் கிழக்கு மாகாணத்தில் நலிந்த மக்களுக்கு ஆலயம் மூலம் ஆற்றிய பணியை அறிவேன்" என்றும் மட்டக்களப்பு எம். பி. தமது பேச்சில் குறிப்பிட்டார்.

ஆரம்ப காலம் முதல் இன்றுவரை ஆலய வளர்ச்சிக்குப் பணியாற்றிய பலரும் இவ்வெள்ளி விழாவில் கௌரவிக்கப்பட்டனர். இது தவிர கடமையாற்றிய முன்னாள் நிர்வாக சபைத் தலைவர்கள், இந்நாள் உறுப்பினர்கள், அறங்காவலர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஆலய வளர்ச்சியில் மூலாதாரமாக பங்கு கொண்ட உயர்வாசல் குன்று ஆலயம், விம்பிள்டன் கணபதி ஆலயம் ஸ்ரோன்லி ஆலயம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் கௌரவம் பெற்றனர். வைரவமூர்த்தி, டாக்டர் மகேஸ்வரன், ஞானேஸ்வரன் ஆகியோருக்கு அறங்காவல் சபைத் தலைவர் எஸ். சிறீரங்கன் கௌரவம் செய்து, நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த சட்டத்தரணி இரத்தினசிங்கம் பேசுகையில், பொதுமக்கள் பணத்தில் இந்த ஆலய நிரந்தர கட்டடம் 1995இல் வாங்கப்பட்டது. 'கனகம்' என்ற சொல்லுக்கு அடியவர்களின் காணிக்கைகள் குவிந்த வண்ணமிருக்கின்றன. தாயக மக்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படும் போது செலவுகள் தவிர்த்து வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கினை வழங்கி வருகிறது. தலைமைப் பதவிகள் மாறலாம். ஆனால், ஆலயத்தின் அறப்பணி ஒரு நாளும் மாறாது. மாணிக்கவாசகர் கூறியபடி அவனருளால்தான் அவனை வணங்க முடியும் என்பது உண்மையான கூற்றாகும். பொதுமக்கள் இவ்வாலயத்தை வழிநடத்துவதால்தான், மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாக இது திகழ்கிறது" என்று குறிப்பிட்டார்.

அறங்காவல் சபைத்தலைவர் ஏஸ். சிறீரங்கன் பேசுகையில், "மக்களால் மக்களுக்காக என்ற கோட்பாட்டில் இந்த ஆலயத்தின் கால்கோள் விழாவை நடத்தி, பொதுமக்களிடம் கையளித்து இருக்கிறோம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை ஆலயத்தை வழி நடத்துவதுதான் அறங்காவலர்களுக்கு கிடைத்த மிகப் பெரும் கௌரவம். 'உன்னடியார் தாள் பணிவோம்' என்ற மணிவாசகர் வாக்குப்படி அடியார்களை கைகூப்பி தொழுகிறேன்" என்றார்.

நிர்வாக சபை செயலாளரும், வெள்ளி விழா அமைப்பாளருமான கனகரத்தினம் கேசவன் பேசுகையில் "தாயகத்தில் வடக்கிலும், கிழக்கிலும் இரண்டு பின்தங்கிய கிராமங்களை எடுத்து தகுந்த முறையில் அதனை உருவாக்கி, மக்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, மருத்துவம் என்று உதவி செய்ய முடிவு செய்திருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

இந்த ஆலயத்தில், இவ்விதமான ஒரு வெள்ளி விழாவைச் சிறப்பாக நடத்தி, கௌரவம் அளிக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதில் முன்னின்ற செயலாளர் கேசவனை நிர்வாக சபைத் தலைவர் இரத்தினசிங்கம் வெகுவாகப் பாராட்டினார். ■

ஆறு மனங்கள் கொண்ட ஆறுமுக சாமி

யாழ்ப்பாணத்திலும், இலண்டனிலும் முத்தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமைக்குரியவரான சுப்பையா ஆறுமுகசாமி மறைவு கலைப்பிரியர்களுக்கும் தமிழ்ப் பற்றாளர்களுக்கும் நிகழ்ந்த பேரிழப்பாகும்.

அரச ஊழியராக பணிபுரிந்த ஆறுமுகசாமி 20ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் யாழ்ப்பாணத்து நாடகக் கலை வளர்ச்சியின் முன்னோடிகளில் ஒருவராக இருந்தவர். தமது சொந்த இல்லத்தைக் கலாமன்றமாக்கி நாடகங்களில் ஆர்வம் என்பதை இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியாக உள்ளது. இந்தப் பயற்சிப் பட்டறையில் உருவாக்கப்பட்ட பல கலைஞர்கள் இன்று மக்கள் மத்தியில் பல துறைகளில் கலைத் தொண்டாற்றி வருகிறார்கள்.

இசைக் கலையில் ஆறுமுகசாமிக்கு இருந்த ஆர்வ மேலீட்டால் அந்தக் காலத்தில் சங்கீதத்தில் பிரபல்யமாக விளங்கிய சங்கீத பூஷணம் விஜயலட்சுமியை தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். கலைகளின் சங்கம நிகழ்வு இதுவாகும். இதனால் ஆறுமுகசாமி அவர்களின் கலை ஆர்வம் இலண்டன் வரை பல மடங்காகப் பரவியதெனலாம்.

இசையில் இருந்த இவரது ஆர்வத்தை என்னைப் போன்ற பலரும் அறிவார்கள். கடல் கடந்த ஆர்வம் என்றால் மிகையாகாது. இலண்டனில் ஆறுமுகசாமி அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட "மதுர கான சபா" அவருக்கான ஞாபகச் சின்னமாக அமைந்து முத்தமிழையும் நாம் வாழும் மண்ணில் வளர்க்க உதவும் என எதிர் பார்க்கலாம். வருடா வருடம் அவர் மேடையேற்றும் "அமிர்த கானம்" கலை விழாவைச் சிறப்பாக நடத்தி கலைகளுக்குப் பெருமை தந்தவர்.

ஆறுமுகசாமி அவர்களின் சாதனைகளுக்குப் பக்கத்துணையாக இருந்தவை அவர்களின் ஆறு மனங்கள் எனக் கூறலாம்.

அமைதியான · சாந்தமான அணுகுமுறை.
கலைப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தமை.
சமுதாய நலன் பேணல்.
முத்தமிழ் வளர்ச்சிக்கு முன்னின்றவர்.
அன்பிற்கும் பண்பிற்கும் பணிபவர்.
இறைபக்தி மிக்கவர்.

தமிழ் மக்களுக்கும், முத்தமிழுக்கும், சமயத்திற்கும் தொண்டாற்றிய ஒரு தொண்டனை தமிழினம் இழந்துவிட்டமை வேதனைக்குரியது. அமரத்துவமடைந்த ஆறுமுகசாமி அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

- பொன் பாலசுந்தரம்
(மூத்த பத்திரிகையாளர்)

பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம்

The Federation of Saiva (Hindu) Temples UK 200A Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax : 020 8482 6508
www.saivafedaration.uk.org Email: saivamahanadu@saivafederation.uk.org Correspondence: 2-4 Bedford Road, Walthamstaw, Londn E17 4Px.

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் சைவ மாநாடு 06.05.2017, 07.05.2017 ஆகிய இரு நாட்கள் லண்டனில் மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2017ம் ஆண்டில் நடாத்தும்

- திருமுறை ஓதல் போட்டி
- தமிழ் பேச்சு போட்டி
- ஆங்கிப் பேச்சு போட்டி
- நாடகப் போட்டி

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாலே பிரித்தானியா வாழ் சைவ மக்களிடையே சைவ சமய அறிவையும் புலமையையும் ஊக்குவிக்கும் பொருட்டு பிரித்தானிய சைவ திருக்கோவில்கள் ஒன்றியம் 18வது ஆண்டாக மேற்படி போட்டிகள் நடாத்த உள்ளது. அதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி 31.03.2017

போட்டிகளுக்கான விண்ணப்ப படிவம் – 2017

பங்குபற்ற விரும்பும் போட்டிகளின் அருகில் புள்ளடி இடவும்

☐ திருமுறை ஓதல் ☐ தமிழ்ப் பேச்சு ☐ ஆங்கிலப் பேச்சு ☐ நாடகம்

பெயர் (Name):.....

(Write clearly in English)

முகவரி (Address):.....

.....

Post Code:.....Telephone:.....

பிறந்த திகதி: (Date of Birth)..... வயது பிரிவு:.....

(Copy of Birth Certificate to be enclosed) (As at 01-03-2016)

Email address:.....

முதல்நிலை போட்டி செய்ய விரும்பும் கோயில்:.....

(லண்டனுக்கு வெளியே வதிபவர்களுக்கு மட்டும் - மறுபக்கம் பார்க்கவும்)

போட்டியாளரின் அல்லது போட்டியாளரின் பெற்றோரின் கையொப்பம்.....

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய விலாசம்:

Application to be posted to: Mr.S.Pathmamohan
(Saiva Temples Federation Competition 2017)
Croydon Metropolitan College, 30-32 Southend, Croydon, SURREY CRO 1DN

Copy of application from could be obtained from the affiliated temples to the Fedaration or visit www.katpakapathy.com, www.ghanapathy.co.uk

திரு.க.வி.கணேசமூர்த்தி	திரு.மு.கோபாலகிருஷ்ணன்	திரு.க.நாகராசா
செயலாளர்	தலைவர்	பொருளாளர்

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 2017ம் ஆண்டில் நடாத்தும் போட்டிகளுக்கான விதிமுறைகள்

1. பிரித்தானியாவில் வாழும் சைவ சமயத்தவர்கள் எவரும் பங்குபற்றலாம்.
2. திருமுறை ஓதல் போட்டி, தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளுக்கான வயது எல்லை:

   (i) 5 வயதிற்கு உட்பட்டோர் (ii) 5-7 வயது (iii) 8-10 வயது (iv) 11-13 வயது (v) 14-17 வயது (vi) 18-25 வயது
3. ஒன்றியத்தினால் தரப்பட்ட பேச்சுகள் மட்டுமே போட்டியில் பயன்படுத்தப்பட வேண்டும்.

   (தேவார புராணம் ஒழுங்கு முறை, பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன)
4. திருமுறை ஒதுதல் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் ஆலயத்தில் நின்று இறைவனை வழிபடுவது போன்று பாட வேண்டும். (தரப்பட்ட வயதுக்கான ஒழுங்கு முறைப்படி திருமுறைகளை அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்து பாடலாம். சுருதிப் பெட்டியையும் தாளத்தையும் பாவிக்கலாம்)
5. நாடகப் போட்டிகளுக்கான வயது எல்லை:

   (i) 18 வயதிற்கு உட்பட்டோர் (ii) 18 வயதிற்கு மேற்பட்டோர்
6. நாடகம் இவ்வருட ஒன்றியத்தின் இலக்கான வேத சிவாகமங்களும் ஆலய வழிபாடுகளும் என்பதை ஒட்டியதாகவும், 20 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். (குழுத்தலைவர் மாத்திரம் விண்ணப்பித்தால் போதும்)
7. போட்டிகளுக்கான கட்டணம் இலவசம். (போட்டிகளுக்கான செலவுகள் ஒன்றியத்தினால் வழங்கப்படமாட்டாது)
8. போட்டிகள் முதல்நிலை பிரதேச ரீதியில் பின்வரும் கோவில்கள் 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

   வடக்கு மேற்கு இலண்டன் Harrow ஐயப்பன் கோவில், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்

   கிழக்கு இலண்டன் Manor Park சைவ முன்னேற்றச் சங்கம்

   தென் மேற்கு இலண்டன் Stoneleigh அம்மன் கோவில், Wimbledon கணபதி ஆலயம்

   தென் கிழக்கு இலண்டன் Lewisham சிவன் கோவில்

   இலண்டனுக்கு வெளியில் வசிப்பவர்கள் மேற்குறிப்பிட்ட ஏதாவது கோவில்களில் பங்குபற்ற முடியும்.
9. இறுதி நிலைப் போட்டி Archway முருகன் கோவிலில் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும்.

   ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பபடிவம் மூலம் பங்கு பற்றலாம். முடிவுத் திகதி 31.03.2017
11. ஒவ்வொரு நடுவர் குழுவிலும் மூன்று நடுவர்கள் அங்கம் வகிப்பார்கள். இவர்கள் பங்குபற்றும் பிள்ளைகளின் உறவினர்களாக இருக்கமாட்டார்கள்.
12. நடுவர்களின் தீர்ப்பே போட்டிகளின் முடிவாகும்.
13. போட்டியில் முதலாவதாக வருபவர்கள் 06.05.2017, 07.05.2017 நடைபெறும் 18வது சைவ மாநாட்டில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

போட்டிக்கான பிரிவுகளும் அவற்றுக்கான விபரங்களும்

பிரிவு	வயது எல்லை	பிறந்த திகதி எல்லை	திருமுறைகள்	தமிழ்ப் பேச்சு தலைப்புகள்	English Speech Topics
1	5 வயதிற்கு உட்பட்டோர்	01.03.2012இற்குப் பின்	தேவாரம்	எனது தாய் நாடு	Sundaramoorthi Nayanar
2.	5-7 வயது	28.02.2010 தொடக்கம் 01.03.2012 வரை	தேவாரம் புராணம்	மனுநீதி கண்ட சோழன்	Maha sivarathri
3.	8-10 வயது	28.02.2008 தொடக்கம் 01.03.2010 வரை	தேவாரம் புராணம் வாழ்த்து	சைவத்திருமுறைகள் வரலாறு	Temple worship
4.	11-13 வயது	28.02.2006 தொடக்கம் 01.03.2008 வரை	பஞ்ச புராணம் வாழ்த்து	சைவமும் தமிழும்	Saivites and their beliefs
5.	14-17 வயது	28.02.2004 தொடக்கம் 01.03.2006 வரை	பஞ்ச புராணம் திருப்புகழ் வாழ்த்து	நினைவு நல்லது வேண்டும்	Kannappa nayanar
6.	18-25 வயது	28.02.2002 தொடக்கம் 01.03.2004 வரை	பஞ்ச புராணம், திருப்புகள் வாழ்த்து	சைவத்தின் தொன்மை	Saint Yogar swamigal

Note: Tamil, English Speeches could be obtained from: www.katpakapathy.com, www.ghanapathy.co.uk

மிடறு

அண்டனூர் சுரா



அவளிடமிருந்து பார்வையை எடுத்த கண்ணையா குழந்தையைத் துலாவினார். குழந்தையை அவளது வலது கை தாங்கியிருந்தது. குழந்தையை அவள் முந்தாணையால் மூடியிருந்தாள். குழந்தையின் சும்பிய கால்கள் சவலைத் தட்டிபோய் வெளியேத் தெரிந்தன.

'வவ்....வவ்....' எனக் குரைத்துக் கொண்டிருந்த நாயை விசில் அடித்துக்கூப்பிட்டதும் நாய் அவரை உரசிக்கொண்டு போர்டிகோவில் வந்து படுத்து கொண்டு நாக்கைத் தொங்கவிட்டவாறு பெருமூச்சு விட்டது. வாசலில் கிறில் கேட்டைப்பிடித்தவாறு நின்றுகொண்டிருந்தவள் குழந்தையை இலகுவாகத் திருப்பி குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு அதே இடத்தில் உட்கார்ந்தாள்.

'இந்தாடி.... எழுந்திருக்கிறீயா..... இல்லையா நீ...?'

'பால் வேணுங்க தாயீ

'வெயிலடி உள்ளே வந்தாவது உட்காரு...'

'ஒரு மொரட்டு பால் வேணுங்க.....'

'பால்... பால்... பால்.... நாங்க என்ன மாடா வளர்க்கிறோம்...'

'பால் கொடுங்க சாமீ... போயிடுறேன்.....'

'மரியாதையா சொல்றேன் எழுந்திருச்சிடு ஆமா....' கண்ணையா அடிப்பதைப்போல கையை ஓங்கினார். நாக்கைத்துறுத்தினார். அவள் எதையும் பொருட்படுத்தவில்லை. பால் வாங்காமல் நான் இந்த இடத்தை விட்டு நகரப்போவதில்லை என்பதாக அவள் உட்காந்திருந்தாள்.

'சுபாஷ்..... அம்மாவ கூப்பிடு.... 'கண்ணையா மகனிடம் ஏவினார். சுபாஷ் மடிக்கணினியில் குத்துச்சண்டை விளையாடிக் கொண்டிருந்தான். அவன் கண்களைத் திரையிலிருந்து எடுக்காமல் அவனது அம்மாவை உரக்க அழைத்தான். "அம்மா அப்பா கூப்பிடுறாங்க...."

'ஏன்னடா....?' என்றவாறு அவள் சீரியல் ஒலியைக் குறைத்தாள்.

'வாசல்ல ஒருத்திக்கு பால் வேணுமாம்....'

'ஒண்ணுமில்லைன்னு போகச்சொல்லு....'

மறுபடியும் அவன் பார்வையை கணினித்திரையிலிருந்து ஒரு அங்குலம் கூட நகர்த்தாமலல் 'அப்பா, அப்பாயி ரெண்டு பேரும் சொல்லிப்பார்த்தாச்சு போறமாதிரித் தெரியல...' என்றான்.

சித்ரா ரிமோட்டுடன் வாசலுக்கு வந்தாள். ஆள்காட்டி விரலுக்கு பதிலாக ரிமோட்டை நீட்டி அவளை எழுப்பினாள். 'எழுந்திரிடி.....'

'பால் வேணும்... தாயீ...'

'முதல்ல எழுந்திரி...'

'ஒரு மொரட்டு மட்டும் வேணும்ம்மா...'

'பால் விக்கிற விலையில ஒரு மொரட்டும் கிடையாது... அரை மொரட்டும் கிடையாது....'

'நீங்க நல்லா இருப்பீங்க தாயீ....பால் கொடுங்க போயிடுறேன்....'

'இச்சீ....கழுத....எழுந்திரிக்கிறீயா... இல்லையா.... பிச்சப்போட்டு பிச்சப்போட்டுதான்... என் வீடு பிச்சைக்காரன் குடும்பமாப்போச்சு....எழுந்திரிடீ...'

'ஏ புள்ளைக்கு பால் வேணும் தாயீ...'

மூன்று பேரும் திகைத்துபோய் இடுப்பில் கைகளை வைத்துகொண்டு நின்றார்கள். அவள் சொன்னதையே சொல்லிச் கொண்டிருந்தாள். 'பால் வேணும்.... பால் வேணும்....பால் வேணும்....'

அவளது பார்வை சாலையைப் பார்த்திருந்தது. உச்சி வெயிலில் தலையில் முந்தாணைக்கூட போட்டுக்கொள்ளாமல் அவள் உட்கார்ந்திருந்தாள். குழந்தையின் பூஞ்சை உடம்பை ஒரு கறுப்பு அழுக்குத்துணியும், முந்தாணையும் சுற்றியிருந்தன.

சித்ரா கூந்தலை அள்ளி முடிந்துகொண்டாள்.

'இந்தா.... எழுந்திரி.....'

'அம்மா....ஏ புள்ளைக்கு பால் கொடுங்கம்மா....'

'பாலும் கிடையாது... ஒண்ணும்...கிடையாது.... கிளம்பு..'

'பால் வேணும்....'

சித்ரா பெருமூச்சிரிந்தாள். இடுப்பிற்கு கைகளைக்கொடுத்து விரைத்து நின்றாள்.

'சோறு இருக்கு வேணுமா....?'

'பால் வேணும்....'

'சாப்பிடுறீயா.....?'

'பால் வேணும்....'

அலைபேசியில் முகம் பதித்திருந்த கோபிகா பார்வையை அதிலிருந்து எடுத்து அம்மாவிடம் சொன்னாள். 'வீட்டுல வேல இருக்கு. பார்க்கிறீயா... பால் தாறேனு சொல்லு... போயிடுவா...'

'அதெ நீ வந்து சொல்லேன்டி...'

கோபிகா அலைபேசியை ஜீன்ஸ் பேன்ட் பாக்கெட்டிற்குள் தணித்துகொண்டு வாசலுக்கு ஓடிவந்தாள்.

'வேல இருக்கு பார்க்கிறீயா...'

'பால் வேணும்....'

'பால் தாறோம்... வேலய பார்த்துக்கொடுத்திட்டு பால் வாங்கிட்டு போ....'

'ஏ புள்ளைக்கு பால் வேணும்....'

'இந்தா...நா சொல்றத காதுக்கொடுத்து கேளு... ஒண்ணு ரெண்டு வேலைக இருக்கு. அதைப் பார்த்துக்கொடு பால் தாறோம்...'

'ஏ புள்ளைக்கு பால் தாங்க தாயீ.... உங்களுக்கு புண்ணியமாப்போகும்....'

'ம்...தாறோம்....வேல பார்க்கிறேனு சொல்லு'

'பால் தருவீங்களா....'

'ம்....தாறோம்....'

அவள் மெல்லத் தலையை ஆட்டினாள். சுபாஷ் 'கொல்லெனச் சிரித்தான்.' அவள் போயிடுவானு நீ வேலைப் பார்க்கிறீயானு கேட்டே....அவ பார்க்கிறேன்கிறாள்.... அவக்கிட்ட நீ என்ன வேலைக் கொடுக்கப்போறே..'

கோபிகா 'என்னோட ட்ரெஸ்களை துவைக்கச் சொல்லப்போறேன்....' என்றாள்.

'யார இவளைப்யா....?'

'ஏன் இவளுக்கு என்னவாம்....?'

'அவ அழுக்கு உன்னோட ட்ரெஸ்ல ஒட்டிக்கிறப்போகுது...'

'அப்ப பாத்திரம் தேய்க்கச் சொல்லலாம்...'

'கரண்டி எதையும் எடுத்து மடிக்குள்ள வச்சிக்கிட்டு போயிடப்போறா....'

'இச்சீச்சி....இவளைப் பார்க்க அப்படியெல்லாம் செப்றவ மாதிரி தெரியல.....'

சுபாஷ் சீறிட்டான் 'ஆமாம்....தெரியல.... அடுத்தத்தெருல வேலக்காரியே நகை நட்டெல்லாம் அள்ளிக்கிட்டு போயிட்டா....'

'அப்ப.... வேண்டாம்' என்றாள் கோபிகா.

'எதையாவது ஒரு வேலைக்கொடுத்துப்பார்ப்போமடி...' என்றாள் அவளது தாய் சித்ரா. 'வாசலைச்சுற்றிலும் கூட்டச்சொல்லலாம்....' - கண்ணையா.

'என்ன வாசல்களை கூட்டுறீயா....' அவளிடம் குனிந்து கேட்டாள் கோபிகா. நிமிர்கையில் மூக்கைப்பிடித்து கொண்டு நிமிர்ந்தாள்.

'பால் வேணும்.....'

'பால் வீட்ல இல்ல. கடை தூரத்தில இருக்கு. நான் போய் பால் வாங்கிக்கிட்டு வாறேன்....நீ... வாசலைக் கூட்டிப்பெருக்கு....'

அவள் மெல்ல எழுந்தாள் குழந்தையை மடியிலிருந்து துணியைச் சுற்றித்தூக்கினாள். வாசலில் கிறில் கேட்டை ஒட்டியிருந்த ஒரு சமதளக்கட்டையில் கிடத்தினாள்.

'இந்தா....ஒனக்கு அறிவு எதுவும் இருக்கா...இல்லையா..... புள்ளைய இப்படி வெயில்ல படுக்க வைக்கிற.... உள்ளே கொண்டுவா....' அரற்றினார் கண்ணையா.

'வேணாம்....' என்றாள் அவள்.

'சுபாஷ் என் பெட்ல ஒரு மஞ்சக்கலர் டவல் இருக்கும் அதையும் குடையையும் எடுத்துக்கிட்டு வா....' எனக் கண்ணையா சொன்னதும் அவன் வேகமாக வீட்டிற்குள் ஓடி எடுத்து வந்தான்.

'இந்தா....' இரண்டையும் அவன் நீட்டினான்.

அவள் மடிப்புக்கலையாமல் துண்டை கட்டையில் விரித்தாள். அதன் மீது குழந்தையைக் கிடத்தினாள் குழந்தை மீது ஈக்கள் எதுவும் மொய்க்காமல் இருக்க போர்த்தினாள். குடையை விரித்து தலையிடத்தில் வைத்தாள். சேலையைத் தூக்கிச்சொருகிக்கொண்டு ஒரு மூலையில் கிடந்த விளக்குமாற்றை எடுத்து வீட்டைச்சுற்றிலும் ஒரு சுற்று வேகமாகக் கூட்டிப்பெருக்கினாள். முந்தாணையால் முகத்தில் வழிந்த வியர்வையை தொட்டு எடுத்தவாறு வாசலுக்கு ஓடி வந்தாள். குழந்தையை வேகமாகத் தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு 'அம்மா...தாயீ...ஏ புள்ளைக்கு பால் வேணும்ங்க....' என்றாள்.

'வா... இப்படி கட்டையில் உட்கார். சோறுப்போட்டுத்தாறேன் சாப்பிடு..' சித்ரா, ஒரு இலையில் சோறு கொண்டுவந்து வைத்தாள்.

'சோறெல்லாம் வேண்டாம் தாயீ பால்தான் வேணும்....'

'சரி தண்ணீயாவது குடி....' நீட்டினாள் மூதாட்டி.

'வேண்டாம் தாயீ....பால்தான் வேணும்...'

அவளது உடம்பு விபர்த்துக்கொட்டியது. அவளையும் அறியாமல் உதடுகள் பரிதவித்தன. அவளையே ஒரு கணம் பார்த்துகொண்டிருந்த சித்ரா வீட்டிற்குள் சென்று நூறு ரூபாய் பணம் எடுத்து வந்து அவளிடம் நீட்டினாள்.

'பால்தான் வேணும் தாயீ'

'நூறு ரூபாய் ஆத்தா.... தேவைப்படுகிறப்ப உன் பிள்ளைக்கு பால் வாங்கிக்கொடு....'

'அரிசி தாறேன்.... கொண்டு போறீயா....'

'பால்தான் வேணும்....'

'பால் இல்லையே.... வாங்கப்போனவ இன்னும் வரக்காணோமே.....'

அவளுடைய முகம் ஏமாற்றத்தில் தழும்பியது. குழந்தையை மார்போடு தாங்கிக்கொண்டு மெல்ல நடக்கலானாள்.

'இந்தா....எங்கே போறே... வேலைப்பார்த்தே....காசு, சோறு, அரிசி எதையும் வாங்காமல் போனால் என் குடி விளங்குமா...?'

அவள் நின்றாள். முகத்தைத் திருப்பி கெஞ்சும் முகத்துடன் பார்த்தாள். கடைக்குச் சென்றிருந்த கோபிகா பால் பாக்கெட்டுடன் ஓடி வந்தாள்.

'வேலைய முடிச்சிட்டாளா....?'

'ம் முடிச்சிட்டா.... சாப்பிடச் சொன்னேன்..... மாட்டேங்கிறாள்....'

'தண்ணீ கொடுத்தீயாம்மா....?'

'வேண்டானு சொல்லிட்டாடி....'

'அம்மா அவள் பாவம்மா...பணம் கொடுத்து விடும்மா....'

'வாங்கிக்கிற மாட்டேங்கிறாளே.....'

'அம்மா....ப்ரிட்ஜ்க்குள்ள ப்ரெட் இருக்கு எடுத்துக்கிட்டு வாம்மா... கொடுத்து விடுவோம்....'

'அவதான் எதுவுமே வேண்டானு சொல்றாலேடி...'

கோபிகா கலங்கிய முகத்துடன் பால் பாக்கெட்டை அவளிடம் நீட்டினாள். அதை அவள் கண்ணீர் மல்க வாங்கி மடியில் வைத்துகொண்டாள். குழந்தையை மார்போடு அணைத்தவாறு மெல்ல நடக்கலானாள்.

இரண்டொரு வீதி தாண்டியதும் அவள் தங்கியிருந்த அகதிகள் முகாம் வந்தது. அதையொட்டி ஒரு ஆலமரம் கிளைப்பரப்பி விரித்து நின்றது. அதற்குள் புதர்கள் காடுகளைப்போல மண்டியிருந்தது. அதற்குள்ளாக அவள் நுழைந்தாள். மரத்தின் வேரிடத்தில் இரு கால்களையும் நீட்டி உட்கார்ந்தாள். குழந்தையை கால்களுக்கிடையில் வைத்து கால், கைகளை நீவிவிட்டாள். விரல்களால் தலைக்கோதி சீவினாள். உச்சந்தலையில் குடுமியிட்டாள். புதர் பூக்களைப் பறித்து சூட்டினாள். குழந்தையைத் தூக்கி தலை முதல் பாதம் வரைக்கும் முத்தம் கொடுத்தாள். மார்போடு அணைத்துக் குலுங்கினாள்.

ஒரு புதரினையொட்டிக் குழியொன்று பறித்தாள். அதற்குள் குழந்தையைக் கிடத்தினாள். முகத்தை கிழக்குப் பக்கமாகத் திருப்பினாள். அவளுடையக் கைகள் நடுங்கிற்றன. ஒரு கையை ஒரு கையால் இறுகப்பிடித்துக்கொண்டு மண்ணை குழிக்குள் தள்ளினாள். மண்கட்டி குழிக்குள் விழுகையில் கர்ப்பப்பை அறுவதைப்போலிருந்தது. மண்ணைக்கும்பாகக் குவித்தாள். பால் பாக்கெட்டைப் பற்களால் கிழித்து தலை மேட்டிடத்தில் பீச்சினாள். அவள் நெஞ்சிற்குள் யாரோ குதிப்பதைப் போலிருந்தது. ■

3ம் பக்க தொடர்ச்சி

ஐ.நா.வில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்த போது, மனித உரிமைப் பேரவையில் இந்த பூகோள அரசியல் களம் எவ்வாறு பிளவுபட்டு நின்றது என்பதைப் பாருங்கள்.

'இலங்கை அரசின் மீது ஐ.நா. தீர்மானம் மூலம் அழுத்தத்தை பிரயோகித்து, ஆட்சி மாற்றமொன்றினை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சிக்கிறது' என்கிற பூகோள அரசியலைப் புரிந்து கொண்ட அமெரிக்க எதிர்ப்பு அணிகள், தமிழ்பேசும் மக்களின் நலன்களுக்கு எதிரான நிலைப்பாட்டினை ஐ.நா.வில் மேற்கொண்ட விவகாரம் ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல.

அன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவபலத்தினை அழிப்பதற்கு ஒன்றுசேர்ந்தவர்களே, இன்று ஐ.நா.வில் மோதிக்கொள்கிறார்கள்.

ஆகவே, 'இந்துசமுத்திரப் பிராந்திய ஆதிக்கப்போட்டியில், வல்லரசுகளால் பந்தாடப்படுகிறது ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம்' என்கிற பூகோள அரசியல் உண்மையை இலகுவில் கடந்து சென்றுவிட முடியாது.

'திருக்கோணமலை துறைமுகத்தையும், சீனன்குடா எண்ணெய் சேமிப்பு கிணறுகளையும் அமெரிக்காவிற்கு தாரைவார்த்துவிடுமோ இலங்கை அரசு?' என்கிற அச்சத்தில், ஈழவிடுதலைப் போராட்டத்தில் மூக்கை நுழைத்துக் கொண்ட இந்தியாவின் பூகோள அரசியல் பற்றியும் பேசலாம்.

சமாதான பேச்சுவார்த்தை காலத்தில், அதாவது 7 பெப்ரவரி 2003 அன்று சீனன்குடா எண்ணெய் கிணறுகளை 35 வருட குத்தகைக்கு இந்திய நிறுவனத்திற்கு இரணில் அரசு கொடுத்தது. பிராந்திய வல்லரசினை தம்மோடு வைத்திருக்க, பெருந்தேசிய இளவாத அரசு தந்திரோபாயமாக முன்னெடுத்த பூகோள அரசியல் இது.

பின்னர் மகிந்த இராஜபக்ச ஆட்சியில், அம்பாந்தோட்டையிலும் கொழும்பிலும் சீன முதலீடுகள் புகுந்தது.

சீனாவிடம் வாங்கிய கடனை செலுத்த வழிதெரியாமல், 99 வருட குத்தகைக்கு 1500 ஏக்கர் நிலத்தை அம்பாந்தோட்டையில் வழங்க நல்லாட்சி அரசு இணங்கியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. அநேகமாக பாகிஸ்தானின் குவடோர் துறைமுகம் போல, அம்பாந்தோட்டை துறைமுகமும் சீனக் கம்பெனிகளின் வசம் விரைவில் சென்றுவிடலாம்.

தமது பிராந்திய அரசியல் பொருளாதார இராணுவ நலனிற்காக, இந்த வல்லரசுகள் முன்னெடுக்கும் காய் நகர்த்தல்களை மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் உறுதி செய்கின்றன.

இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முயற்சியில் தமக்கு நம்பிக்கை உள்ளதென சர்வதேச வல்லரசுகள் கூறுகின்றன.

இதுவும் பூகோள அரசியலின் குரல்தான். அதனை சம்பந்தர் அவர்களும் வழிமொழிகின்றார். 'தீர்வு எவ்வாறு அமைந்தாலும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிட மாட்டோம்' என்பதான கருத்துக்களும் வெளிவந்துள்ளன.

மேற்கும் இந்தியாவும் விரும்பிய ஆட்சிமாற்றத்திற்கு பங்கம் ஏற்படாமல் பாதுகாக்கும் பொறுப்பு, நிபந்தனையற்ற ஆதரவின் கீழ் வருவது போலிருக்கிறது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா, சனாதிபதித் தேர்தலில் பங்குபற்றிய காலத்திலிருந்தே முன்னெடுக்கப்படும் இந்த நிபந்தனையற்ற ஆதரவு முழக்கம், 'மீண்டும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு' என்றாலும் தொடரும்.

இனியென்ன.....வருகிற தீபாவளிக்குள் தீர்வு வருமென்கிற நம்பிக்கையோடு மக்கள் வாழப்பழகிக் கொள்வார்கள் என்று நம்புவோமாக...!

உறவுகளை மறக்காத வைத்திய நிபுணர்

லண்டனில் பிரபல வைத்திய நிபுணராக நீண்டகாலம் பணியாற்றும் டாக்டர் எஸ். நவரத்தினம், ஊரையும், உறவுகளையும் மறக்காத தாயக உணர்வோடு, அங்குள்ள மக்களுக்கு பணி செய்து வருபவர். ஆண்டு தவறாமல், அங்கு சென்று முடிந்ததைச் செய்து வருபவர். தெல்லிப்பழையில் தான் பிறந்த விழிசிட்டி கிராமத்தில், நூற்றுக்கு மேலான தன் உறவுகளுக்கு எந்தவிதமான உதவிகள் வழங்கலாமென்பதை அவர்களுடன் சமீபத்தில் கூடிப் பகிர்ந்து கொண்டார். போரின் தாக்கத்திலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கும் அந்த உறவுகள் டாக்டர் நவரத்தினத்தை உளமார வரவேற்று, அவர் கருத்துக்களை ஆவலுடன் செவிமடுக்கிறார்கள்.

7ம் பக்கத்தின் தொடர்ச்சி

ஜெயலலிதா, மக்கள் வரிப்பணத்தை சில ஆண்டுகளே பயன்படும் பொருட்களுக்கு வாரி இறைத்ததோடு, விலையில்லாப் பொருட்கள் வழங்குவதற்காக மதுச்சீரழிவை நியாயப்படுத்தவும் செய்தார். ஆண்டுதோறும் டாஸ்மாக் மது விற்பனையின் மூலம் கிடைக்கும் சுமார் 25 ஆயிரம் கோடிகள் இல்லாவிட்டால், இந்த நலத்திட்டங்கள் பாதிக்கப்படும் என அ.தி.மு.க. அரசு, மக்கள் போராட்டங்களுக்கு மத்தியிலும் சசிபெருமாள் போன்றவர்களின் உயிர்த்தியாகத்துக்கு இடையிலும் மது விற்பனையை அதிகரித்தது.

குடும்பம் இல்லாமல், வாரிசு இல்லாமல் தனியாக ஒரு பெண், கருணாநிதி போன்ற பலம்மிக்க, அரசியல் சாணக்கியத்தில் தேர்ந்தவரோடு ஒற்றைக்கு ஒற்றை எதிர்த்து நிற்பது, ஆணாதிக்கக் குடும்ப அமைப்பில் துவண்டு கொண்டிருந்த தமிழகத்துப் பெண்களிடையே ஜெயலலிதா ஆதரவு உளவியலை ஓரளவுக்கு கட்டமைத்திருக்கலாம். அதற்காகவெல்லாம் ஜெயலலிதா பெண்ணுரிமைப் போராளியாகிவிட மாட்டார். ஜெயலலிதாவின் ஆதிக்கப்பண்பை, பெண்ணியம் எனக் குறிப்பிடும் அவலம்கூட அண்மையில் நடந்தது. ஒரு பெண்ணாக பல இடர்ப்பாடுகளை எதிர்கொண்ட ஜெயலலிதா, வீரப்பன் தேடுதல் வேட்டையில் பழங்குடியினப் பெண்களைக் கொடூரமான முறையில் பலாத்காரவதை செய்த காவலர்களுக்குப் பெரும் பரிசுப் பொருள்கள் அளித்து கௌரவித்தார். சிறப்பு அதிரடிப்படையின் வதைகூடங்களில் பிறப்புறுப்பில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு சித்திரவதைக்கு ஆளான பழங்குடிப் பெண்களின் கதறலும் மனித உரிமைப் போராளிகளின் கூப்பாடுகளும், ஜெயலலிதாவின் சர்வாதிகாரச் செவிகளில் விழவே இல்லை. 1992-ல் ஜெயலலிதா ஆட்சியில் காவல்துறை மற்றும் வனத்துறையினரால் 18 பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்ட வாச்சாத்திக் கொடுமை, அவர் ஒரு பெண்ணாக எவ்வளவு ஓர்மையுடன் இருந்தார் என்பதற்கான ஆதாரம். சுமார் 20 ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நீதி துடைத்தெறியப்பட்டது.

ஆதிக்கம் என்ற உணர்வுக்குப் பால் பேதம் இல்லை. அது ஆணுக்கும் வரும், வாய்ப்புகள் கிடைக்கும் போது பெண்ணுக்கும் வரும். ஆணுக்கு வந்தால் சர்வாதிகாரமாக, பெண்ணுக்கு வந்தால் கம்பீரம் அல்லது தலைமைப் பண்பாகக் கருதமுடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் அரசின் உயர் பொறுப்புகளில் இருப்போரையும் காலில் விழவைத்ததும் வாகனத்தின் டயரைப் பார்த்து கும்பிட வைத்ததும், ஹெலிகாப்டரில் பறக்கும் போதும் கீழே வணங்கி நிற்க வைத்ததும் ஜெயலலிதா என்ற ஆதிக்கவாதியின் அதிகாரப் பக்கங்கள். நினைத்தால் யாரையும் பொறுப்பில் அமர்த்துவது, யாரையும் பதவியில் இருந்து தூக்கியடிப்பது என்றிருந்த சர்வாதிகாரத் தலைமையின் கீழ், அரசு உயரதிகாரிகளும் அமைச்சர்களும் அஞ்சி அஞ்சியே காலத்தைத் தள்ளினர்.

ஒற்றை நபராக நடத்திய ராஜ்ஜியத்தில் ஒன்றரைக் கோடி தொண்டர்களைப் பற்றி ஜெயலலிதா துளி அக்கறையும் கொண்டிருக்கவில்லை. அ.தி.மு.க. என்ற திராவிட இயக்கம் தனக்குப் பின்னரும் நீடிக்க வேண்டுமென அவர் நினைத்திருந்தால், இணை, துணை அளவுகளில் தலைவர்களை கட்சிக்குள் வளர்த்தெடுத்திருக்க முடியும். தனது உடல்நிலை பற்றி அறியாதவர் அல்ல அவர். தனக்குப் பின்னர் எப்படியும் போகட்டும் என்ற மனநிலையில்தான் ஜெயலலிதா எப்போதும் இருந்தார்.

மக்களோடு கலக்காமல், மக்களைப் பற்றி துளியும் சிந்திக்காமல், மக்களிடமிருந்து வெகு தொலைவுக்கு விலகி, தன்னை மிக மிகத் தனிமைப்படுத்திக் கொண்டார். பொது வாழ்க்கையில் இருப்போர் ஓரளவுக்கேனும் வெளிப்படைத்தன்மையைக் கடைபிடிக்க வேண்டும். அதிலும் ஒரு மாநிலத்தை ஆட்சி செய்யும் தலைவர், தனது எல்லா விஷயங்களையும் ரகசியமாக வைத்துக் கொள்வது எப்போதுமே ஆபத்தானது. ஓர் ஒப்பீட்டுக்காகச் சொல்ல வேண்டுமெனில், கருணாநிதியின் தனிப்பட்ட வாழ்க்கை மிக வெளிப்படையானது. அவரது குடும்பச் சண்டைகளும் வெளிப்படையானவை. அவரது நண்பர் யார், பகைவர் யார், துரோகி யார் போன்றவை ஏறக்குறைய இந்தச் சமூகம் அறிந்ததே. அவரது உடல் ஆரோக்கியத்திலும் ரகசியங்கள் இல்லை. ஆனால், ஜெயலலிதாவின் வாழ்க்கை மர்மமும் ரகசியங்களும் நிறைந்தவை. முதல்வரான பிறகு, அவர் தன்னை ரொம்பவே முடக்கிக் கொண்டார். வீட்டில் அவர் எப்படி இருப்பார்; அவருடைய அன்பிற்குரியவர்கள் யார்? அவரது பொழுதுபோக்குகள் என்ன போன்ற கேள்விகளுக்கு விடை இல்லை. போயஸ் கார்டன் நட்சத்திர வசதி கொண்ட சொகுசு சிறையாக இருந்திருக்குமோ என்றுகூட இப்போது பேசப்படுகிறது அந்த அளவு ரகசியங்கள். மர்மமாக வாழ்வோரின் மரணமும் பெரும்பாலும் மர்மமாகவே முடியும். ஜெயலலிதாவுக்கு அதுதான் நடந்திருக்கிறது.

பொதுவாக, மர்மங்கள் மக்களைப் பெரிதும் ஈர்க்கின்றன. அதனால்தான் ஊடகங்கள் மர்மம் நிறைந்ததாகச் செய்திகளைக் கட்டமைக்கின்றன. செப்டம்பர் 22-ம் தேதி தொடங்கி டிசம்பர் 5-ம் தேதிவரையிலான கண்ணாமூச்சியில் எல்லோருக்குள்ளும் ஒருவித ஆர்வக் கிளர்ச்சி தோன்றியிருந்தது. முடிச்சுகளை அவிழ்க்கும் சுவராஸ்யத்தை தன்னளவில் தேடிக் கொண்டிருந்தவர்கள், மரணம் அறிவிக்கப்பட்டதும் மர்மத்தை அருகே பார்க்கும் ஆர்வத்தோடு கிளம்பி வந்தனர். கேமராக்கள் இருந்த திசை தவிர்த்து எல்லா பக்கங்களும் மர்மத்தைப் பற்றித்தான் பேசிருந்தது. ஆனால், யாரும் கேள்வி கேட்கவில்லை. இதுதான் இன்றைய சமூக எதார்த்தம். அடுத்தடுத்த பரபரப்புகளில் எல்லாவற்றையும் செரித்து, 'அடுத்து என்ன' என்று கேட்கும் காலச் சூழலில் ஜெயலலிதாவும் கடந்து போய்விடுவார்.

ஜெயலலிதா ரசிக்கப்பட்டவர். அவரது தனிப்பட்ட திறமைகளுக்காக, முகமதிப்பீட்டுக்காக, எதிர்த்து நிற்கும் பண்புகளுக்காக! ஆனால், மக்களால் நேசிக்கப்பட்டவரா, மதிக்கப்பட்டவரா என்றால், அந்தக் கேள்விக்கு நேர்மையான பதிலைத் தமிழகம் கண்டறிய வேண்டும். இரண்டுக்குமே கூட்டம் திரளும், ஆனால், ரசிப்புக்கும் நேசிப்புக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. ஜெயலலிதாவின் இழப்புக்காக வருந்திய ஒட்டுமொத்த சமூகமும் அவரை ஏதோவொரு வகையில் அவரை ரசிக்கிறது என்பது நிச்சயம். ஆனால், நேசிக்கிறதா? 'அதிகாரத்தால் நான், அதிகாரத்திற்காகவே நான்' என வாழ்ந்து முடித்திருக்கும் ஜெயலலிதாவின் அரசியலை நேர்மையாக விவாதிக்க வேண்டியது தமிழகத்தின் கடமை. குற்றமும் குறைகளும் நிறைந்த ஒருவரை, அப்பழுக்கற்றவராகப் புனிதப்படுத்துவது சமூகத்தின் ஆரோக்கியத்துக்கும் எதிர்காலத்துக்கும் செய்யும் துரோகம். ஜெயலலிதாவின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட அரசியல் பெருவாழ்க்கையே பேசப்பட வேண்டும். தமிழக அரசியலை தூய்மைப்படுத்த அதுவே பயனளிக்கும்.

உண்மைகள் வலிக்கும் தான் என்றாலும் வரலாறு திரிக்கப்படக்கூடாது. அதுவும் சமகாலத்திலேயே!

LycaFly

CALL 0207 132 32 32

lines open 24x7

The Market Leader for COLOMBO

FURTHER REDUCTIONS

ON FLIGHTS

HURRY, BOOK NOW!

ETIHAD	Emirates	Oman Air	SriLankan	KUWAIT AIRWAYS	QATAR AIRWAYS
£380	£378	£348	£464	£421	£388
46 kg	40 kg	32 kg	40 kg	40 kg	40 kg

All fares are from and include taxes.

WORLDWIDE FLIGHT DEALS | INCL. TAXES

Chennai	fr £316	Melbourne	fr £494
Trichy	fr £493	Los Angeles	fr £327
Kochi	fr £338	Toronto	fr £364
Mumbai	fr £340	Bangkok	fr £345
Delhi	fr £333	Singapore	fr £309
Goa	fr £355	Kuala Lumpur	fr £345

AMAZING HOLIDAY DEALS

★★★
Dubai | CityMax Bur
3 nights | B&B | incl. Flights
fr **£283** pp

★★★★★
Dubai | Atlantis the Palm
3 nights | HB | incl. Flights
fr **£559** pp

★★★
Maldives | Thoddoo Ocean
7 nights | B&B | incl. Flights
fr **£788** pp

★★★★★
South America Cruise
7 nights | AI | excl. Flights
fr **£349** pp

Plus **£20 FREE LYCAMOBILE**
CREDIT WHEN YOU BOOK WITH US
*T&Cs Apply

200 AIRLINES & 400,000 HOTELS, **PRICE MATCH GUARANTEED!**

WEMBLEY
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

EAST HAM
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

CANARY WHARF
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

All fares shown above are subject to availability. The Free Lycamobile top-up offer is offered to each fully paid adult return ticket and will not be offered to child/infant and one way tickets. The Lycamobile top-up offer is not valid for selected airlines. The Lycamobile top-up offer is not exchangeable, transferable or redeemable for cash. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.

IATA


Lycamobile
Call the world for less
4G LTE
ULTRA-LOW INTERNATIONAL RATES
CALL
SRI LANKA
9p /min
Landline & Mobile
To activate: Text SAVE to 2525
Website of the year 2015
lycamobile.co.uk
020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO
Sainsbury's
ASDA
WHSmith
M Coll's